கோகுலம்

GOKULAM

மார்ச் '90 விலை ரூ. 3/–




உங்கள் நம்பகமான ஃபாரெக்ஸ்
இப்போது, சுவையிலே சிகரம்!
உங்கள் குழந்தைக்கு நான்கு மாதம் ஆகும்போது அவனுக்கு புதிய சுவைமிக்க ஃபாரெக்ஸ் துவக்குங்கள். 3 முதல் 4 தேக்கரண்டி வெது வெதுப்பான நீரில் ஒரு தேக்கரண்டி ஃபாரெக்ஸ் கலந்து கொடுங்கள். ஃபாரெக்ஸ் சுவை மிக்கது. முன்னைவிட அதிக ஊட்டச்சத்து மிக்கது.
Delicious
Farex®
CEREAL WITH MILK
• சுவை மிக்கது
• ஊட்டச்சத்து மிக்கது
ஃபாரெக்ஸ்® – சுவையுடன் வளரும் வழி.
GX/66/203 TML



கோகுலம்

1990 மார்ச் மாத இதழ்
மலர் 8 ●● இதழ் 2

அன்புத் தம்பி, தங்கைகளே!

நலம்தானே? திங்களுக்குத் திங்கள் பொங்கிப் பெருகும் உங்கள் அன்பிலும் ஆதரவிலும் நான் நெஞ்சம் நெகிழ்ந்து போகிறேன்.

உங்களுடனெல்லாம் என்னை உறவாட வைத்து, அமரராகி விட்ட 'முத்தண்ணன் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா இதோ என் அறையில் புன்னகைத்தவாறு எனக்கு வாழ்த்து வழங்கிக் கொண்டிருக்கிறார். இந்த மார்ச் திங்களுடன் அன்னார் மறைந்து ஓராண்டு ஆகிறதே! காலம்தான் எத்தனை வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது!

இந்த மாதம் 16' ம் நாள் அண்ணன் அழ. வள்ளியப்பா அவர்களின் நினைவு நாள். அவருக்கு நெஞ்சார அஞ்சலி செலுத்தும் அதே நேரத்தில், அவர் விட்டுச் சென்ற பணிகளை அவருக்கு மனநிறைவு ஏற்படும் வண்ணம் தொடர்ந்து செய்யவும் அவரது ஆசியை யாசிக்கிறேன். அவர் அதே புன்னகையுடன் வாழ்த்தி, என் முதுகில் தட்டிக் கொடுப்பதை உணர்கிறேன்.

இதோ இந்த இதழிலேயே கோகுலத்தில் எத்தனை பகுதிகள் இடம் பெற்றிருக்கின்றன என்று பட்டியலிட்டுக் காட்டியிருக்கிறேன். இன்னொரு பிரபல சிறுவர் இதழில் துணையாசிரியராய் இருந்த ரேவதி, இந்த இதழிலிருந்து எனக்குத் துணை நிற்கிறார். அவரும் சேர்ந்து உங்களுக்கு இன்னும் புதுப் புதுப் பகுதிகளைப் படைத்தளித்திருக்கிறார்.

உங்களுக்காக இதழுக்கொரு போட்டி இடம் பெற இருக்கிறது. உங்கள் கோகுலத்துக்குப் புதுப் புது அங்கத்தினர்களைக் கூட்டுச் சேர்த்துக் கோகுலத்தைக் கேட்டு (விலை கொடுத்து) வாங்கிப் படிக்கச் செய்து கொண்டாடுங்கள்.

அப்புறம் என்ன? உங்கள் காட்டில் மழைதானே!

அன்பு அண்ணன்,

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் — பாரதியார்.



இந்த இதழில்

உண்மை நிகழ்ச்சி:

பெயர்

"என்ன ஆச்சு?", என்று கேட்டுக் கொண்டே வந்தாள் பாட்டி.

''ஒண்ணுமில்லே, குழந்தை அழுகிறது,'' என்றாள் குழந்தையின் தாய் உமையம்மை.

உடனே பாட்டி, ''கிரைப் வாட்டர் கொடு,'' என்றாள்.

உமையாளுக்கு ஒரு சந்தேகம். ''அதைக் கொடுக்கலாமா பாட்டி? குழந்தை பிறந்து பத்து நாள்தானே ஆகிறது,'' என்றாள்.

ஆம், அக் குழந்தை பிறந்து பத்து நாள்தான் ஆகியிருந்தது. 1922 நவம்பர் ஏழு. அதுதான் குழந்தையின் பிறந்த நாள். அதிலிருந்து பத்தாம் நாள். குழந்தைக்குக் காப்பிட்டு, அதைத் தொட்டிலில் போட வேண்டும்.

அதற்கு ஒரு சிறிய விழா ஏற்பாடாகியிருந்தது. ஊரிலிருந்து விருந்தினர் சிலர் வந்திருந்தனர். அக்கம் பக்கத்திலிருந்தும் சில பெண்மணிகள் அழைக்கப்பட்டிருந்தனர். மாலையில் விழா.

அன்று காலையிலிருந்தே குழந்தை அழுது கொண்டிருந்தது.

பாட்டி சொன்னாள். ''நான் சொல்கிறபடி செய். ஒரு இங்க் ஃபில்லர் கொண்டு வா. அதால் எடுத்து இரண்டொரு சொட்டு கிரைப் வாட்டரை வாயில் விட்டுப் பார்.''

ஒரு பெண்மணி எழுந்து, ஃபில்லர் எடுத்து வர ஓடினாள்.

''சரி, குழந்தை அழத் தொடங்குவதற்கு முன்பு, இங்கு என்ன நடந்தது?'' என்றாள் பாட்டி.

''ஒ, அதுவா...? நானும் அவரும்....''

பாட்டி குறுக்கிட்டாள். ''அவரும் என்றால்? குழந்தையின் தந்தை அழகப்பர்தானே?''

''ஆமாம். நானும் அவரும் சேர்ந்து, குழந்தைக்கு என்ன பெயர் வைக்க

மருந்து கதை



லாம்னு பேசிக்கிட்டிருந்தோம். அப்போ என் மடியில கிடந்த குழந்தை திடீர்னு வீரிட்டு அழத் தொடங்கியது. உடனே, நான் பால் கொடுத்துப் பார்த்தேன். குடிக்கல்லே. மறுத்து அழுதது. கையையும் காலையும் உதைத்துக் கொண்டு அலறியது." என்றாள் உமை.

அதற்குள் அந்தப் பெண்மணி இங்க் ஃபில்லருடன் வந்தாள். அதில் கிரைப் வாட்டரை உறிஞ்சி நிரப்பிக் கொண்டு, குழந்தையின் வாயில் இரண்டு சொட்டு விட்டனர்.

உடனே, நாக்கைக் கொஞ்ச நேரம் சப்புக் கொட்டிக் கொண்ட குழந்தை, மீண்டும் அழத் தொடங்கி விட்டது. எல்லோரும் மாறி மாறித் தூக்கிப் பார்த்தனர். ஊகும்... அத்தனை முயற்சியும் வீண்.

காலை நேரம் வந்தது. நடுப் பகல் வந்தது. அப்போதும் குழந்தை தன் அழுகையை நிறுத்தவில்லை. பிறகு மெல்ல மெல்ல மாலை வந்தது. ஒரு பயனும் இல்லை. அழுகை அதிகமாயிற்றே தவிரக் குறையவில்லை.

'இப்படி ஓயாமல் கதறினால், அதன் தொண்டை வறண்டு போகுமே... அதனால் ஏதாவது ஆபத்து வந்து விடுமோ...?' என்று அச்சம் அடைந்தாள் தாய் உமை.

அதற்குள் ஊர்ப் பெண்மணிகள் எல்லோரும் காப்புப் பூட்டும் விழாவுக்காக, ஒவ்வொருவராக வரத் தொடங்கி விட்டனர்.

'மகிழ்ச்சியாகச் சிரித்து விளையாடும் குழந்தைக்குக் காப்பிட்டு, மேலும் அதை மகிழ்விக்க முடியாமல், அது இப்படி அழுதுகொண்டேயிருக்கிறதே.' என்று தாய் உமை தவித்தாள்.

அழும் குழந்தைக்குப் பொன் காப்பும் வெள்ளிக் காப்பும் இட்டு, அதைத் தொட்டிலில் இட்டனர்.

அடுத்ததாகப் பெயர் சூட்டும் நிகழ்ச்சி நடத்தப்பட வேண்டும். குழந்தை மேலும் உரக்க வீறிட்டு அழத் தொடங்கியது.

அந்தச் சமயத்தில்தான் ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

விழாவுக்கு வந்திருந்தவர்களில் ஒரு பெண்மணி. சற்று வயதானவள். அழகம்மை என்று பெயர். எல்லோரும் அழகு என்று கூப்பிடுவார்கள். குழந்தையின் தாய் உமைக்கு நெருங்கிய சினேகிதி. மிகவும் வேண்டியவள். எனவே அழைக்கப்பட்டிருந்தாள்.

அழகு எங்கு சென்றாலும் சரி, உணர்ச்சிவசப்படும் போது, அவள் மீது சாமி வந்து விடும். 'ஆகா... ஓகோ...' என்று உரக்கக் கூவியவாறு ஆடுவாள். எல்லோரும் கட்டிப் பிடிப்பார்கள். கட்டுப்படுத்த முடியாது. கீழே விழுந்து புரளவும் செய்வாள். அத்துடன் குறியும் சொல்வாள். எத்தனை அடக்க முயன்றாலும் சரி, சொல்லவேண்டியகுறியைச்சொல்லி விட்டுத்தான், அவள் மீது வந்த சாமி மலையேறும்.

அன்றும் அப்படித்தான். குழந்தைக்குப் பெயர் சூட்டும் சமயம் வந்தது. உடனே, அழகுக்குச் சாமி வந்து விட்டது. திடீரென்று ஆர்த்தெழுந்து, 'ஆகா... ஓகோ...' என்ற ஆர்ப்பாட்டம்.

"டேய், அவசரப்படாதே. நிறுத்து.

ஜானகி மணாளன்

நான் சொல்றதைக் கேள்,'' என்று உரக்கக் கூச்சலிட்டாள்.

இரண்டுமூன்றுபெண்கள்சென்று, அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டனர். அழகு முண்டியடித்துக் கொண்டு, குழந்தையின் தாய் உமைக்கு அருகில் வந்தாள்.

உடனே உமையாளிடம் ஒரு திடீர் யோசனை.

'குழந்தையோ அழுகையை நிறுத்தவில்லை. கையில் பிடிபடாமல் கதறுகிறது. காலை முதல், சொட்டுப் பால் கூட வயிற்றில் இறங்கவில்லை. இப்போது, நல்லவேளை, அழகு மீது சாமி வந்துள்ளது. சாமியிடமே குழந்தையின் அழுகையை நிறுத்த ஒரு வழி காட்டுமாறு ஏன் கேட்டுப் பிரார்த்திக்கக் கூடாது?' என்று தோன்றியது.

அதற்குள் ஒருவர் சாமியிடம், ''சாமி, நீ யார், சொல்லு?'' என்று வினவினார்.

உடனே சாமி, ''என்னையா யார்ன்னு கேட்குறே? என்னைத் தெரியல்லே?'' என்றது.

''தெரியல்லியே சாமி.''

''சொல்றேன். நான் யார்ன்னு சொல்றேன். அதுக்கு முந்தி, நீ ஒண்ணு செய்யணுமே, செய்வியா?'' என்றது சாமி.

''சொல்லு சாமி, செய்யிறேன்,'' என்றார் குழந்தையின் தந்தை.

அந்தச் சமயம் பார்த்து உமையாள் தான் நினைத்ததைச் சொல்லி விட்டாள். ''சாமி, காலைலேயிருந்து குழந்தை அழுதுகிட்டே இருக்குது. நிறுத்தவே இல்லை. பாலும் குடிக்கல்லே. நீங்கதான் சாமி, அதனோட அழுகையை நிறுத்த ஒரு வழி காட்டணும்.''

உடனே சாமி, ''அதுக்குத்தான் இப்போ நான் ஒரு வழி காட்டப் போறேன். அதை எனக்குச் செய்து தருவியா?'' என்றது மீண்டும்.

''உனக்கு என்ன வேணும்? சொல்லு, தர்றோம்.''

''எனக்கு ஒண்ணும் வேண்டாம். நான் சொல்றபடி செய், அது போதும்,'' என்றது சாமி.

''செய்கிறோம்... செய்கிறோம்,'' என்றனர் அனைவரும் கோரஸாக.

மீண்டும் அழகு பெரிதாக ஓர் ஆட்டம் போட்டு விட்டுச் சொன்னாள். ''உன் குழந்தை அழறதை நிறுத்த ஒரு வழி உண்டு. சொல்கிறேன். அதன்படி செய்கிறோம்ன்னு சத்தியம் செய்வியா?''

''சத்தியமா அதன்படி செய்கிறோம் சாமி. சட்டுனு சொல்லு, என்ன செய்யணும்?'' என்றார். குழந்தையின் தந்தை அழகப்பர்.

தாய் உமையும் ஒத்துப் பாடினாள்.

''ம்... சொல்றேன். இந்தக் குழந்தைக்கு என்னோட பெயரை வைப்பியா?'' என்றது சாமி.

பெற்றோர் யோசிக்கவே இல்லை. சட்டென்று சொன்னார்கள். ''வைக்கிறோம், வைக்கிறோம்.''

''ம்... வை. வை,'' என்றது சாமி.

உடனே தந்தைக்கு ஓர் ஐயம். ''வைக்கிறோம். ஆனால், இன்னொரு விஷயம் தெரிய வேண்டுமே...''

அதற்குச் சாமி, ''என்ன அது? உடனே கேள்,'' என்றது.

தந்தை தயங்கியவாறு கேட்டார். ''சாமி... யாருன்னு தெரியல்லியே.''



அடுத்த கணம் சாமியின் வேகம் அதிகமாகி விட்டது. ''டேய், என்னையா யாருன்னு கேட்கிறே? என்னைத் தெரியல்லியா? நான்தான் உன் வீட்டுக் கன்னித் தெய்வம்...''

தந்தைக்கு ஒன்றும் புரியவில்லை. ''என்ன, கன்னித் தெய்வமா? அப்படியென்றால்?''

சாமி குறுக்கிட்டது. ''இன்னும் புரியவில்லையா? நான்தான்டா குளத்தில் விழுந்து கன்னித் தெய்வமானவள். புரிஞ்சுக்கோ,'' என்ற அழகு, மேலும் ஓர் ஆட்டம் போட்டு விட்டு, ''ம்... நேரமாகுது. நான் மலையேறணும். இந்தா, பிடி... இதைக் குழந்தைக்குப் பூசு. எல்லாம் சரியாகப் போயிடும்,'' என்றவாறு, விபூதியை எடுத்தி நீட்டினாள்.

குழந்தையின் பெற்றோர், மிகுந்த பய பக்தியோடு அதைப் பெற்றுக் கொண்டனர்.

அதற்குள் ஒருவர் தட்டில் சூடத்தைக் கொளுத்தி வைத்துத் தீப ஆராதனை காட்டினார். சாமி மலையேறி விட்டது.

உமையாள் விபூதியைக் குழந்தையின் நெற்றியில் பூசினாள். என்ன ஆச்சர்யம்! அடுத்த கணம், அதன் அழுகைபோன இடம்தெரியவில்லை. அமைதியாகி விட்டது. எல்லாரிடமும் மகிழ்ச்சி ஆரவாரம்.

உடனே ஒரு பெண், ''குழந்தைக்குப் பெயர் சூட்ட வேண்டாமா? நேரம் ஆகிறதே,'' என்று நினைவூட்டினாள்.

''சாமி சொன்ன பெயர்தானே? அதையே வைத்துவிடுவோம்,'' என்றாள் உமை.


''சாமி சொன்ன பெயரா? அது எங்கே பெயரைச் சொன்னது? அதற்குள்ளதான் அது மலையேறிடுச்சே!" என்றாள் ஒரு பெண்.

''ஆமாம். அப்பஎன்னா இப்ப நாம் என்ன செய்கிறது? இது ஒரு புதுச் சிக்கலால்லே இருக்குது!'' என்றாள் உமை.

அதற்குள் அழகப்பர், ''ஒரு சிக்கலும் இல்லை. அதற்கும்தான் சாமி, வழி காட்டிட்டுப் போயிருக்குதே!'' என்றார்.

''வழியா! என்ன அது?''

''குளத்துலவிழுந்துகன்னித்தெய்வ





மானவள்ன்னு சொல்லலியா?'' என்றார்.

''அட, ஆமாம். ஆனால் அது யார், அதன் பெயர் என்ன என்பதை எல்லாம் நாம எப்படித் தெரிஞ்சுக்கிறது?'' இப்படித் திகைத்தாள் ஒரு பெண்.

''மனம் இருந்தால் மார்க்கம் உண்டுன்னுவாங்க. முயன்றால் எல்லாம் முடியும். இந்த ஊர்ல இருக்கிற வயசானவங்க யாரையாவது கேட்டுத் தெரிந்து விட்டால் போச்சு'' என்றார் தந்தை.

அதற்குள் அங்கு வந்தாள் பாட்டி. ''ஏண்டா, அழகப்பா, நான் ஒருத்தி இங்கே குத்துக்கல்லாட்டமா இருக்கிறப்போ, நீ போய் வேற வயசானவங்களா யாரைத் தேடப் போகிறே?'' என்றாள்.

''அப்பமன்னா... அந்தக் கன்னித் தெய்வத்தின் பெயர் உனக்குத் தெரியுமா பாட்டி?'' என்றனர் சில இளம் பெண்கள்.

''நல்லாத் தெரியும். அது ஒரு பெரிய்.....ய கதை,'' என்று பெருமூச்சு விட்டாள் பாட்டி.

அந்தப் பாட்டி சொன்ன கதையைச் சுருக்கமாகச் சொல்கிறேன். விவரம் இதுதான்:

கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி அது.

பாட்டி சொன்னாள். ''அழகப்பா, அப்போ நீ சின்னப் பையன். உனக்கு ஒரு சகோதரி இருந்தாள். பத்து வயது. ஒரு பொங்கலுக்கு மறுநாள். மாட்டுப் பொங்கல் தினம். மண் குடத்தை எடுத்துக்கிட்டு, குளத்துக்குத் தண்ணீர் கொண்டு வரப் போனாள்....''

அழகப்பர் குறுக்கிட்டார். ''ஆமாம் ஆமாம். நினைவுக்கு வருது. குளத்து நீர்ல அவ மூழ்கி இறந்து போயிட்டாள்ன்னு, நீயே முன்பு எப்பவோ சொல்லியிருக்கிறாயே?''

''அப்பமன்னா... நம்ப குழந்தையின் அத்தையேதான் அவள். இல்லியா?'' என்றாள் உமை.

''ஆமாம். அந்தக் கன்னித் தெய்வத்தின் பெயரையே, நம் குழந்தைக்கு வைத்து விடுவோம்,'' என்றார் அழகப்பர்.

''அது என்ன பெயர்? என்ன பெயர்?'' என்று ஆவல் பொங்கக் கேட்டனர் ஊர்ப் பெண்மணிகள்.

அதற்குள் உமையாள், ''சரி, அது பெண்ணின் பெயராக அல்லவா இருக்கும்? அதைப் போய் எப்படி நம்ப ஆண் பிள்ளைக்கு வைக்கிறது?'' என்றாள்.

இடைமறித்தார் அழகப்பர். ''ஏன் முடியாது?'' 'அம்மா' என்பதை 'அப்பா' என்று மாற்றி விட்டால் போயிற்று,'' என்றார்.

உடனே பாட்டி, ''ஆமாம் ஆமாம். 'வள்ளியம்மா' என்பதை, 'வள்ளியப்பா' என்று மாற்றிப் பெயர் சூட்டி விடுவோம்,'' என்றாள்.

அவசரமாகக் குறுக்கிட்டார் குழந்தையின் தந்தை. ''அப்படிச் சொல்லக் கூடாது. 'அழகப்பர் மகன் வள்ளியப்பா''' என்றார் மகிழ்ச்சியுடன்.

உடனே பாட்டி, தன் பொக்கை வாய் மலரச் சொன்னாள். ''ஆமாம், இவன் பெயர் 'அழ. வள்ளியப்பா'''

சுற்றியிருந்தோர் கை தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

ஆம், அந்தக் குழந்தைதான், நமது குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா!

இன்று அவர் இல்லை. மறைந்து ஓராண்டாகி விட்டது. இந்த மார்ச் 16 ஆம் தேதிதான் அவரது நினைவு நாள். அந்த நாளில், நாம் எல்லோரும் அவரை நினைத்துக் கொண்டு, இக் கதையை அவருக்குக் கண்ணீர் அஞ்சலி ஆக்குவோம்.

அண்ணாவுக்கு அஞ்சலி



ஒளி விளக்கு

சிந்தை மகிழும் பாடல்கள்
சிறப்பாய் எழுதித் தந்தவராம்
விந்தை மனிதர் வள்ளியப்பா
விளையும் பயிரை வளர்த்தவ
ராம்!

குழந்தை உள்ளம் மலர்ந்திடவே
'மலரும் உள்ளம்' தந்தவராம்
அழகாய்க் கதையும் கட்டுரையும்
அள்ளித் தந்த வள்ளலவர்!

அன்பும் பண்பும் மிக்கவராம்
அரிய செயல்கள் செய்தவராம்
என்றும் 'குழந்தை இலக்கியமே'
என்று பேசி வந்தவராம்!

'பாட்டிலே காந்தி' தந்தவராம்
பாரதம் பரிசைப் பெற்றவராம்
நாட்டிலே 'நல்ல கவிஞ' ரென்றே
நாளும் நற்பெயர் எடுத்தவராம்!

புன்னகை தவழும் முகத்தினராம்
புதுப்புதுக் கருத்து சொன்ன
வராம்

தன்னலம் இல்லாப் பணியாலே
தமிழர் நெஞ்சில் நிலைத்தவராம்!

— பி. வி. கிரி, சென்னை — 102.



நாடு நம்மைப் போற்றட்டும்...

'ஏடு தூக்கிப் பள்ளி யில்
இன்று பயிலும் சிறுவ ரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்...

என்று சொல்லிச் சொல்லியே
இளைய தலை முறை யினை
என்றும் ஊக்கி வந்தவர்
இனிய குழந்தைக் கவிஞராம்!

மனித நேயம் என்பதன்
உயிர் வடிவாய்த் திகழ்ந்தவர்;
இனிமை எளிமை என்பதன்
இலக்க ணமாய் வாழ்ந்தவர்!

அறுபத் தேழு வயதுக்குள்
அறுபத் தேழு நூல்களை
சிறு வருக்குத் தந்ததால்
சிகரச் சிறப்பைப் பெற்றவர்!

குழந்தை கட்கு மட்டுமே
இலக்கி யத்தைப் படைப்பதை
குறிக் கோளாகக் கொண்டு தம்
இறுதி வரை வாழ்ந்தவர்!

வானிருந்தும் நம்மை யே
வாழ்த்தி நிற்கும் கவிஞரை
நாளும் நாமும் போற்றினால்
நாடு நம்மைப் போற்றுமே!

— ரா. பொன்ராசன்



பள்ளிச் சிறுமி

நகரெங்கும் நர்சரி பள்ளிகளுக்கு இணையாக நாள் தோறும் தோன்றிக் கொண்டிருக்கும் நாட்டியப் பள்ளிகளும் நாட்டியச் சீருடை அணிந்த சிறுமிகளும் நம் கவனத்தைக் கவரத் தவறுவதில்லை. நாட்டியம் பற்றிப் பள்ளிச் சிறுமிகளிடையே சர்ச்சை எழுவதும் உண்டு. பள்ளிச் சிறுமிகள் நாட்டியம் பயில்வதால் — நல்லதோ கெட்டதோ — பாதிப்புக்கள் யாவை? சிறுமியர் இருவர், மங்கையர் இருவர் ஒரு சிறு அலசல் நடத்துகிறார்கள்:



பவித்ரா கண்ணன்



வி. பார்கவி

1. பவித்ரா கண்ணன் — மாணவி, ரோசரி மெட்ரிகுலேஷன் பள்ளி)

என்னுடைய முதலாம் வகுப்பிலிருந்து டி.வியில் ஒளிபரப்பாகும் 'வளரும் கலைஞர்' மற்றும் 'நாட்டிய அரங்கம்' நிகழ்ச்சிகளைத் தவறாமல் பார்த்து வருகிறேன். அதில் ஆடுகின்ற குழந்தைகளின் அழகான பரத நாட்டியம் என்னையும் நாட்டியம் கற்கும் ஆர்வத்தைத் தூண்டியது. நான் ரொம்பவும் ஆசைப்பட்டதால் அப்பா அம்மாவும் நான் பரத நாட்டியம் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தனர். படிப்புடன் இதுபோன்ற சில கலைகளைத் தெரிந்து கொள்வது மனதுக்கு ஒரு மாறுதலைக் கொடுப்பதோடு பாடங்களை ஆர்வத்தோடு படிக்கத் தூண்டுவதாய் இருக்கிறது. வாரத்தில் இரண்டே நாள்தான் நாட்டிய வகுப்பு உண்டு. அதுவும் சனி, ஞாயிற்றுகிழமைகளில்தான். எனவே என்னோட படிப்பு நாட்டியத்தால் பாதிக்கப்படலை. எப்போதும் போல வகுப்பில் நான் இரண்டாவது அல்லது மூன்றாவது ரேங்க் எடுக்கிறேன்.

ஒரு மணி நேர டான்ஸ் பிராக்டிஸுக்கு அப்புறம் உடம்பு நல்ல ரிலாக்ஸாகி ரொம்பவும் புத்துணர்ச்சியுடன் இருக்கு.

வி. பார்கவி — (மாணவி, இந்து உயர்நிலைப் பள்ளி, இந்திரா நகர்)

பிரபல நாட்டியக் கலைஞர் மஞ்சு பார்கவி அவர்களின் பெயரில் பின் பாதி என்னோட பெயர் என்றாலும், எனக்கும் பரத நாட்டியத்துக்கும் சம்பந்தமேயில்லை! எனக்கு அதிலே கொஞ்சமும் ஆர்வம் இல்லை. நான் நிறையப் புத்தகங்களும் பத்திரிகைகளும் படிப்பேன். ஒரு மிகச் சிறந்த பத்திரிக்கையாளராக வரணும்கிறது தான் என் ஆசை. எனக்கு விளையாட்டிலேயும் ரொம்ப ஈடுபாடு உண்டு. நிறையப் பரிசுகளும் வாங்கியிருக்கிறேன். என் சிநேகிதிகள் சிலர் பரத நாட்டியம் கற்றுக் கொள்கிறார்கள். எங்கள் பள்ளி விழாக்களில் அவர்கள் ஆடுவதைப் பார்க்க ரொம்ப நன்றாக இருக்கும்.

எல்லோராலும் ரொம்ப நாள் நாட்டியத்தைத் தொடர முடிவதில்லை. பரதம் கற்றுக் கொண்டு பாதியிலே விட்டு விட்ட சிலபேர் அப்புறம் ரொம்பவும் குண்டாகி விடுகிறார்கள்.

பப்ளிக் எக்ஸாம் என்று வரும் போது எவ்வளவோ படிக்க வேண்டி உள்ளது. அப்போ டான்ஸ் ஆடிக் கொண்டு இருந்தால் அவ்வளவுதான்! நாட்டியம் கற்றுக் கொள்வது கஷ்டமான காரியம். ரொம்பவும் செலவுகூட ஆகும்.

பெற்றோருக்கு நிறையச் செலவு வைக்காமல் மற்றவர்களின் வற்புறுத்தலுக்காகவும் இல்லாமல் தனக்கே உள்ள ஆர்வத்தினால் எந்தக் கலையைக் கற்றுக் கொண்டாலும் சிறந்து விளங்கலாமே! இல்லையா?

வண்ணப்படம், பேட்டி:
ராஜா பொன்சிங்.

பரதம் பயிலலாமா?

திருமதி அலமேலு சீனிவாசன் — (ஆசிரியை, இந்து உயர்நிலைப் பள்ளி, இந்திரா நகர்)

மேல்நாட்டவர்கள் இந்தியாவை அடையாளம் கண்டு பாராட்டுகிற ஒரு சிறந்த கலை பரத நாட்டியக் கலை. என் வகுப்பில் கூடச் சில குழந்தைகள் பரத நாட்டியம் கற்றுக் கொள்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை பரதம் ஒரு கலை என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அது பெண் குழந்தைகளுக்கு மிகச் சிறந்த உடற்பயிற்சி என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் எனக்குத் தெரிந்த ரொம்பக் குழந்தைகள் ஏதோ ஒரு பொழுது போக்காகத்தான் இதைக் கற்றுக் கொண்டு மறந்து போகிறார்கள். பல குடும்பங்களில் குழந்தை பெரியவளானப்புறம் டான்ஸ் ஆடுவதையோ, இல்லை அரங்கேற்றம் செய்வதையோ அவ்வளவாக உற்சாகப் படுத்துவது இல்லை.

ஏகப்பட்ட பணம், நேரம், அதிகமான உழைப்பு இவ்வளவையும் நினைக்கும் போது எல்லாப் பெற்றோராலும் தங்கள் குழந்தைக்குப் பரத நாட்டியம் பயில வைக்க



• திருமதி அலமேலு சீனிவாசன்



• திருமதி புனிதா

முடியுமா என்றால் அது சாத்தியமில்லை தான். மாறாக, கலைத்துறையில் ஆர்வம் உள்ள குழந்தையை அதன் பெற்றோர் சங்கீதம், ஓவியம், தையல், இசைக்கருவிகள் வாசித்தல் போன்ற துறைகளில் ஈடுபடுத்தினால் அந்தக் கலைகள் காலம் பூராவும் அவர்களுக்குப் பயப்படும்.

நாட்டியத்துல ஆர்வம் உள்ள குழந்தைகள் பாடங்களைக் கோட்டை விட்டு விடுவார்கள் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. படிப்பிலே ஆர்வம் உள்ள முக்கால் வாசிக் குழந்தைகள் தான் டான்ஸிலும் ஆர்வம் காட்டுகிறார்கள்.

திருமதி புனிதா — (குடும்பத் தலைவி) — பகுதி நேரப் பத்திரிகையாளர்.)


பரதக் கலை நம் பாரத நாட்டின் பழம் பெரும் கலை என்பதிலும், நம் திருநாட்டின் நாட்டியக் கலையின் தொன்மைக்கும், தெய்வீகதன்மைக்கும் ஒரு மிகச் சிறந்த எடுத்துக் காட்டு என்பதிலும் இரண்டு பட்ட கருத்துக்கள் இருக்கவே முடியாது. இருப்பினும் தொழில் முறை நாட்டியக் கலைஞராக வர வேண்டும் என்ற எண்ணம் இல்லாத எந்தக் குழந்தையும் இந்தக் கலையைக் கற்க வேண்டும் என்பதில் எனக்கு எள்ளளவும் உடன்பாடு இல்லை. அதுவும், என்னைப் போன்ற நடுத்தர வர்க்கப் பெண்ணால் தன் குழந்தைகளை, 'ஏதோ எங்க வீட்டுக்காரரும் கச்சேரிக்குப் போகிறார்' என்ற பாணியில் நாட்டியம் கற்றுக் கொள்ள அனுப்பி, விரைந்து ஓடிக் கொண்டிருக்கும் காலச் சக்கரத்தில் மிக அரிதாய்க் கிடைக்கும் நேரத்தையும் பணத்தையும் விரயம் செய்ய எப்படி முடியும்?


இன்னும் வருங்காலத்தில் தன்னை ஒரு சிறப்பான வாழ்க்கைக்குத் தகுதி உள்ளவளாக ஆக்க ஒரு குழந்தை எவ்வளவோ பாடுபட வேண்டியுள்ளது! அப்படி இருக்க, குழந்தைகளுக்காக நாம் எடுத்துக் கொள்ளும் எல்லா முயற்சிகளும், ஏற்பாடுகளும் அந்தக் குழந்தைகளின் பிற்கால வாழ்க்கைக்கு எந்த அளவுக்கு உதவும் என்பதில் மிகக் கவனமாய் இல்லாவிடில் குழந்தைகளின் இருண்ட எதிர் காலத்துக்கு நாமே காரணமாகி விடுவோம் அல்லவா?


அட்டையில் தோற்றம்:
கமலா சுப்பிரமணியம்.


சிங்கராஜா


தஞ்சை மாலா.



எல்லா வளமும் நிறைந்த ஓர் வனப்பு மிக்க காடு.
சிங்கராஜாவின் நேர்மையான ஆட்சியின் கீழ்
காட்டிலுள்ள விலங்குகளும், பறவைகளும் மிக்க
மகிழ்ச்சியுடன் வாழ்ந்துவந்தன. சிங்கராஜாவும்
இவற்றிடம் அன்போடும், பண்போடும் நடந்துகொண்டு
சிறப்பாகத் தன் ஆட்சியை நடத்திவந்தது!


சிறு சிறு
பிராணிகள்
பறவைகள்
இப்படி எல்லா
உயிர்களிடமும்
அன்பு பாராட்டிக்
கொஞ்சி, ஆடி
சிங்கராஜா
மகிழ்விக்கும்.
இதனால் சிங்கராஜாவின்
புகழ் காடெங்கிலும்
பரவி, எல்லா
மிருகங்களும் அந்த
சிங்கராஜாவைப்
பாராட்டின!



சிங்க ராஜாவின் புகழ் ஓங்குவதைக் கண்டு நரிக்குப் பொறுக்காமல் போகவே, மிருகங் களையும் பறவைகளையும் பார்த்துப் பேசியது
இந்த சிங்கராஜா எல்லோரிடமும் அன்பு கொண்டு தன்னுடைய வீரத்தை இழந்து கோழையாகி விட்டது எதிரிகள் வந்து தாக்கினால் நம்மைக் காக்காது அதனால் என்னை ராஜா ஆக்குங்கள் நான் உங்களைக் காப்பேன் என்றது!


நரிசொன்னதை வனவிலங்குகள் எதுவும் இலட்சியமே செய்ய வில்லை! பரிகாசம்செய்தன
இதைக் கண்டு ஆத்திரம் அடைந்த நரி 'இருங்கள் உங்களைப் பார்த்துக் கொள்ளுகிறேன்' என்று ஊளையிட்ட வண்ணம் காட்டிலுள்ள ஓர் கேடுகெட்ட புலியிடம் போய் அதைப் புகழ்ந்து கொண்டாடியது!


புலியாரே! காட்டிலுள்ள சிங்க ராஜா அன்பு, அன்பு, என்று சொல்லிக் கொண்டு சிறுபிள்ளைத் தனமாகத் தன் வீரத்தையே இழந்து ரொம்பவும் சோனியாகி விட்டது.
இந்தச் சமயம் பராக்கிரமத்தில் சிறந்த தாங்கள் வந்தால் சிங்க ராஜாவை ஒழித்துவிடலாம். தாங்களே ராஜாவாகிவிடலாம் நான் மந்திரியாகித் தங்களுக்கு உதவுவேன், என்றது!


என்ன தான் ஆனாலும் சிங்கம் சிங்கம் தானே!
நரியின் சூழ்ச்சி வேலையையும், அது புலியை அழைத்து வரும் செய்தியையும், தன் ஒற்றர் மூலம் அறிந்த சிங்கராஜா சீறிப்பாய்ந்தது!
காடே அதிரும்படி கர்ஜனை செய்து தான் போருக்குத் தயார் என்பதை அறிவித்தது! கர்ஜனையைக் கேட்ட வனவிலங்குகள் குலைநடுங்கிப் போய் நின்றன. அவ்வளவு அன்புடன் இருந்த சிங்கராஜாவா இப்படிக் கம்பீரமாகக் கர்ஜிக்கிறது, என்று எல்லா மிருகங்களும் நடு நடுங்கின!!


சிங்கம் புலியுடன் போராடிப் புலியை வீழ்த்தியது.


இனி இக்காட்டில் இருந்தால் எந்த மிருகமும் தன்னை மதிக்காது என்று முடிவு கட்டிய நரி காட்டை விட்டே ஓடி விட்டது!
உண்மையான திறமைக்கு யாராலும் திரை போட்டு மறைக்க முடியாது!

ஒரு புலி – ஒரு வேதியர் – ஒரு சிப்பாய்!



கருணை காட்டும் திறத்தில் சில வேறுபாடுகள் உண்டு. அதன் நுட்பத்தையறிந்து நடப்பது கருணையாளரது கடமை. இந்தத் தருமத்தை விளக்குகின்றது இந்தக் கதை.

வேதவேதாங்கங்களில் வல்லவர் ஒரு வேதியர். செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர். அவர் இல்லறமாகிய நல்லறம் பூண்டவர். சிவபெருமானைப் பணிந்த நெஞ்சமும், தணிந்த சிந்தையும் உடையவர் உத்தமமான அந்த மறையவர் நிறை நெஞ்சுடையவர்.

அவர் ஒருநாள் அயலூர் சென்று குடும்பத்துக்கு வேண்டிய சாதனங்களை வாங்கி மூட்டை கட்டித் தலை மீது வைத்துக்கொண்டு, தனது ஊரை நோக்கி வந்து கொண்டிருந்தார். இடையில் அடர்ந்த காடு; மாலை நேரம். புதரில் இருந்த வரிப்புலி ஒன்று மறையவர் மீது பாய வந்தது. வேதியர் வேகமாக ஓடி ஒரு மரத்தில் மறைந்தார். நடுவில் மரத்தை விட்டுப் புலி இரு கரங்களையும் அந்தணரைப் பற்ற நீட்டியது. அந்தணர் வலிமையாக அதன் இரு கரங்களையும் பற்றிக் கொண்டார். நடுவில் மரம் நிற்க, புலியும் வேதியரும் மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். வேதியருக்குக் கைவலிமை குன்றியது. இறைவனை நினைத்து உள்ளம் உருகினார்.

சிப்பாய் ஒருவன், துப்பாக்கியுடன் விடுமுறை பெற்று, வீடுநோக்கி அவ்வழியே வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்ட அந்தணர் அகம் மகிழ்ந்தார். ''அப்பா! போர் வீரனே! இந்தப் புலியைத் துப்பாக்கியால் சுட்டுவிடு,'' என்றார்.

சிப்பாய், ''ஐயரே! ஜீவகாருண்யம் சிறந்தது. புலியும் ஓர் உயிர், நீயும் ஓர் உயிர். ஆகவே நான் புலியைச் சுடமாட்டேன்,'' என்றான்.

வேதியர், ''அப்பா! புலி பல பேரைக் கொல்லும் கொடிய பிராணி; நான் பலருக்கு உதவி செய்யும் உத்தமப் பிராமணன். என்னை நம்பி மனைவி மக்கள் காத்துக் கொண்டுள்ளார்கள். ஆதலால் புலியைக் கொல். ஆறறிவு படைத்த அந்தணனும் ஐயறிவு படைத்த கொடிய விலங்கும் ஒன்றுதானா? எது உயர்வு, எது தாழ்வு என்று பகுத்தறிவினால் பார்க்க

திருமுருக கிருபானந்த வாரியார்

வேண்டாமா? ஆபத்து வேளையில் நீ எனக்கு உதவி செய். உனக்குக் கோடி புண்ணியம் வரும்,'' என்றார்.

சிப்பாய், ''ஐயரே! நான் ஒரு போதும் அறநெறியை விட்டு விலக மாட்டேன். புலிக்கும் உயிர் வாழ்வில் விருப்பமுண்டு. ஆதலால் ஒரு உயிருக்காக, மற்றொரு உயிரைக் கொல்லமாட்டேன்,'' என்று திட்ட வட்டமாக மறுத்துவிட்டன.

வேதியர், ''அன்பனே! நான் உன்னைவற்புறுத்தவில்லை.புலியைச் சுட வேண்டாம். நெடுநேரமாக நான் சிறுநீர் விடவேண்டிய துன்பத்தால் துடிக்கின்றேன். மனிதன் நின்று கொண்டே சிறுநீர் விடக்கூடாது. ஆதலால் இப் புலியின் கையைப் பிடித்துக்கொள். சிறுநீர் கழித்து விட்டுப் பிறகு வந்து நான் பிடித்துக் கொள்வேன்,'' என்றார்.

சிப்பாய் அதற்கு மனம் இசைந்து, ஒருபுறம் துப்பாக்கியை வைத்து விட்டுப் புலியின் கரங்களை அழுத் தமாகப் பிடித்துக் கொண்டான்.



வேதியர் ஒரு புறம் சிறுநீர் கழித்து விட்டு, மூட்டையைத் தூக்கித் தலை மீது வைத்து வீட்டை நோக்கிப் புறப் பட்டார்.

சிப்பாய்க்குத் தேள் கொட்டியது போல் உள்ளம் திடுக்கிட்டது. ''ஐயா! ஐயா! என்ன ஐயா அநியாயம். ஒண் ணுக்குப் போய்வந்து பிடித்துக்கொள் கின்றேன் என்று சொல்லிவிட்டு உன் பாட்டுக்கு மூட்டையைத் தூக்கிக் கொண்டு போகின்றீரே! இது தெய் வத்துக்கு ஏற்குமா? வாரும் வாரும்,'' என்று அழைத்தான்.

அந்தணர், ''அப்பா! என்னை மன்னிக்க வேணும் நான் ஆசார சீலன். சிறுநீர் கழித்தவுடன் நீராட வேணும். அதிலும் இது சந்தியா வந் தனம்செய்யும்நேரம். ஆதலால்சற்றுப் பொறு. பிறருக்கு உதவி செய்யும் கருணையுடைய உனக்கு நான் அதிகம் சொல்ல வேண்டாமே. ஆகவே நான் போய் என் கடமை களைச் செய்துவிட்டு வந்துவிடு வேன்,'' என்றார்.

போர்வீரன், ஈனமான குரலுடன், ''ஐயரே! நான் இளமையான மனைவியை நோக்கிப் போகின்றேன். அவள் என் வரவை மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். ஐயா! உன்னைத் தலையால் வணங்கி வேண்டிக் கொள்ளுகின்றேன். இந்தத் துப்பாக்கியை எடுத்துப் புலியைச் சுடும். நீரும் நானும் பிழைக்கலாம்; இருவரும் உய்யுமாறு புலியைச் சுட்டு விடும்,'' என்றான்.

அந்தணர், ''அப்பா! இப்போது தான் உனக்கு நியாயம் பிறந்தது. புலியைப் பார்க்க நீ உயர்ந்தவன். புலி வாழ்ந்தால் பலருக்குத் துன்பம் விளைக்கும். நீ வாழ்ந்தால் எத்தனையோ பேருக்கு உதவி செய்வாய். ஆகவே நீதான் வாழவேண்டும். ஆனால் எனக்குச் சுடத் தெரியாது. ஆதலால் நான் புலியின் கையைப் பற்றிக் கொள்வேன்; நீ புலியைச் சுடு,'' என்றார்.

சிப்பாயும் அதற்கு இசைந்தான். வேதியர் மூட்டையை வைத்து விட்டுப் புலியின் கரங்களைப் பிடித்துக் கொண்டார். சிப்பாய் துப்பாக்கியை எடுத்துப் புலியைப் 'படார்' என்று சுட்டுக் கொன்றான்.

பின்னர், சிப்பாயும் வேதியரும் அன்பாகப்பேசிக்கொண்டு அவரவர் வீடுகளுக்குச் சென்றார்கள்.

ஆதலால், உயிர்க்கருணை உயர்ந்தோர் மாட்டுக் காட்டுதல் சிறந்தது. தீயவரிடம் கருணை காட்டுதல் பிழை. பசுவுக்குப் புல் கொடுத்தால் பால் தரும், பாம்புக்குப் பால் வார்த்தால் நஞ்சு தரும்.

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்களே!

சென்ற இதழில் 'கோகுலம் வாசகர்கள் அத்தனை பேருமே கோகுலம் சிறுவர் சங்க அங்கத்தினர்கள்தான்' என்றுஓர் அறிவிப்புச் செய்ததோடு —

'உங்கள் ஊரில் கோகுலம் வாசகர்கள் குறைந்தபட்சம் இருபது பேர் சேர்ந்து கோகுலம் சிறுவர் சங்கம் என்று உங்களுக்குள் ஓர் அமைப்பு ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; அதன் மூலம் எத்தனையோ நல்ல காரியங்கள் செய்யலாம். அதைப் பற்றிக் கோகுலத்தில் வெளியிடுகிறோம்' என்று அறிவித்தாலும் அறிவித்தோம்; இப்போது பிலுபிலுவென்று தம்பி தங்கைகள் பிடித்துக் கொண்டு விட்டார்கள்:

இதோ வந்து சேர்ந்திருக்கும் கோகுலம் சிறுவர் சங்கப் பட்டியல்:

1. சிவகாசியிலிருந்து அ. மாதவன் தலைமையில் ஒரு சங்கம்.

2. சிறுதையூர் ந. திருத்தவத்துறை. அவர்கள் ஊரில் ஒரு சங்கம் நிறுவியிருப்பதாய் எழுதுகிறார்.

3. நங்கவள்ளி திருவள்ளுவர் நகர் எம். கணேஷ் ஒரு சங்கம் கூட்டியிருக்கிறாராம்.

4. பெரியார் நகர் பள்ளிக்கரணை கோகுலம் சிறுவர் சங்கம் சார்பில் எஸ். கிருஷ்ணமூர்த்தி.

5. காந்தி நகர்மேடவாக்கத்தில்கோகுலம் சிறுவர் சங்கம் ஆரம்பித்திருப்பதாய் விமலா எழுதியுள்ளாள்.

6. செஞ்சி ஷேக் உசேன், ஜி. ஆர். ரமேஷ் ஆகியோர் தாங்கள் துவங்கியுள்ள சங்கம் பற்றிக் குறிப்பிடுகிறார்கள்.

— இப்படி இன்னும் பல சங்கங்கள் பற்றியும் செய்திகள் தொடரும்.

அலாவுதீன் பூதம் மாதிரி அப்புறம் எங்களுக்கு வேலை கொடுங்கள் என்று கேட்கிறார்கள்.

இது எழுத்தறிவு ஆண்டு அல்லவா?

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்...
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'

என்று பாரதியார் சொன்னாரே, அதைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்த்துக் கொள்ளுங்கள்.

இப்போது நீங்கள் செய்ய வேண்டியது என்ன என்று உங்களுக்குப் புரிகிறதல்லவா?

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் படிக்கத் தெரியாத யாராவது ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அவருக்குநீங்கள்தான் ஆசிரியர். அவர்களுக்கு எழுத்தறிவு புகட்டுங்கள். அதனால் புண்ணியம் கோடி உங்களை வந்துசேரும்.

கேரள எர்ணாகுளம் மாவட்டத்தில் நூற்றுக்குநூறுபேர் படித்தவர்கள் என்று அண்மையில் செய்தி வந்ததே. அந்த நிலை உங்கள் ஊருக்கும் வர வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்படுங்கள். வாழ்த்துக்கள்!

— சின்ன அண்ணன்.

நில்! கவனி! புறப்படு!

3

பொன்னொளியின் சுடர்வீச்சைத் தோற்கடிக்கும் வகையில் பூ மலராய்ச் சிரிக்கின்ற புன்னகைச் செல்வமே, உன் பொலிவான மடலீ கண்டேன்; மகிழ்ந்தேன்.

உன் மடலில் ஒரு நல்ல ஐயப்பாட்டினை எழுப்பியிருந்தாய். 'வெறும் எழுச்சி மட்டும் வெற்றியைத் தந்து விடுமா?' என வினவியிருந்தாய். இதோ, இந்த இரண்டாவது கட்டளை — 'உயரிய கலைகளில் ஊன்றி நீ கல்' — உனக்குச் சந்தேக விளக்கம் தரும் என்று நம்புகிறேன்.

கற்றது கைம் மண்ணளவு; கல்லாதது உலகளவு! உற்ற கலை மடந்தை இன்னமும் ஓதுகிறாள். வளர் கலை பெரிது; வாழ்நாள் சிறிது!

பழங்கால மனிதருக்கு நெருப்பு உண்டாக்கும் கலையே பிரதானமாக இருந்தது. பின்னர் ஒருவர் கருத்தை ஒருவர் உணரும் மொழிக் கலை பிறந்தது. அவன் வளர, வள்ர அவன் வளர்ச்சிக்கேற்ற வகையில் அறிவியலும், இலக்கியமும் வளர்ந்தன. இந்தக் கலைகள் இருபதாம் நூற்றாண்டில் ஏராளமாகப் பெருகி விட்டன. கணிப்பொறிகளும், மின்னணுக்களும், எண்ணரிய இயந்திர நுணுக்கங்களும் ஏராளமாக வடிவெடுத்து விட்டன! அறிவியல் சிந்தனை இன்று 'ரோபாட்' வரை வளர்ந்து விட்டது. 'நிலா, நிலா ஓடி வா' என்று பாடிய காலங்கள் மாறிப் போய் 'நெப்டியூன்' வரை இன்றைய 'டியூன்' வளர்ந்து விட்டது!

ஒவ்வொரு நாளும் காலை எழுந்ததிலிருந்து இரவு படுக்கும் வரை — ஏன் இரவில் தூங்கும் போது கூட — அறிவியல் நமக்கு அமைத்துத் தந்துள்ள ஆயிரக்கணக்கான வசதிகளைக் கூசாமல் அனுபவிக்கிறோம். காலையில் கண் விழிக்க அலாரம், கடன் முடிக்க பிளஷ் அவுட், பல் விளக்க பிரஷ் வகையறா; குளிக்க ஷவர்பாத், அமர ஏ.ஸி. ரூம்கள்; உணவை ஆக்க கியாஸ் அடுப்புகள், குக்கர்கள், மிக்ஸிகள், கிரைண்டர்கள், பொழுதுபோக்க வீடியோ, டூஇன்ஒன், டீ.வி.கள் — இப்படி அதிகாலையிலிருந்து அர்த்தஜாமத்தைத் தாண்டியும் கூட நாம் அனுபவிக்க அறிவியல் விந்தைகள் 'க்யூ' வரிசையில் வருகின்றன.

இத்தனை அறிவியல் வசதிகளை அனுபவிக்கிற நாம் அதற்கு ஏற்ற முறையில் நம்மை உறவாக்கிக் கொள்கிறோமா? அல்லும் பகலும் உழைத்துத் தங்கள் வாழ்க்கையையே தியாகம் செய்து பாடுபட்ட அறிவியல் மேதைகளின் பெயர்களையாவது தெரிந்து கொள்கிறோமா? அவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப்


உயரிய கலைகளை ஊன்றி நீ கல்!

படிக்கிறோமா? அதை விடுங்கள். அவர்கள் கண்டுபிடித்தவை பற்றி யாவது தெரிந்து கொள்கிறோமா? அட, அவ்வளவு ஏன்? நியூட்டன் கொள்கைகளைக் கூட ஒழுங்காக வகுப்பறையில் ஒப்பிக்கத் திணறு கிறோமே நாம்! கலிலியோ, ஐன்ஸ் டின், எடிசன் போன்றோர் கண்டு பிடித்தவற்றைப் பற்றித் தேர்வுத் தாளில் ஒழுங்காக எழுதத் தெரி கிறதா நமக்கு?

அறிவியல் துறையென்றல்ல, வர லாற்றுப் பாடங்களிலும் எந்த அள வுக்கு நாம் இருக்கின்றோம்? அலெக் சாண்டர், அசோகர், அக்பர், அலா வுதீன் கில்ஜி இவர்களின் கால கட்டங்கள் நமக்குத் தெரிகிறதா? சுதந்திரமடைந்த நாள் கூட நமக்கு மறந்து விடுகிறது! ஆங்கிலப் பாடத் திலோ சொல்லுக்கு அர்த்தமே தெரி யாமல் அப்படியே மனப்பாடம் செய் கிறோம். அகராதியைப் புரட்ட அத் தனை சோம்பல். அது கிடக்கட்டும். தமிழில் கூடப் பாடல்களுக்குப் பொருளே தெரியாமல் மனப்பாடம் செய்து விடைத்தாளில் எழுதுகிறோ மல்லவா?

இந்தியச் சிறுவனே, நீ என்ன ஏழையா? நீ எழுந்து நின்றால் வானத்தையே 'என்ன சேதி?' என்று கேட்கக்கூடிய கம்பீரமும் உயரமும் கொண்டவனாயிற்றே! உனக்கு ஏன் இந்த உறக்கம்? அறிவியல் விந்தைக்கு ஆரம்பச் சுழி போட்டவனாயிற்றே நீ! பூஜ்யத்தைக் கண்டுபிடித்த நீ, பூஜ்யமாக இன்று ஏன் இருக்கிறாய்?


வராஹமிகிரர், ஆரியபட்டர் போன்ற அறிவியல் மேதைகள் பிறந்த மண்தானே இது? இராமன் களும், ஜெகதீசர்களும், பிரபுல்லர் களும், ஜி. டி. நாயுடுகளும் சமீப காலத்தில் இந்த மண்ணை அலங்கரித் தவர்கள்தானே! கணிதத்திலே ராமா னுஜன்களும், கட்டிடத் துறையில் விஸ்வேஸ்வரையாக்களும் அணுத் துறையில் பாபாக்களும், இலக்கியத் தில் தாகூர்களும், கவிதையிலே பாரதிகளும் இருபதாம் நூற்றாண்டின் சிகரங்களாக இல்லையா? பழங் காலத்திலே குமாரகுப்தரும், தன்வந் திரிகளும், பாஸ்கரன்களும், காளி தாசன்களும், பிரகஸ்பதிகளும் ஒவ் வொரு துறையில் உயர்ந்து நிற்க வில்லையா? எதில் நீ ஏழை? நிர் வாகத் துறையில் ஒரு ராஜாஜி, இசைத் துறையில் ஒரு எம்.எஸ்., விளையாட்டுத் துறையில் ஒரு கவாஸ் கர், தத்துவத் துறையில் ஒரு ராதா கிருஷ்ணன் இவர்களை மிஞ்ச யாரி



ருக்கிறார்கள்? ஆன்மீகத் துறையில் காஞ்சி காமகோடிப் பெரியவர் போன்றோரின் அருளாசிகளும் அரவணைப்பும் கொண்ட நீ அகிலத்தை வெற்றி கொள்ள 'அரிமா'வென எழுந்து நிற்க வேண்டாமா?

ஜப்பானிலும் ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும் கணிப்பொறி வாயிலாக இன்று கல்வி போதிக்கப் படுகிறது; நீ அவற்றுக்கு ஈடுகொடுத்து வளர வேண்டாமா?

உனக்கு வேறு வேலை என்ன இருக்கிறது? வீதிகளில் அலையவும், விளையாட்டுக்களில் மூழ்கவும், வீடியோவில் சரணடையவும் பிறந்தவனா நீ? புதிய புதிய அறிவியல் படைப்புக்களையும், புதிய இலக்கியப் படையல்களையும் எதிர்காலத்திற்கு உறவாக்கித் தராமல் நீ இறந்து போனால் எதிர்காலம் உன் காலத்தை இழிந்த காலமாக — இருள் படிந்த காலமாக — ஒதுக்கி வைக்காதா; உன் கணக்கை முடிக்காதா? எண்ணிப் பார். மனம் வருந்தும் இந் நிலைக்கு மகுடம் சூட்டுவது போல உன் மனன சக்தி கூட வெகு வேகமாக மறைந்து வருகிறதே... இதற்காக நீ வெட்கப் பட வேண்டாமா?



அந்த வெட்க உணர்வு மட்டும் உனக்கு வந்து விட்டால் போதும், வெற்றியின் பாதைக்கு வெகு விரைவில் வந்து விடுவாய்! கம்ப்யூட்டர் துறை கடவுளுக்கு அடுத்தபடியாக இன்று கணக்கற்ற துறையில் — கணக்கற்ற வடிவங்களில் — அவதரித்து விஸ்வரூபமெடுத்துக் கொண்டிருக்கிறது. 21'ம் நூற்றாண்டில் அது வகிக்கப் போகும் பிரம்மாண்டமான இராட்சத வளர்ச்சியை எண்ணிப் பார்க்கையில் நமக்குப் பிரமிப்புத் தட்டுகிறது. இப்பொழுது உள்ள நிலையிலேயே நாம் இருந்தால் 21 ஆம் நூற்றாண்டில் பிற நாடுகள் நம்மை ஆப்பிரிக்கத் தேசத்துப் பழங்குடி மக்களாக ஒதுக்கி வைத்து விடும்; இத்தகைய அபாயத்தை இளந்தளிரே, உன்னைப் போன்றவர்கள், தடுத்து நிறுத்தி விட மாட்டார்களா என ஏக்கத்துடன் நோக்குகிறேன்.

இளைய தலைமுறை இந்தப் பரிதாபகரமான நிலையிலிருந்து எழுந்து நிற்க வேண்டும். உழைத்துப் படிக்க வேண்டும்; உலகத்தை அறிய வேண்டும்! உற்ற பாடங்களையே சற்றும் படியாத நீ, உயரிய கலைகளைக் கற்றுச் சிறத்தல் என்பது முற்றிலும் முடியாத ஒன்றல்லவா? எனவே முதற்கண் பாடங்களை நன்கு படி! வேளை தோறும் படிக்காத எந்தப் பாடமும் விக்கிரமாதித்திய சிம்மாசனம் போல் தானாக வந்து சேராது.

"விலைபோட்டு வாங்கவா முடியும்? — கல்வி
வேளை தோறும் கற்று வருவதால் படியும்!

என்கிறார் பாரதிதாசனார்.



உன் மனக்கலக்கம் எனக்குப் புரிகிறது. நீ படிக்க வேண்டும் என்றுதான் உட்காருகிறாய்; ஆனால் படிக்கின்ற பயிற்சி உன்னைப் பயமுறுத்துகிற முயற்சியாக உன்னைப் படுத்தி வைத்து விடும். நீயும் சலித்துப் போய்ப் புத்தகத்தை மூட்டை கட்டி வைத்து விட்டு விளையாடப் போய் விடுவாய். பாரதிதாசனார் அதனால்தான் உனக்கு,

''கடிதாய் இருக்குமிப்போது — கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியுமப் போது''

என அன்போடு கூறுகிறார். பாரதியாரோ ஒரு படி மேலே போய் உன்னோடு விளையாட்டுக் களத்துககே வந்து 'ஓடி விளையாடு பாப்பா' என்று உன் இஷ்டத்துக்கே கூறி, 'மாலை முழுவதும் விளையாட்டு,' என உன்னோடு உனக்குப் பிடித்த வகையில் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்!

பத்தாவது முடியப் பல கலைகளில் உன் திறனை வளர்த்துக் கொள்ள முடியும். அதன் பின்னர் உன் எதிர்கால வாழ்விற்குப் பயனளிக்கக்கூடிய வகையில் கணிதம், அறிவியலோ, வரலாறு, மொழியியலோ தேர்வு செய்து அதனைத் திறம்படப் பயில வேண்டும். வேலை வாய்ப்புக்களில்தான் இக் கலைகளில் வேறுபாடு எழுமேயொழிய, வேரின் அடிப்படையில் இவை அனைத்தும் சம மதிப்புள்ளவையே. அது போலப் பேச்சு, கட்டுரை, இசை, விளையாட்டுப் போன்ற கலைகளில் உனக்குச் சிறப்பாக எதெதிலே நாட்டம் உள்ளதோ அவற்றைத் தேர்ந்தெடுத்து முழுமையடைய வேண்டும்.

''பிக்பாக்கெட் அடித்தல், கள்ள மார்க்கெட், கள்ள நோட்டு, கலப்படம் செய்தல், ஊழல்கள் செய்தல் — இவை கூடக் கலைகள்தான் என்று வாதிடுகிறவர்கள் உண்டு. அதனால்தான் 'உயரிய கலைகளில் ஊன்றி நீ கல்' எனக் கூறினேன். தெய்வமாக மனிதனை உயர்த்தக்கூடியவையே உயரிய கலைகள் ஆகும்.

'ஊன்றி நீ கல்' என்பது மிக முக்கியமானது. வெறுமனே மேம் போக்காக — தேர்வுக்காகப் படிப்பதில் பயனில்லை. மனத்தை அதில் ஊன்றிப் படிக்க வேண்டும்.

''கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.''

என்ற குறள் இதனைத்தான் சுட்டிக் காட்டுகிறது. 'கற்பவை கற்றபின்' என்றால் 'எவை எவை கற்கப்பட வேண்டுமோ அவை அவை கற்றபின்' எனப் பொருள்படும். இதைத்தான் 'உயரிய கலை' என நான் குறிப்பிடுகிறேன். 'நிற்க அதற்குத் தக' என வள்ளுவர் கூறுகிறார். எனவே நீ ஊன்றிக் கற்றால்தான் அதற்குத் தக உன்னால் நிற்க முடியும்.

கலைகளைப் பயில்வதில் இரு அணுகுமுறைகள் உள்ளன. தாய்க் குரங்கினைக் குட்டி கவ்விக் கொள்வது ஓர் அணுகுமுறை; தாய்ப் பூனை தன் குட்டியினைக் கவ்விக் கொள்வது மற்றோர் அணுகுமுறை. முதல் அணுகுமுறைதான் இளமையில் அமைய வேண்டிய ஒன்று. நீ எந்தக் கலையைப் பயில எண்ணுகிறாயோ அந்தக் கலையை விடாமல் நீ தொற்றிக் கொள்ள வேண்டும்; அப்படிப் பல காலம் நீ தொற்றிக் கொண்டு விட்டால், அதன் பிறகு நீ அக் கலையை விட்டு விலகினால் கூட அது உன்னை விடாது. பாடங்களைச் சிறு வயதில் கஷ்டப்பட்டு — குரங்கினை அதன் குட்டி கவ்விக் கொள்வது போல இறுகப் பிடித்துக் கொண்டு — படித்தாயானால், பிற்



காலத்தில் நீ படித்தவை உன்னை விடாமல் உன்னோடு தொற்றிக் கொண்டே வரும். நீ படித்த பாடல்கள், அறிவியல் தத்துவங்கள், கணித பார்முலாக்கள் ஆகியவை உன் முதிய காலத்திலும் உன்னை விடாமல் தன் பிடியிலேயே உன்னை வைத்துக் கொள்ளும்.

மிகச் சிலருக்கு வித்தியாசமாக இரண்டாவது அணுகுமுறை முதலில் வாய்க்கும்; முதல் அணுகுமுறை பின்னால் அமையும். தெய்வீகமாகச் சில கலைகளில் நம்மை அறியாமல் ஈடுபாடும், திறமையும் நமக்கு அமையும். தாய்ப் பூனை குட்டியைக் கவ்வுவதைப் போல! அதற்குப் பின்னர் நம்மை அறியாமல் நமது திறன் வெளிப்பட்ட அக் கலைகளில் முழுமையான ஈடுபாட்டை, தேர்ச்சியை நாம் பெற முயல வேண்டும். இவ்வாறு இரு அணுகுமுறைகளில் கலைகளைப் பயில வேண்டும். இரு அணுகுமுறைகளில் எது முன்னர் வந்தாலும் ஊன்றிக் கலைகளைக் கற்பது ஒவ்வொரு மாணவனின் ஊக்கத்தைப் பொறுத்ததே!

''துரோணர் தன் சீடர்களுக்கு ஒரு பரிட்சை வைத்தார். ஒரு கழுகு பொம்மையை மரத்தின் உச்சியில் கட்டச் சொன்னார். இலைகளின், கிளைகளின், கனிகளின் இடையே கட்டப்பட்ட அந்தக்கழுகுப்பொம்மையின் கழுத்துக்குக் குறிவைக்கும்படி தன் சீடர்களுக்கு ஆணையிட்டார். முதல் சீடனைக் கூப்பிட்டார். குறி வைக்க ஆணையிட்டார். ''இப்பொழுது உனக்கு வானம் தெரிகிறதா?'' ''தெரிகிறது.'' ''மரம் தெரிகிறதா?'' ''தெரிகிறது.'' ''கிளை தெரிகிறதா?'' ''தெரிகிறது.'' ''கனி, இலை...?'' ''தெரிகிறது.'' ''கழுகு தெரிகிறதா?'' ''தெரிகிறது.'' ''சரி போகலாம் நீ.'' அடுத்த சீடனைக் கூப்பிட்டார்; அவனிடமும் கேட்டார்; அவனும் இதே பதிலளித்தான். இப்படியே ஏழெட்டுச் சீடர்கள் வந்து போயினர்.

அர்ச்சுனனைக் கூப்பிட்டார். ''அர்ச்சுனா, வானம் தெரிகிறதா?'' ''தெரியவில்லை குருவே.'' ''மரம்?'' ''தெரியவில்லை.'' ''இலை, கனி?'' ''தெரியவில்லை.'' ''கழுகு?'' ''தெரியவில்லை.'' ''பிறகு என்னதான் தெரிகிறது உனக்கு?'' ''கழுகின் கழுத்து மட்டும்தான் தெரிகிறது; மற்ற எதுவும் தெரியவில்லை,'' என்றான் அர்ச்சுனன். துரோணர் கூறினார், ''உன்னை வெல்ல யாராலும் முடியாது.''

ஆம். இப்படித்தான் நானும் உன்னை நோக்கிக் கூற விரும்புகிறேன். உன் முழு கவனமும் நீ படிப்பதிலே, பயில்வதிலே இருக்க வேண்டும்.

மூன்று கடமைகள் உன்னைச் சார்ந்திருக்கின்றன. 'படிப்பது; பதிப்பது; படைப்பது' என்ற மூன்று 'ப' வரிசைகள் அவை. நன்கு படி; படித்ததை இதயத்தில் வைத்துக் படித்ததை இதயத்தில் நன்கு பதிய வைத்துக் கொள்; இதயத்தில் பதித்ததை மற்ற இளந்தளிர்களுக்குத் தெளிவாகவும், பொலிவாகவும் படை. வெறுமனே படிப்பது, பதிப்பது ஆகிய இரண்டோடு நின்று விட்டால் சமுதாயத்திற்கு அதனால் எந்தப் பயனுமில்லை. எனவே படித்ததற்கேற்ற வகையில் பதித்ததற்கேற்ற வகையில் அவற்றை உலகின் முன் படைக்க வேண்டும். காவியங்களாகவும் அறிவியல் கருவிகளாகவும் எதிர்காலத்திற்கு உன் படைப்பை அமைத்துத் தா!

அறிவின் தளிரே, அன்பு இலக்கியமே.. அடுத்த மடலில் சந்திப்போம்.

(தொடர்)



எட்டுக்கு எட்டு — கதை என்ன?

ஜமீன்தார் ஜகவீரபாண்டியன், அதிகக்கூலி கேட்ட ஒரு விவசாயக் குடும்பத்தை எட்டுக் குழந்தைகளுடன் தீயிட்டுக் கருக்கிவிட, பாதிக்கப்பட்ட குடும்பத்தினரில் ஒருவரான திம்மையா, ஜமீன்தாரிணியைக் கொன்று ஆயுள் தண்டனை பெறுகிறான்.


அவன் சதா, 'எங்கள் பிள்ளைகள் எட்டுப் பேருக்கு உன் வாரிசுகள் எட்டுப் பிள்ளைகளைப் பலி வாங்காமல் நான் சாக மாட்டேன்,' என்று சொல்லிக் கொண்டேயிருப்பான்.

அவன் தண்டனைக்காலம் முடிந்து வெளிவந்துவிட்டதாகத் தெரிகிறது. இப்போது ஜமீன் வாரிசுகள் ஒவ்வொருவராய்க் கடத்தப்படுகிறார்கள். இதுவரை ஏழு பிள்ளைகள் காணாமல் போய்விட்டன!


அவர்களைக் கடத்தியவன் திம்மையாதானா? உயிரோடு இருக்கின்றனவா, கொலை செய்யப்பட்டனவா? இருந்தால் எங்கே இருக்கின்றன? இல்லையென்றால் எப்படி மறைந்தன?


இன்ஸ்பெக்டர் ரஞ்சித் துப்பறிந்து கொண்டிருக்கிறார். எட்டுக்கு எட்டு கணக்குக்கு இன்னும் ஒன்று பாக்கி இருக்கிறது. அதுவும் காணாமல் போவதற்குள் அத்தனையையும் கண்டு பிடித்தாக வேண்டும் துப்பறியும் ரஞ்சித். எப்படி?


இனி கவனியுங்கள்:






சார், என் பேரு வேலு. ஆறாங்கிளாஸ் படிக்கிறேன். திம்மையா எங்க தாத்தா தான்!
மை குட்னஸ்! வேலு, இப்ப அவர் எங்க இருக்கார் தெரியுமா?
நிச்சயமா இக்கரையிலே இல்லேன்னு தெரியும்.... சார், நான் உங்களுக்கு உதவி செய்யணும்னு...
சார் எங்கப்பாவும் சித்தப்பாவும் இக்கரையிலதான் தலை மறைவாத் திரியுறாங்க.
ஓஹோ.. திம்மையா வின் பிள்ளைகளான இந்த ரெண்டு பேரும் தான் ஆமின் வாரிசுகளைக் கடத்தறாங்க..
வெரி குட். உனக்கு வேற என்னென்ன தெரியும், சொல்லு.
அவங்களை நீ எங்கேயாவது பாத்தியா?
இன்னைக்குக் கருங்கல்லிலே பார்த்தேன்...ஆளுக்கொரு கோணிமூட்டையைத் தோணியிலே ஏத்திட்டுப் போனாங்க
அந்த மூட்டை அசைஞ்சதுகூட நல்லாத் தெரிஞ்சது...
அந்த மூட்டைக் குள்ளே இருந்த வங்க யார் தெரியுமா?
யார் சார்?


உன்னைவிடச் சின்னப் பையன் ஒருவனும், சின்னப் பொண்ணு ஒண்ணும். இதுக்கு முன்னாடி இதேபோல வேறு இந்து பசங்களைக் கடத்திட்டுப் போயிருக் காங்க...
கவலைப் படாதீங்க என் உயிரைக் கொடுத்தாவது அவங்களைக் காப்பாத் தறேன்!
ஓ கே. என் னோட வா..
கமிஷனர் எதிரில் இருவரை நிறுத்திவிவரத் தைச் சொன்னான் ரஞ்சித் —
ரஞ்சித்! இந்தப் பையன் நமக்கு உபயோகப் படுவான் என்று நினைக்கிறாயா?
அங்கிள்! அந்தக் கடத்தல் காரர்களை அடையாளம் காட்டுவா னென்று...
கரெக்ட்....ம்.. தம்பி, உன் அப்பா, சித்தப்பா பேர் என்னப்பா?


அப்பா பேர் அங்குசாமி. சித்தப்பா பேர் சின்னான்.
இந்தப் பேர்களை நான் கேள்விப்பட்ட மாதிரி இருக்கே...


கண்ணையா அந்தக் கேடிகள் போட்டோ ஆல்பத்தைக் கொண்டுவா.
எஸ் ஸார்!


ஆல்பத்தை கொட்டிப் புரட்ட வேலு—
அவங்க ரெண்டு பேர் போட்டோவும் இதில் இல்லை!
தொடரும்.

பாட்டுக்காரன் பாடிய

ஹாரிஸ்

சித்தேஸ்வரன் என்ற சித்து சாப்பாட்டு மூட்டையுடன் வயல் வரப்பில் வந்து கொண்டிருந்தான்.

''சித்து! வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சவா வந்திருக்கே?'' என்று வியப்புடன் கேட்டான் சித்துவின் நண்பன் பல்ராம்.

''ஆமாம் பல்ராம், எனக்குத் தெரிஞ்ச வேலை இது ஒன்றுதானே?" என்று வெகுளித்தனமாகப் பதிலளித்தான் சித்து.

''சித்து நாங்களும் வயலுக்குத் தண்ணி பாய்ச்சத்தான் வந்திருக்கோம். நாம் பாடுபடுவதன் கஷ்டம் தெரியாமல் இருக்க நீ ஏதாவது பாடிக் கொண்டே நீர் இறையேன். நீதான் நன்றாகப் பாடுவாயே சித்து?'' என்று கேட்டுக் கொண்டான் பல்ராம். நண்பர்களும் அவனுடன் ஒத்துப் பாடினர்.

சித்துவுக்குக் கல்வியறிவு இல்லாவிட்டாலும் நல்ல இனிய குரல் வளம் இருந்தது. அவன் நீர் இறைத்தபடி பாடினான். அவன் பாடப் பாட அந்தப் பாடல்களின் இனிமையால் சுற்றுப்புறத்தின் தன்மையே மாறியது. பறவைகளெல்லாம் பறப்பதை மறந்து கிளைகளில் அமர்ந்து அவன் பாடுவதைக் கேட்டன. இரைக்காகத் தலை வெடிக்கக் கத்திக் கொண்டிருந்த கூட்டுக் குஞ்சுகள் கூடக் கத்துவதை நிறுத்தி சித்துவின் பாடலைக் கேட்டு மெய்மறந்தன. பசுக்கள் அசை போட மறந்து அவன் பாடுவதைக் கேட்டன. பக்கத்து வயல்களில் நீர் இறைத்துக் கொண்டிருந்தவர்கள் நீர் இறைப்பதை நிறுத்தி அவன் இசையில் லயித்துப் போயினர்.

அந்த நேரத்தில் சித்து பாடியபடி நீர் இறைத்துக் கொண்டிருந்த கிணற்றின் கைப்பிடிச் சுவரில் ஒரு தெய்வீகப் பெண் வந்து அமர்ந்து கொண்டாள். சித்துவின் பாடலுக்கு அவள் தன்னை மறந்து தாளம் போட்டாள்!

தற்செயலாகத் திரும்பிப் பார்த்த சித்து திடுக்கிட்டான். தெய்வீகப் பெண்ணைக் கண்டதும் பயத்தில் அவன் பாடல் நின்றது.

''சித்து, நீ மிகவும் இனிமையாகப் பாடுகிறாய். எனக்கு மிகவும் மகிழ்ச்சி. உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்,'' என்றாள் தெய்வப் பெண்.

''நீ என்ன பெரிய சரளா தேவியா வரம் தர?'' என்று திருப்பிக் கேட்டான் சித்து.

''ஆம்சித்து. நான் சரளா தேவியேதான். இக்கிராமத்தைக் காக்கும் துர்க்கை நான்தான். என்னைப் பற்றித்தானே நீ இவ்வளவு நேரம் பாடினாய்? நீ என்ன வரம் கேட்டாலும் நான் கண்டிப்பாகத் தருகிறேன்,'' என்று சிரித்து உறுதியளித்தாள் துர்க்கை.

''இப்படி திடீரென்று வந்து வரம் தந்தால் என்ன கேட்பது? எனக்கு என்ன கேட்பது என்பது தெரியாதே" என்று விழித்தான் அப்பாவி சித்து.

''பரவாயில்லை சித்து. உனக்கு எப்பொழுது வரம் தேவை என்று தோன்றுகிறதோ உடனே என்னை நினை. நான் வந்து தருகிறேன்'' என்று மறைந்தாள் தேவி.

தேவியுடன் சித்து பேசிக் கொண்டிருக்கும்போதே ஏற்றம் இறைக்கும்



மகாபாரதம்

கொம்பு கிணற்றுக்குள் விழுந்து விட்டது. அப்பாவும் அண்ணன்மார்களும் என்னவெல்லாம் சொல்லி தண்டனை தரப் போகிறார்களோ என்று நடுங்கியபடி வீடு திரும்பினான் சித்து.

விஷயத்தைக் கேட்டதும் தந்தை சீறினார். அண்ணன்மார்கள், படிப்பும் ஏறாத, எவ்வித வேலையையும் ஒழுங்காகச் செய்யத் தெரியாத அவன் தண்டச் சோறு என்றும், அவனை வீட்டை விட்டு விரட்டி விட



ஆசிரியர்: சர்க்கரை எதிலிருந்து கிடைக்கிறது?

ராமு: பக்கத்து வீட்டுப் பரிமளா மாமி வீட்டிலிருந்து சார்!

— எம். ஆனந்தன்.

வேண்டும் என்றும் தூண்டி விட்டனர். வந்த கோபத்தில் தந்தை பிரம்பால் சித்துவை விளாசித் தள்ளினார். அடி தாங்காத சித்து மனத்திற்குள் தன்னையறியாது சரளா தேவியை நினைத்துக் கொண்டான்.

அடுத்த கணம், சித்துவின் வீட்டு நெற் குதிருக்கு மேல் சரளாதேவி சிங்கத்தில் அமர்ந்த கோலத்தில் காட்சியளித்தாள்.

''அருமை சித்து, என்ன வரம் கேட்பது என்பதை முடிவு செய்து விட்டாயா?''

''இல்லை தாயே. என்ன கேட்பது என்று எனக்கு இன்னும் தெரியவில்லை அம்மா. அப்பா அடித்த வலியால் உன்னை நினைத்தேன். அவ்வளவுதான்'' என்றான் அப்பாவி சித்து.

''கள்ளமில்லாத சித்து, உனக்கு என்ன வரம் தருவது என்பதை நானே முடிவு செய்து விட்டேன் மகனே. பிரம்பு கொண்டு அடித்த அதே கையால் உன் தந்தை உனக்கு மாலையணிவித்து மகிழப் போகும் நாள் விரைவில் வரப் போகிறது'' என்று கூறிய தேவி, சித்துவின் நாக்கை நீட்டச் சொல்லி, அதில் தனது திரிசூலத்தால் ஏதோ எழுதினாள்.

''சித்து, இனி நீ சாதாரண சித்தேஸ்வரன் அல்ல. உன் நாக்கில் வால்மீகியும், வியாச முனிவரும் தவழ்ந்து கவி நடனமாடப் போகிறார்கள். உன் தாய் மொழியில் இறவாத இலக்கியங்களைப் படைத்து உன்னத நிலையை அடைவாய்'' என்று வாழ்த்தினாள்.

கோடி சூரிய ஒளியுடன் தேவி நின்ற திருக்கோலம் சித்துவின் கண்களுக்கு மட்டுமே தெரிந்தது. கூறியதைக் கூட நினைவு வைத்துக் கொள்ளத் தெரியாது; எது கேட்டாலும் கோர்வையாகப் பதிலைக் கூடச் சொல்லத் தெரியாது; பெற்றவர், சகோதரர், ஊராருக்கு ஏளனப் பொருளாக இருந்த சித்து, தேவியின் அருளால் மாறிப் போனான். கண்களில் அறிவொளி வீசியது. சிந்திக்கும் ஆற்றல் தன்னால் வந்தது. கனமழையின் வேகத்தில் கவிதைகளைப் பொழிந்து தள்ளும் பேராற்றல் அவனைத் தஞ்சமடைந்தது.

வால்மீகி முனிவரும், வியாசரும் சித்துவின் அறிவுக் கூண்டுக்குள் புகுந்து அவனைக் கவிதை மழை பொழியத் தூண்டினார்கள். சித்து என்ற சித்தேஸ்வரன் தன் தாய் மொழியான ஒரியாவில் உயிரோட்டக் கவிதைகளைப் படைத்தார். பாமர மக்களும் படித்து இன்பமடையும்படி இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் ஒரிய மொழியில் படைத்து மகிழ்ந்தார். சரளா தேவியின் அருள் பார்வை பெற்ற கவிஞர் ஆதலால் மக்கள் இவரைப் பெயர் கூறி அழைக்காமல் சரளாதாசர் என்றே அழைத்தனர்.

எழுத்தாணியைப் பிடித்த அதே கரத்தால் சரளாதாசர் உழவுத் தொழிலையும் செய்து உழைப்பின் பெருமையை உலகுக்கு உணர்த்தினார். அவர் காலத்தில் ஒட்டரதேசமென்ற ஒரியாவை ஆண்ட மன்னன் கபிலேந்திரன். அவனுடைய படையெடுப்பில் வீட்டுக்கொருவர் கலந்து கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டது. திருவுளச் சீட்டுப் போட்டதில் சித்துவின் பெயர் வந்தது. குடிமகன் என்ற முறையில் அவர் படையெடுப்பில் கலந்து கொண்டு தனது கடமையைச் செய்யத் தவறவில்லை.

ஒரிய இலக்கிய முன்னோடிகளில் சித்து சிறந்து விளங்குகிறார். இந்த மக்கள் கவிஞர் ஒரிய மொழியில் படைத்த அழியாத இராமாயண காவியத்தின் பெயர் 'வில்லங்க இராமாயணம்.'



பூமியைப் பற்றிய அறிவியல் உண்மைகள்

(மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு — பக். 160 — ரூ. 15)

நம்மைத் தாங்கும் பூமியின் புராதனத்தை, அதன் பரிமாணத்தை, நிறையை, குறையை எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை இருக்கிறதா உங்களுக்கு? ஆசையில்லாதவர்கள்கூடக் கொஞ்சம் படிக்க ஆரம்பித்ததும் அவர்களையறியாமல் அப்படியே ஒட்டிக் கொண்டு போய் ஒரு மூச்சில் படித்து முடித்து விடத் தூண்டும் அத்தனை அதிசய உண்மைகளை அடுக்கடுக்காய்த் தந்து கொண்டே போகிறது இந்த அறிவியல் நூல். மாதிரிக்குச் சில:

* ஓர் ஒளி ஆண்டுத் தூரம் என்பது எவ்வளவு? ஒரு வினாடிக்கு 1,86,000 மைல் வேகத்தில் ஓராண்டு முழுவதும் பயணம் செய்தால் எவ்வளவு தூரத்தைக் கடக்க முடியுமோ, அதுதான் ஓர் ஒளி ஆண்டுத் தூரமாகும்.

* பூமியின் வயதை இப்போது 460 முதல் 500 கோடி ஆண்டுகள் என்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

* பூமிக் கோளத்தின் நிலப்பகுதி 29.2 சதவிகிதம்தான். நீர்ப்பகுதி 70.8 சதவிகிதமாகும். அதாவது 361 மில்லியன் சதுர கிலோமீட்டர் கடல் ஆகும்.

* பூமியின் எடை 6 என்னும் எண்ணுக்குப் பின்னால் 21 சைபர்களைப் போட்டால் எவ்வளவு எண் வருமோ அவ்வளவு டன் எடைகளாகும்.

— இப்படிப் பாலைவனங்கள் தோன்றுவது ஏன்? பூமியில் உயிரினங்கள் எவ்வாறு தோன்றின? கடல்கள் தோன்றியது எப்படி? போன்ற தலைப்புக்களில் வளர்த்தல் இல்லாமல் மானாவாரியான அறிவியல் விஷயங்களை அள்ளித் தரும் பயனுள்ள நூல்.

இந்திய ஜனாதிபதிகள்

(மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு— பக். 172—ரூ. 18—இரண்டு புத்தகங்களும்: மணிமேகலைப் பிரசுரம், த. பெ. எண்: 1447, 4, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை — 600 017.)

1952— இல் புதிய அரசியல் சட்டப்படி நடந்த தேர்தலில் வென்று ஆட்சி பீடம் ஏறிய போது முதல் இந்தியக் குடியரசுத் தலைவராக ஏற்றம் பெற்ற ராஜேந்திரப் பிரசாத்திலிருந்து அவரை அடுத்து வந்த மூன்று பேரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றைச் சொல்லுகிறது இந்த நூல். எங்கே, டாக்டர் ராஜேந்திர பிரசாத்துக்கு அப்புறம் வந்த அந்த மூன்று ஜனாதிபதிகள் யார் யார் என்று சொல்லுங்கள், பார்க்கலாம். தடுமாற வேண்டாம். அவர்கள் யார் யார் என்பதோடு, அவர்களைப் பற்றிய முழு விவரமும் உங்களுக்குத் தெரிய வேண்டும்.

''பாபு ராஜேந்திர பிரசாத்தைப் பற்றி எழுத வேண்டுமானால், தங்க நிப்பு பொருத்திய பேனாவைத் தேனில் முக்கியெடுத்துத்தான் எழுத வேண்டும்,'' என்றார் கவிக்குயில் சரோஜினி தேவி.

இத்தகைய சுவையான எடுத்துக்காட்டுகளோடு, ஒவ்வொருத்தர் வாழ்க்கைச் சம்பவங்களையும் சுவாரஸ்யமாகச் சொல்லியிருக்கிறார்கள். நாலில் இரண்டு நம் பக்கத்தவராய் இருப்பது நெஞ்சை நிமிர வைக்கிறது.

சரித்திரக் கதை மலர்கள்

(நெ. சி. தெய்வசிகாமணி — பக். 76 — ரூ. 7.50 — பாலர் பதிப்பகம், 309, லிங்கி செட்டித் தெரு, சென்னை — 600 001.)

ராணா பிரதாப்சிங்கன், சாணக்கியர், அலெக்சாண்டர், ஷாஜஹான், அஜாதசத்ரு, நெப்போலியன் ஆகிய ஆறு சரித்திரப் புருஷர்களின் வாழ்க்கையில் நடந்த படிப்பினை தரும் நிகழ்ச்சிகளைக் கதை வடிவில் எளிய நடையில் கோத்துத் தந்திருக்கிறார் ஆசிரியர்.

'பள்ளிகளில் கற்பிக்கப்படும் வரலாற்று நூல்களில் கேள்விகள் கேட்பதற்காகவே எழுதப்பட்டுள்ள புள்ளி விவரங்களே அதிகமாகக் காணப்படுகின்றன,' என்றும் அதனால்தான் வரலாறு என்றாலே மாணவர்கள் வேம்பாக வெறுக்க நேருகிறது: அதையே வரலாற்று நாயகர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கற்பனை கலந்து கதை போலக் கூறினால் மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பார்கள் என்ற கருத்தில் இந்த நூலை எழுதியதாகக் கூறுகிறார் உங்களுக்கெல்லாம் நன்கு அறிமுகமான ஆசிரியர் நெ. சி. தெய்வசிகாமணி.

இந்த நூலைப் படிக்கும் போது அவருடைய குறிக்கோள் வெற்றி பெற்றுவிட்டது என்றே தோன்றுகிறது. ஒவ்வொரு கதையிலும், உரையாடல், சஸ்பென்ஸ் நிகழ்ச்சிகள், வர்ணனை, போரடிக்காத புள்ளி விவரச் சேர்க்கை உண்டு. படங்களுக்குக் குறைவில்லை. இதற்கு மேல் என்ன வேண்டும்?

கோகுலமாம் கோகுலம்!





தீனுக்கு, சிரிப்புச் செய்திகள்
சுவைத்துச் சிரித்து மகிழலாம்.
கணக்குக் கூடப் போடலாம்
கவிதை பாட முனையலாம்.

நாங்கள் விரும்பும் கோகுலம்
நன்மை பயக்கும் கோகுலம்.
நீங்கள் கூடப் படிக்கலாம்
நினைவில் பதித்து உயரலாம்!

எண்ணம் கவர்ந்த கோகுலம்
இனிக்கும் நல்ல கோகுலம்.
வண்ணம் காட்டும் கோகுலம்
வளர்க்கும் அறிவைக் கோகுலம்

பாட்டும் கதையும் படிக்கலாம்
பண்பில் அறிவில் தெளியலாம்
நாட்டுக் குழைத்த தலைவர்கள்
நடந்த வழிகள் அறியலாம்.

— சக்தி. இளம்பரிதி

எங்கள் மிட்டாய்க்காரர்!





முறுக்குமீசை வைத்தவராம்
எங்கள் மிட்டாய்க்காரர்
மூங்கில் தடி வைத்தவராம்
எங்கள் மிட்டாய்க்காரர்.

பாட்டுப் பாடிக் கூட்டம் சேர்ப்பார்
எங்கள் மிட்டாய்க்காரர்
பழங்கதையும் கூடச் சொல்வார்
எங்கள் மிட்டாய்க்காரர்.

பறவை மிருகம் செய்திடுவார்
எங்கள் மிட்டாய்க்காரர்
பரிந்து கையில் கட்டிடுவார்
எங்கள் மிட்டாய்க்காரர்

— மாயன்.

பிருந்தாவனக்



எங்கள் குடும்பம்

அம்மா நல்ல அம்மா
அன்பு மழை பொழிவாள்!

அப்பா நல்ல அப்பா!
அள்ளிக் காசை வழங்குவார்!

தம்பி நல்ல தம்பி
தங்க நல்ல தம்பி!

தங்கை நல்ல தங்கை
தடுத்தும் பேசும் மங்கை!

அண்ணன் நல்ல அண்ணன்
அழகாய் வளர்ப்பான் என்னை!

அண்ணி நல்ல அண்ணி
அன்பாய்க் கறி சமைப்பாள்

அக்கா நல்ல அக்கா
அழகாய் சொக்காய் அளிப்பாள்!

மாமா நல்ல மாமா
மாமிக் கேற்ற மாமா!

தாத்தா நல்ல தாத்தா
தரணி போற்றும் தாத்தா!

பாட்டி நல்ல பாட்டி
பழங்கதைகள் சொல்வாள்!

— புலவர். ஆ. பூங்காவனம்



நத்தை மாமா!

ஓட்டுக்குள்ளே ஒளிந்திருக்கும்
நத்தை மாமா! — நீ
கூட்டை விட்டுக் கழுத்தைக் கொஞ்சம்
நீட்டு மாமா!

தீங்கு செய்ய எண்ணமில்லை
செல்ல மாமா! — நீ
தூங்குவதாய் நடிப்பதென்ன?
சொல்லு மாமா!

பாக்குவச்சி அழைக்கணுமா
என்ன மாமா! — அட!
சீக்கிரமா எட்டிப் பாரு
சின்ன மாமா!

கவியரங்கம்


ஏட்டைத் தூக்கி நடந்துவரும்
என்னைப் போல! — நீ
ஒட்டைத் தூக்கி அசைந்துவர
வேண்டும் மாமா!

தண்ணி வண்டி போலசைந்து
மண்ணில் ஊர்ந்து — நீ
முன்னடக்கும் பேரழகோ
விந்தை மாமா!

பொன்னுருகி வழிந்தது போல்
மண்ணில் மின்னும் — நல்
வெண்பசையால் பாதைபோடும்
நத்தை மாமா!

நந்தவனம் சுற்றிடலாம்
நல்ல மாமா! — நான்
குந்திக் கவா முதுகிலேறிக்
குட்டி மாமா!

— கருமலைப் பழம்நீ.




வளமை சேர்க்க வேண்டும் நீ!

முயலைப் போல வேகமாய்
முயன்று ஓட வேண்டும் நீ
கயலைப் போலத் தீரமாய்
கடலில் நீந்த வேண்டும் நீ

புயலைப் போல வீரமாய்
புவியை எழுப்ப வேண்டும் நீ
வயலைப் போல வாழ்விலே
வளமை சேர்க்க வேண்டும் நீ!

— எஸ். அசோகன்.



காட்டு வைத்தியர் கழுதையார்!

வைத்தியம் பிடித்த சொறிநாயைப்
பார்க்க அழகாய் மாற்றிட்ட
வைத்தியர் திலகம் கழுதைக்கு,
வாண்டுக் குரங்கு கம்பவுண்டர்!

யானைப் பெண்ணின் உடல்இளைக்க
பேதி மாத்திரை தந்திட்டார்!
பூனை புலியாய் ஆவதற்குப்
புதிய லேகியம் கொடுத்திட்டார்!

கழுதை ஊசி போட்டிடுவார்
காகித மருந்தும் எழுதிடுவார்!
எழுந்து பணத்தை வாங்குவதில்
எடுத்து ஓதுக்கும் வால்குரங்கு!

வாந்தி எடுத்த ஓநாய்க்கும்
வயிற்றை வலித்த ஆட்டிற்கும்
மொத்தை வாழை நினைவினிலே
மருந்தை மாற்றிக் கொடுத்திட்டார்!

ஆடு ஓநாய் இறந்திட
அடிக்கக் கூட்டம் ஓடிவர
ஓடிப் போனார் கழுதையார்!
ஒளிந்து கொண்டார் குரங்காரும்!

— பா. சா. பார்த்தசாரதி.



அறிவுப் பெட்டகம்

அறவு நிறைந்த பெட்டகம்
அறிஞர் வரைந்த புத்தகம்
உலக அறிவை ஊட்டிடும்
ஒழுக்க வாழ்வைக் காட்டிடும்
உயர்ந்த நூலைக் கற்றிடு
உயர்ந்த மனிதன் ஆகிடு
பண்பை நன்கு வளர்த்திடப்
படிக்கும் பழக்கம் அவசியம்.
இன்று இதனை ஏற்றிடு
என்றும் வெற்றி அறிந்திடு!

— தா. ஷேக் உசேன்.



அந்தநாள் அர்ப்பணம்

தம்பி! சின்னக் கதைகேளு!
ஜவஹர் நேரு அந்நாளில்
நம்பா ரதத்தின் பிரதமராய்
நல்ல ஆட்சி செய்கையிலே

பஞ்சாப் என்னும் மாநிலத்தில்
பக்ரா நங்கல் எனும்பெயரில்
கொஞ்சும் அழகு சட்லெஜின்
குறுக்கே ஓரணை அமைத்தார்கள்.

திட்டம் பெரிய திட்டம்தான்
தேசம் செழிக்கும் திட்டம்தான்
கட்டி முடிந்த போதினிலே
கண்டோர் எல்லாம் புகழ்ந்தார்கள்.

அணையைத் திறந்து வைத்திடவே
அண்ணல் நேருவை அழைத்தார்கள்.
அணையைத் திறந்த நேருபிரான்
அப்போ தென்ன உரைத்தார்கேள்.

''நாடி அமைத்த இந்தஅணை
நமது நாட்டில் வாழ்கின்ற
கோடிக் கோடி விவசாயக்
குலத்தி னர்க்கே அர்ப்பணமே''!

என்று மொழிந்தார் நம்நேரு;
- எத்தனை அடக்கம், பெருந்தன்மை!
நன்றாய் இதனைச் சிந்தித்து
நல்ல படியாய் வாழ்தம்பி!

— சாயிதாஸ், இராஜபாளையம்.



விடாதே காக்கையை!

காக்கை ஒன்று கடுமை யான
குற்றம் செய்த தாம்.
கண்ட இடத்தில் சுட்டுக் கொல்ல
கலெக்டர் ஆர்ட ராம்.

கேட்க லுமா தெருவி லெங்கும்
ஆட்கள் கூட்ட மாம்.
கீழு மேலும் பார்த்தும் காகம்
கிடைக்க வில்லை யாம்.

தோட்டம் துரவு மாடி மனைகள்
தேடி இல்லை யாம்.
துப்ப றிந்தும் கூடத் தகவல்
துளியு மில்லை யாம்.

வேட்டுங் கையு மாகப் போலீஸ்
நோட்டம் விட்ட தாம்.
விலங்கி டாமல் மாறி மாறி
விழித்துக் கொண்ட தாம்.

காட்டுப் பக்கம் போச்சு தென்றே
கதையும் பிறந்த தாம்.
காவல் அங்கும் போட்டுப் பார்க்க
ஆவல் எழுந்த தாம்.

நாட்டுக் காகம் செய்த குற்றம்
கேட்கி றார்க ளாம்.
''நான் அறியேன்'' எனும் பதிலே
நமக்குக் கிடைக்கு தாம்.



அண்ணன், ''குத்தம் என்ன இருக்கும்?''
என்று கேட்கி றான்.
தம்பி அதற்குத் தலையைச் சொறிந்து
பதில் கொடுக்கி றான்:

''திருட்டு, கொள்ளை அந்தக் காகம்
செய்தி ருக் காது.
தீய கொலையும் அந்தக் காகம்
செய்தி ருக்கா து.

''கள்ளக் கடத்தல் அந்தக் காகம்
செய்தி ருக்கா து.
கொள்ளை விலைக்கு அந்தக் காகம்
கொடுத்தி ருக்கா து.


''லஞ்சம் வாங்கி அந்தக் காகம்
தின்றி ருக்கா து.
நஞ்சு கலந்த மருந்தை அதுவும்
விற்றி ருக்கா து.

''நிச்ச யமாய் இவற்றில் ஒன்றைச்
செய்தி ருக்காது.
இவற்றிற்காகச் சுட்டால் நாட்டில்
ஆளிருக்காது.

''இவற்றை விடவும் பயங்கர மாய்
என்ன செய்த தோ!
எனக்கு ஒன்றும் புரிய வில்லை.
உனக்குத் தெரியு தா?''

அண்ணன் என்ன, தம்பி என்ன
ஆருக்குத் தெரி யும்?
அதனை அந்தக் காக மேதான்
வந்து சொல்ல ணும்.

— அழகி, ஸ்ரீவில்லிபுத்தூர்.


பேசாத ஜோக்கெல்லாம் பேச வந்தாய்!
எதையோ சாப்பிட்டு இப்படி சத்தமா ஏப்பம் விடறியே என்ன ஏப்பம் இது
புலி ஏப்பம்!
நான் நடனம் ஆடறதை நீ பார்த்தது இல்லையே?
எங்கே ஆடு பார்க்கலாம்
எலி பிடிக்க போகும்போது சகுனம் சரியில்லை!
எப்படி?
பூனை குறுக்கே போகுதே!
ரொம்ப நாளா உன்னை பார்க்க முடியலியே எந்த ஊருக்கு போயி இருந்தே?
யானைகவுனிக்கு!
அண்ணே! அங்கே என்னத்தை உருட்டி சாப்பிட்டுகிட்டு இருக்கே?
எலிமிச்சம் சாதம்!
அண்ணே! உனக்கு பிடித்தமான தீவு எது?
அந்தமான் தீவு!
அண்ணே! அதோ பார் நம்மை மாதிரியே ஒருத்தன் தாடி மீசையோடு வர்றான்
என்ன கரடி விடறே?
கடலூர் கன்னியப்பன்



ஒரு கண், இரு

முன்னொரு காலத்தில் ஒற்றைக் கண் பெண்மணி ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவளுக்கு மூன்று பெண் குழந்தைகள் பிறந்தன. அவர்கள் வரிசைப்படி ஒன்று, இரண்டு, மூன்று கண்களுடையவர்களாயிருந்தனர். முதலாவது மூன்றாவது பெண்கள் இருவருக்கு மட்டும் நெற்றிக் கண்கள் வேறு இருந்தன.

நடுவிலிருந்த இரண்டாவது பெண் சாதாரண மனிதர்கள் போல இரண்டு கண்களுடையவளாய் இருந்ததால், அவளை மற்றப் பெண்கள் வெறுத்து ஒதுக்கினார்கள்.

பெற்ற தாயும் அவர்களுடன் சேர்ந்து கொண்டாள். மூவரும் சேர்ந்து அவளது துணிமணிகளைத் தூக்கி வெளியில் எறிந்தார்கள். சாப்பிட எதுவுமே தராமல் அவளைப் பட்டினி போட்டு வாட்டினார்கள். சொல்ல முடியாத அளவு கொடுமைப்படுத்தினார்கள்.

பாவம், அந்த இரண்டு கண் பெண்ணை அவள் குடும்பத்தார் ஆடுகளை மேய்த்து வரச் சொல்லிக் காட்டுக்கு விரட்டினார்கள். மிகவும் கொஞ்சமாகச் சாப்பாடு கொடுத்தனுப்பினார்கள். அதனால் அவளுக்குப் பசி தீரவில்லை. கையிலிருந்த உணவும் தீர்ந்து போய் என்ன செய்வதென்று தெரியாமல் அவள் அப்படியே ஒரு கல்லின் மேல் உட்கார்ந்து அழ ஆரம்பித்தாள்.

அழுதழுது வீங்கிய கண்ணோடு நிமிர்ந்த அந்தப் பெண்ணின் எதிரில் ஒரு தேவதை தோன்றினாள். சிரித்த முகத்தோடு, ''பெண்ணே! உனக்கென்ன கவலை? ஏன் இப்படி அழுகிறாய்?'' என்று ஆதரவோடு வினவினாள்.

உடனே இவளும், ''பெரிய காரணம் ஒன்றுமில்லை. என்னுடைய இரண்டு கண்கள்தான் காரணம். என் குடும்பத்திலிருக்கும் எல்லோருக்கும் ஒரு கண், மூன்று கண்களிருக்கும். எனக்கு மட்டும் சாதாரண மனிதர்கள் போல இரண்டு கண்கள். ஆகையால் என் குடும்பத்தார் என்னை வெறுத்து ஒதுக்கி விட்டார்கள். சரியான உணவு கொடுக்க மாட்டார்கள். போனால் போகட்டுமென்று ஏதோ கொஞ்சம் ரொட்டித் துண்டுகளைக் கொடுத்தனுப்பினார்கள். அது என் பசியைத் தீர்க்கவில்லை. அதனால்தான் அழுகிறேன்.

அதைக் கேட்ட தேவதை சொன்னது: ''கவலைப்படாதே. இந்த ஆட்டைப் பார்த்து நான் சொல்லிக் கொடுக்கும் மந்திரத்தைச் சொல்லு,

''சின்ன ஆடே, அழுதிடு
உண்ணும் மேசைக் கொண்டு வா!''

— இப்படிச் சொன்னால் போதும். உன் முன்னால் அழகான சின்ன மேசையும் அதன் மேல் அழகான வெள்ளை விரிப்பில் விதவிதமான உணவு வகைகளும் தோன்றும். நீயும் உனக்குத் தேவையான அளவு உணவை எடுத்து உண்டு பசியாறலாம். சாப்பிட்டு முடித்ததும் திரும்பவும் இந்த ஆட்டைப் பார்த்து,

மூலம்: க்ரிம் சகோதரர்கள்

கண், முக்கண் சகோதரிகள்

'சின்ன ஆடே, அமுதிடு
உண்ணும் மேசைக் கொண்டு போ!'

என்று சொல்லு. சின்ன டேபிள் மறைந்து விடும்,'' என்று எல்லா வற்றையும் சொல்லிக் கொடுத்து விட்டுத் தேவதை மறைந்து விட்டது.

இரட்டைக் கண்ணியான அந்தச் சின்னப் பெண்ணுக்கு உடனே ஆவல் பொங்கியது. பசி வேறு தாங்க முடியவில்லை. உடனே நாம் அந்த மந்திரத்தைச் சொல்லிப் பார்த்தால் என்ன என்று ஆட்டைப் பார்த்து,

''சின்ன ஆடே அமுதிடு
உண்ணும் மேசைக் கொண்டு வா''

என்றாள். அவ்வளவுதான் உடனே ஒரு சின்ன டேபிளும், அதன் மேல் வெள்ளை விரிப்பில் விதவிதமான உணவுப் பண்டங்களும் தோன்றின.

இரட்டைக் கண் பெண் சாப்பிடுவதற்கு முன் கடவுளுக்கு நன்றி சொல்லும் பிரார்த்தனையை ஒழுங்காகச் சொல்லி விட்டுப் பிறகே சாப்பிட ஆரம்பித்தாள். வயிறு கொள்ளும் வரை உண்டாள். பிறகு டேபிளை மறையச் செய்யும் மந்திரம்.

''சின்ன ஆடே அமுதிடு
உண்ணும் மேசைக் கொண்டு போ!''

என்றதும் டேபிளும் மறைந்து விட்டது.

'அப்பாடி! வீட்டை விட்டு விரட்டினாலும் நமக்கு இனிமேல் கவலையில்லை,' என்று சந்தோஷமாக நினைத்துக் கொண்டே வீடு திரும்பினாள்.

மாலை வீடு வந்ததும் அவளுடைய சகோதரிகள் வழக்கம் போல வேண்டாத மீந்து போன துண்டு ரொட்டிகளை வைத்திருந்தார்கள். வயிறு முட்ட நல்ல உணவைத் தின்றிருந்த அவள் அந்த ஊசல் ரொட்டியைச் சீந்தவேயில்லை. அப்படியே விட்டு விட்டாள்.

இப்படியே தினமும் வெளியில் நல்ல உணவு சாப்பிட்டு முடித்து, வீட்டில் ஒன்றையும் தொடாமல் இருந்தாள். முதலில் கொஞ்ச நாட்கள் அதைப் பொருட்படுத்தாத அவள் குடும்பத்தார், சந்தேகிக்க ஆரம்பித்தார்கள். 'இவளுக்கு எங்கேயோ நல்ல உணவு கிடைத்து விடுகிறது; அதனால்தான் நம் வீட்டு உணவைத் தொடுவதில்லை,' என்று ஊகித்தார்கள்.

அடுத்த நாள் அவளுடன் அவள் அக்காவான ஒற்றைக் கண்ணியை உளவு பார்க்க அனுப்பி வைத்தாள் அவள் தாய்.

இரட்டைக் கண் பெண்ணுக்கு அவர்கள் நோக்கம் தெரிந்து விட்டது. இருந்தாலும் வேறு வழியின்றி ஒற்றைக் கண்ணியுடன் ஒன்றாகக் கிளம்பிப் போனாள்.

''வா ஒற்றைக் கண் அக்கா, நாம் இருவரும் உட்கார்ந்து கொள்வோம். நான் உனக்காக ஒரு பாட்டுப் பாடுகிறேன்'' என்று அவளை மயக்கும் பாட்டுப் பாடினாள்.

தமிழில்: எஸ். சித்ரா

''ஒற்றைக் கண் அக்கா!
கண் திறக்காதே!
ஒற்றைக் கண் அக்கா,
கண்ணை மூடிக்கோ!''

— இப்படிப் பாடியதுதான் தாமதம், ஒற்றைக் கண்ணி நன்றாகப் படுத்துத் தூங்கி விட்டாள்.

உடனே இரட்டைக் கண் பெண் தன் பசியாற மந்திரம் ஜபித்தாள்.

**''சின்ன ஆடே அழுதிடு.
உண்ணும் மேசைக் கொண்டு வா!''**

அவ்வளவுதான் வழக்கப்படி உணவுடன் மேசை தோன்றியது. அவளும் தன் வயிறார உணவுண்டு திரும்ப,

**''சின்ன ஆடே அழுதிடு.
உண்ணும் மேசைக் கொண்டு போ!''**

என்றதும் கண் சிமிட்டும் நொடிப் பொழுதில் டேபிளும் மறைந்தது.

இரட்டைக் கண் பெண் வயிறு நிரம்பியதும் அக்கா ஒற்றைக் கண்ணியை மெல்லத் தட்டி எழுப்பினாள்.

வீட்டுக்கு வந்த இரட்டைக் கண் பெண்ணும் வழக்கம் போல உணவைத் தொடாமல் இருந்தாள். அவள் அம்மா ஒற்றைக் கண் பெண்ணிடம், ''நீ கண்காணித்தாயா? ஏன் உணவு வேண்டாமென்கிறாள்?'' என்று கேட்டபோது அவளால் காரணம் கூற முடியவில்லை.

''அம்மா, அங்கு நல்ல காற்று வீசியது. என்னால் விழித்துக் கொண்டிருக்க முடியவில்லை. அப்படியே நன்றாகத் தூங்கி விட்டேன். என்னை மன்னிச்சுக்கோம்மா,'' என்று கெஞ்சினாள்.

இவள் இனிமேல் லாயக்கில்லை என்று கருதி மூன்று கண்ணுடைய இளையவளை அழைத்து, ''நீ கூடவே இருந்து இரண்டு கண் அக்காவைக் கவனி. அவளுக்கு யாராவது உணவு கொடுக்கிறார்களா என்று கண்காணித்து வா,'' என்று உடன் அனுப்பி வைத்தாள்.

களைத்து வந்த இருவரும் வழக்கம் போல ஒரு கல்லின் மேல் அமர்ந்தார்கள். இரண்டு கண் பெண்ணும் தனக்குத் தெரிந்த தூங்கச் செய்யும் மந்திரப் பாட்டைப் பாடினாள். ஆனால் இந்த முறை கொஞ்சம்





தவறு செய்து விட்டாள்.

பாடலின் ஒரு வரியை மறந்து விட்டாள். அதனால் மூன்று கண் பெண்ணும் தன் இரண்டு கண்களை மட்டும் மூடிக் கொண்டு தூங்குவது போல் பாவனை செய்தாள். பாக்கியிருந்த ஒரு கண் திறந்து கொண்டு எல்லாவற்றையும் கண்காணித்துக் கொண்டு இருந்தது.

இருவரும் மாலை வீடு திரும்பியதும் வழக்கம் போலவே உணவு வேண்டாமென்றாள் இரண்டு கண் பெண். காரணம் என்னவென்ற கதையை மூன்று கண் பெண் தன் அம்மாவிடமும், அக்காவிடமும் விவரமாகக் கூறினாள். ஆட்டிடம் கூறும் பாட்டையும், டேபிளின் மேல் உணவு தோன்றும் அற்புதத்தையும் பிட்டுப் பிட்டு வைத்தாள்.

''நல்லவேளையாக நான் இரண்டு கண்ணை மூடிக் கொண்டு தூங்கி, ஒரு நெற்றிக் கண்ணால் எல்லாவற்றையும் பார்த்தேன்,'' என்று முடித்தாள்.

ஆத்திரமடைந்த அம்மாக்காரியும் இரண்டு கண் பெண் தன்னுடன் கூட்டிப் போகும் ஆட்டை வெட்டிப் பொலி போட்டு விட்டாள்.

மிகவும் வேதனையாகப் போய் விட்டது இரண்டு கண் பெண்ணுக்கு. இனி என்ன செய்வதென்று தெரியாமல் காடு சென்று ஒரு பாதையில் உட்கார்ந்து ஓவென்று அழுதாள்.

முன்பு வந்து உதவிய அதே தேவதை மறுபடியும் தோன்றியது. ''ஏன் பெண்ணே அழுகிறாய்?'' என்று வாஞ்சையோடு வினவியது.

''நீங்கள் எனக்கு முன்பு பசியாற்றிக் கொள்ள உதவினீர்கள். அம்மா அந்த ஆட்டையே வெட்டி விட்டார்கள். நான் இனிமேல் பசிக் கொடுமையை அனுபவிக்க வேண்டும். இதை நினைத்துத்தான் அழுதேன்.''

தேவதையும் ஆறுதலாக, ''அழாதே பெண்ணே! நான் சொல்கிறபடி செய். உனக்கு நல்லதே நடக்கும். உன் சகோதரிகளிடம் போய் வெட்டப்பட்ட ஆட்டின் இதயத்தை மட்டும் தரும்படி கேட்டு வாங்கிக் கொள். அதைக் கொண்டு போய்

உன் வீட்டு வாசலுக்கு நேரே உள்ள பூமியில் புதை. அது உனக்குத் திரும்ப அதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும்,'' என்று சொல்லி விட்டு மறைந்து விட்டாள்.

இரண்டு கண் பெண் வீடு திரும்பித் தன் சகோதரிகளைப் பார்த்து, ''அன்புச் சகோதரிகளே! எனக்கு இறந்த ஆட்டின் உடலிலிருந்து அதன் இருதயத்தை மட்டும் தாருங்கள் போதும்,'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

இதைக் கேட்ட அவள் சகோதரிகள் ஓஹோ என்று சிரித்தார்கள். பிறகு, ''இனிமேல் எங்களை எதுவும் கேட்க மாட்டாயென்றால் சரி. எடுத்துக் கொள் ஆட்டு இருதயத்தை,'' என்று தூக்கியெறிந்தார்கள்.

இரண்டு கண் பெண் ஆட்டு இருதயத்தை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டாள். எல்லோரும் தூங்கிய பிறகு மெல்ல அந்த இருதயத்தை எடுத்துக் கொண்டு வீட்டின் முன் வாசலுக்கு நேரே பூமிக்கடியில் தேவதை கூறியது போலவே புதைத்தாள்.

அடுத்த நாள் எல்லோரும் விழித்துப் பார்த்த போது என்ன அதிசயம்! இதுவரை யாருமே பார்த்தறியாத பெரிய அழகான மரம் வெள்ளி இலைகளும் தங்கப் பழங்களும் கொண்டதாகப் பூத்துக் குலுங்கிக் கொண்டு நின்றது.

மரத்தைப் பார்த்து எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. இரண்டு கண் பெண்ணுக்கு மட்டும் உண்மை விளங்கியது. தான் ஆட்டின் இருதயத்தைப் புதைத்த இடத்திலிருந்துதான் மரம் வளர்ந்திருக்கிறதென்று!

ஒற்றைக் கண் பெண்ணைத் தாயார் அழைத்து, ''பெண்ணே! மரத்திலேறித் தங்கப் பழத்தைப் பறித்துப் போடு,'' என்றாள்.

அவளும் உடனே ஏறி ஒரு பழத்தைப் பறிக்கக் கை வைத்தாள். அவளால் ஒரு பழத்தைக் கூடப் பறிக்க முடியவில்லை.

அடுத்து மூன்று கண் பெண் பழம் பறிக்க மரத்திலேறினாள்.

ஊஹூம், அவளாலும் ஒரு பழத்தைக் கூடப் பறிக்க முடியவில்லை. தோல்வியைத் தழுவி இறங்கினாள்.

இரண்டு கண் பெண் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டு பேசாமல் இருந்தாள். பிறகு, ''நான் போய்ப் பறித்துப் பார்க்கட்டுமா?'' என்று கேட்டாள்.

இரண்டு சகோதரிகளும், ''உன்னுடைய இரண்டு கண்களோடு நீ நிச்சயம் ஜெயிப்பாய் என்று நம்புகிறோம்,'' என்றார்கள்.

இரு கண் பெண் மெல்ல மரத்திலேறித் தங்கப் பழங்களை ஒவ்வொன்றாக வெற்றிகரமாகப் பறித்துக் கொண்டாள். ஒரு பெரிய கூடை நிறையக் கொள்ளும் அளவு பழங்களைப் பறித்தாள். தங்கப் பழங்களைப் பெற்ற அவள் குடும்பத்தார் அவளை நல்ல விதமாகத்தானே கவனிக்க வேண்டும்? ஆனால் அவர்களோ நேர்மாறாக அவள் மேல் இன்னும் பொறாமை கொண்டு

போடுவது 3 பிரதிகள் வாசகர்கள் 2000க்கு மேல்!

உண்மைதான்.

பத்திரிகைகளில் வெளியான தங்கள் படைப்புக்களின் தொடர்பாக இரு மாணவ நண்பர்கள் இணைந்து கையெழுத்துப் பத்திரிகை ஒன்றைத் தொடங்கத் திட்டமிட்டனர். முதலில் வெறுப்பான வரவேற்பு. கையிலெடுத்துப் படிக்கவே கூசினர்; வெளியிடக் காசில்லாமல் உள்ளூர் வியாபாரிகளிடம் விளம்பரம் பிடிக்கத் திண்டாடினர். எல்லாம் சிறிது காலம்தான்! பத்திரிகையின் தரம் எல்லாத் தடைகளையும் வென்று முன்னேற வழிகாட்டியது.

இன்று படைப்பாளிகள் எழுதிக் குவித்து அனுப்புகிறார்கள்! விளம்பரம் கொடுக்கப் போட்டி வேறு! இன்று 2000க்கு மேற்பட்ட வாசகர்கள் 'பூங்குயிலை'ப் படித்து மகிழ்கிறார்கள். இதன் வெளியீட்டாளர்களான வந்தவாசி டி. எல். சிவகுமார், சா. இரா. மணி இருவரது முயற்சியும் எழுத்தார்வமிக்க மாணவ நண்பர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும்.



* சா. இரா. மணி

* டி. எல். சிவகுமார்

கொடுமைப்படுத்தினார்கள்.

ஒரு நாள் மூன்று சகோதரிகளும் மரத்தினடியில் நின்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது அந்த வழியாக ஓர் அழகான ராஜகுமாரன் குதிரை மேல் ஏறி வந்து கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்ததும் இரண்டு சகோதரிகளும் இரண்டு கண் சகோதரியைப் பார்த்து, ''பெண்ணே நீ பறித்த தங்கப் பழங்களை எடுத்துக் கொண்டு ஒளிந்து கொள். யாரோ நம்மை நோக்கி வருகிறார்கள்,'' என்று எச்சரித்து, இரண்டு கண் பெண்ணை மறைத்து வைத்தார்கள்.

மரத்தினருகே வந்த இராஜகுமாரன் குதிரையிலிருந்து இறங்கினான். அவர்களை நெருங்கி, ''பெண்களே, இவ்வளவு அழகான மரம் இதுவரை நான் பார்த்ததேயில்லை. யாருடையது இது? இதிலிருந்து ஒரு சின்னக் கிளையை எனக்குப் பறித்துக் கொடுப்பவர்களுக்கு நான் அவர்கள் என்ன கேட்டாலும் தரத் தயாராயிருக்கிறேன்,'' என்றான்.

இரண்டு பேரும் மரம் தங்களுடையதுதான் என்று சொன்னார்கள். முதலில் ஒற்றைக் கண்ணி மரத்திலேறிக் கிளையை முறிக்க முயன்றாள். கூடவே மூன்று கண்காரியும் சேர்ந்து முயற்சி செய்தாள். வழக்கம் போல் தோல்விதான்.

இதைப் பார்த்த வீரன், ''என்ன அதிசயம்! மரம் உங்களுடையது என்கிறீர்கள்; ஆனால் அதிலிருக்கும் சிறு இலையைக் கூட உங்களால் பறிக்க முடியவில்லையே! வெட்கம்!'' என்றான்.

மரத்தின் பின்னால் இவர்கள் செய்வதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த இரண்டு கண் பெண்ணுக்கு வேதனையாக இருந்தது. வீரனிடம் பொய் சொல்லிக் கொண்டிருக்கும் இரண்டு சகோதரிகளையும் நினைத்தால் வெறுப்பாயிருந்தது. தான் பறித்து வைத்திருந்த பழங்களிலிருந்து இரண்டை எடுத்து வீரனின் முன் உருட்டி விட்டாள். தங்கப் பழங்களும் நேராக அவன் காலடியில் விழுந்தன.



பழங்களைப் பார்த்த இராஜகுமாரன் சகோதரிகளிடம், ''இது எப்படி வந்தது?'' என்று வினவினான்.

ஒற்றைக் கண், மூன்று கண் சகோதரிகள் இருவரும் அலட்சியமாக, ''இதுவா? இது எங்கள் இரண்டு கண் சகோதரி பறித்து வைத்திருந்தது. அவள் பார்ப்பதற்குச் சாதாரணப் பெண் போலிருப்பாள். அதனால்தான் உங்களுக்கு அறிமுகப் படுத்தவில்லை,'' என்றார்கள்.

இராஜகுமாரனுக்கோ அந்தப் பெண்ணைப் பார்த்தேயாக வேண்டும் என்று ஆவல். ''இரண்டு கண் பெண்ணே! என் முன்னே வா,'' என்று அழைத்தான்.

அவளும் சந்தோஷமாக அவன் முன்னே தோன்றினாள். அவளைப் பார்த்த இராஜகுமாரனுக்கு அதிசயமாகப் போய் விட்டது. அவள் அழகில் மயங்கினான். ''சின்னப் பெண்ணே, எனக்கு மரத்திலிருந்து ஒரு சிறு கிளையைப் பறித்துத் தர முடியுமா?'' என்று கேட்டான்.

''ஓ, நிச்சயமாக. என்னால் முடியும். இந்த மரம் என்னுடையதுதான்.''




கலை எழில் மிக்க
கிறிஸ்துமஸ் கேக்!

கலைஞனுக்குக் கல்லும், மண்ணும், மரமும் புதையல் என்பார்கள். இவற்றோடு 'கேக்'கையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று சாதித்திருப்பவர்கள்



நாகர்கோவிலில் உள்ள பேக்கரியாளர்கள். இங்கு நீங்கள் காணும் கேக் வகைகள் எல்லாம் கடந்த கிறிஸ்துமஸ் பண்டிகையில் அவர்களது கைவண்ணமே. வெட்டி எடுக்கப்பட்ட தர்பூசணிப் பழம் திகைக்க வைக்கிறது.

— தகவல், படங்கள்:
குளச்சல் இப்ராஹீம்.



என்று சொல்லி விட்டு, மரத்திலேறி, ஒரு குறையுமில்லாமல் கிளை ஒன்றைப் பறித்து எடுத்து வந்து வீரனிடமும் கொடுத்தாள்.

கிளையைப் பெற்றுக் கொண்ட வீரன், ''இதற்குப் பிரதியாக நான் உனக்கு என்ன கொடுக்க வேண்டும்? எது வேண்டுமானாலும் தயங்காமல் கேள், தருகிறேன்,'' என்றான்.

முதலில் சற்றுத் தயங்கிய இரண்டு கண் பெண் பிறகு துணிந்து கேட்டு விட்டாள். ''இங்கே நான் தினமும், காலையிலிருந்து இரவு வரை பசியாலும், தாகத்தாலும் வாடுகிறேன். அன்பிற்காகவும், ஆதரவுக்காகவும் ஏங்குகிறேன். என்னை இந்த நரகத்திலிருந்து விடுவித்து, உங்களுடன் அழைத்துச் சென்று விட்டால் நான் பாக்கியசாலியாக இருப்பேன்.''


அந்தப் பெண்ணின் பரிதாப நிலைமையை இராஜகுமாரன் புரிந்து கொண்டு, உடனடியாக அவளைக் கல்யாணம் செய்து கொள்ளவும் ஏற்பாடு செய்தான்.

இரண்டு கண் பெண்ணை இராஜகுமாரன் அழைத்துச் சென்ற அடுத்த வினாடி அந்த மரமும் அவளுடனே மறைந்து விட்டது! அது அவளுக்காகத் தோன்றிய மரம்தானே?


காலங்கள் மாறின. இரண்டு கண் பெண் அரண்மனையில் சுகபோகமாக வாழ்ந்து வந்தாள். அவளைத் தேடி ஒரு நாள் வயதான இரண்டு பெண்கள் பிச்சை கேட்டு வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் அது அவர்கள் சகோதரிகள்தான் என்று இரண்டு கண் பெண் அறிந்து கொண்டு விட்டாள்.


அவர்களுக்கு நல்ல துணிமணிகள், உணவு வகைகள் எல்லாம் கொடுத்து அன்பாக உபசரித்தாள். தன்னுடனே தங்கியிருக்கும்படி கேட்டுக் கொண்டாள்.

அவர்கள் இருவரும், 'நம் இரண்டு கண் சகோதரி எவ்வளவு அன்பாக நம்மைக் கவனிக்கிறாள்! நாம் அவளை எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தி வதைத்தோம்!' என்று நினைத்து வருந்தித் திருந்தினார்கள்.




இங்கிலாந்து தேசத்தில் ஹென்றி என்ற மன்னன்... திறமையற்றவன்...
நிலப் பிரபுக்களே! நாட்டை ஆள உங்களைத் தான் நம்பியிருக்கிறேன்... வரி வசூலில் உதவுங்கள்...
நாட்டுக்கு உழைத்த காட்டு ராஜா!
நாடெங்கிலும் பிரபுக்கள் மக்களை வருத்தினார்கள்...
வரி செலுத்தத் தாமதித்த இவனைச் சிறையில் போடு!
பிரபுக்களின் அட்டகாசத்தால் பாதிக்கப்பட்டவர்களில் ராபின் ஒருவன்.
ஒரு மதகுரு என் நிலம் முழுவதையும் எடுத்துக் கொண்டார்; ஒரு நிலப் பிரபு, பொய்க் குற்றம் சாட்டி என் தந்தையைக் கொன்றார்...
ராபின் கிராம மக்களிடம் பேசினான்...
...இந்த நாட்டில் நீதி எங்கே இருக்கிறது!
கதை: ஆனந்தி படம்: விஜய
மக்கள் எச்சரித்தனர்...
ராபின் ஜாக்கிரதை! கிளர்ச்சியைத் தூண்டுவது போல் நீ பேசினால் உன்னை விசாரணை இன்றியே தூக்கில் போட்டு விடுவார்கள்!


ராபினின் காதலி மரியன், செய்தி அறிந்தாள்...
மரியன்! ராபினைத் தேசத்துரோகி என்று அறிவித்துவிட்டார்கள்..
ஐயோ! ராபின் இப்போது எங்கே..?
காட்டுக்குத் தப்பி ஓடி விட்டதாகச் சொல்கிறார்கள்.
மரியனின் தந்தை...
ராபினை நீ மறந்துவிடு! அவன் பிடிபட்டால் தூக்குத் தண்டனைதான். ஒரு ராஜ துரோகியை நீ எப்படி மணந்து கொள்ள முடியும்?
மரியன் வாதாடினாள்...
பிரபுக்களின் கொடுங்கோன்மையை எதிர்த்து ராபின் போராடுகிறாரே தவிர, அவர் தேசத்துரோகியல்ல; ராஜவிசுவாசம் உள்ளவர்தான்.
அதைப்படியோ, நீ ஜாக்கிரதையாய் இரு!
தோழி செய்தி கொண்டு வந்தாள்...
ராபின் தன் நண்பர்கள் பலருடன் ஷெர்வுட் காட்டில் ஒளிந்து வாழ்கிறாராம்! இப்போது ராபின் ஹூட் என்று மக்கள் அவரை அழைக்கிறார்கள்!



காட்டில் ராபின், நண்பர்களுடன்...
இனி இந்தக் காடுதான் நம் வீடு....
உணவு, உடைக்கு என்ன செய்வது?
அதற்கு ஒன்றும் கஷ்டமில்லை. ஏழைகளை வருத்தி வரி பிடுங்கும் நிலப்பிரபுக்கள் இந்தக் காடு வழியாக அடிக்கடி போவார்கள்...
இனி அவர்கள்தான் நம் இலக்கு!
நம் உடைமைகளை அநியாயமாகப் பறித்துக் கொண்டவர்களுக்குப் பாடம் கற்பிப்போம்!
ஒருநாள்... லண்டன் நகருக்கு விற்பனைக்காக ஒரு பிரபு துணி மூட்டைகளை அனுப்ப....
தாக்குங்கள்!
மழையாக அம்புகள் பொழிய....
ஐயோ! ராபின்ஹூட்!
ஓடுங்கள்! ஓடுங்கள்!


பிரபுவின் ஆட்கள் தங்கள் பட்டாடைகளைப் போட்டுவிட்டு ஓட...
எல்லாம் பச்சை நிறத் துணி!
கானகத்தில் மறைந்து வாழும் நமக்கு ஏற்ற நிறம்!
அன்று முதல் ராபின்ஹூட்டும் அவன் தோழர்களும் பச்சை நிற உடைகளையே அணிந்தனர்...
நம் ஒற்றுமையே நம் பலம். லண்டனுக்குப் போகும் வியாபாரப் பொருள்களைத் தொடர்ந்து கொள்ளை அடிப்போம்!
வேட்டை ஆடுவோம்! காட்டில் பழங்களுக்கும் இறைச்சிக்கும் குறைவில்லை.
ஏழைகளுக்கு உதவுவோம்!
ஆனால் ஒன்று! ஏழைகள், முதியவர்கள், பெண்கள் ஆகியோருக்கு ஒரு தீங்கும் செய்யக் கூடாது!
பணம் பறிப்போம்! மாறு வேடத்தில் நகருக்குச் சென்று, தேவையானவற்றை வாங்கி வரலாம்.
ஒருநாள் ராபின் ஹூட் ஓர் ஓடையைக் கடந்த போது...
இது குறுகலான பாலம்; தெரியவில்லையா? திரும்பிச் செல்! எனக்கு வழி விடு!
நீ போயேன், திரும்பி!



வில்லில் அம்பு தொடுத்தான் ராபின்...
மரியாதையாகத் திரும்பிச் சென்று வழி விடுகிறாயா, இல்லை....
ஒற்றைக் கழியுடன் வந்தவன் மீது அம்பு தொடுப்பதா? நீயும் ஒரு கழி கொண்டு வா, நான் இங்கேயே காத்திருக்கிறேன்!
ராபின் அவ்வாறே செய்தான். இருவரும் நடுப் பாலத்தில்...
புதியவன் ராபினைத் தண்ணீரில் தள்ளி விட...
ஹ..ஹ..ஹா!
ராபின் கோபப்படவில்லை; வீரத்தை மெச்சினான்...
மாவீரனாயிருக்கிறாயே... கரையேறக் கை கொடு! ... யார் நீ...?
அரசருக்குச் சொந்தமான ஏரியில் மீன் பிடித்ததற்காக என்னைச் சிறையில் தள்ளப் பார்த்தார்கள்...


...நான் தப்பி ஓடி வந்து விட்டேன். என் பெயர் ஜான்லிட்டில்... ஒரே பசி!
ராபின் தன் ஊது குழலை எடுத்து மூன்று முறை ஊதினான்...
நண்பர்கள் ஒலி கேட்டு ஓடிவந்தனர்...
பசியோடு இவ்வளவு ஜோராகச் சிலம்பமாடினாயே.....!
நண்பர்களே, இந்த வீரமான மனிதன் பெயர் லிட்டில் ஜான்! நம்மைப் போலவே இவனும் அரசனுடைய வீரர்களிட மிருந்து தப்பி வந்தவன்...
லிட்டில் ஜானுடன் ராபினும் நண்பர்களும் உணவைப் பகிர்ந்து கொண்டனர்...
எளிய உணவு...
...ஆனால் ருசியான, ஆரோக்கியமான உணவு!
உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால் உங்களுடனேயே சேர்ந்து வாழ ஆசைப்படுகிறேன்...
லிட்டில் ஜான் வாழ்க. அவன் வரவு நல்வரவாகுக!



அரசனுடைய கொடுங்கோன்மையையும் நிலப் பிரபுக்களின் துன்புறுத்தலையும் தாங்க முடியாமல் விட்டில் ஜானைப் போலவே பலர் காட்டுக்கு வந்து ராபினுடன் சேர்ந்து கொண்டனர்...
என் பெயர் வில்லியம்...
வருக... வாழ்க!
வில்லியம் வந்து சேர்ந்ததைக் கொண்டாட விளையாட்டுப் போட்டி...
மலர் வளையத்தின் வழியே அம்பு பாய்ந்து, மரத்தில் உள்ள இலக்கைத் தாக்க வேண்டும்!
மச் எய்த அம்பு, இலக்கை மையத்தில் தாக்க...
ஆ!
பிரமாதம்!
வெற்றி எனக்கே!
அப்போது விட்டில் ஜான்...
கொஞ்சம் இருங்கள்! நானும் முயன்று பார்க்கிறேன்....
விட்டில் ஜான் செலுத்திய அம்பு, மச் எய்த அம்பை இரண்டாகப் பிளந்து கொண்டு இலக்கைத் துளைத்தது!
ஆஹா!
அற்புதம்!


அப்போது வில்லியம்...
இந்த மாதிரி அம்பு எய்யக்கூடிய இன்னொருவரை எனக்குத் தெரியும்... அவர்தான் டக் பாதிரியார்! ஏழைகளிடம் அன்பு காட்டுவதால் ஒதுக்கப் பட்டவர்!
ராபின் யோசித்து...
அப்படியா? நமக்கும் இங்கே ஒரு பாதிரியார் தேவைதான். அவரை குண்டுகட்டாகத் தூக்கி வந்து விட்டால் என்ன....?
ராபின், நண்பர்களுடன் பாதிரியாரைப் பார்க்கப் போனான். நண்பர்கள் மறைந்திருக்க ராபின்...
பாதிரியாரே, உமது முதுகில் என் கத்தி பாயக்கூடாது என்றால், என் கால் நனையாமல் இந்த ஓடையைக் கடக்க என்னைத் தூக்கிச் செல்லுங்கள்!
டக் பாதிரியார் ராபினின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்...
நீர் ஏழைகளுக்கு உதவி, கெட்ட பெயர் சம்பாதித்துக் கொள்கிறீராமே?
ஓடையின் மறுகரையில் ராபினைத் தரையில் இறக்கிய பாதிரியார், அவனைக் காலால் இடறி விட்டு விழச் செய்தார்...
அதைக் கேட்க நீ யார்?



ராபின் கரத்திலிருந்து சிதறிய கத்தியைப் பாதிரியார் எடுத்துக் கொண்டு . . .
இப்போது நீ என்னை என் வீடுவரை தூக்கிப் போக வேண்டும் . . .
ராபின் அவ்வாறே செய்தான் . . .
அப்பாடா! என்ன கனம்!
வீட்டு வாசலில் பாதிரியாரை இறக்கி விட்டு விட்டுத் தன் குழலை எடுத்து ஊதினான் ராபின் . . .
பூம்பூம்பூம்!
அங்கும் இங்கும் ஒளிந்திருந்த ராபினின் நண்பர்கள் ஓடி வர . . .
பாதிரியாரே! உங்களைத் காட்டுக்குத் தூக்கிச் செல்ல வந்தோம்!
அப்பனே! எனக்கும் நண்பர்கள் உண்டு!
பாதிரியார் விசில் அடித்ததும் இருபது நாய்கள் பாய்ந்து வந்தன . . .
ஆ! வேட்டை நாய்கள்! தற்காப்புக்கு இவை மீது அம்பு தொடுக்க வேண்டியதுதான்!


ராபினும் நண்பர்களும் எய்த அம்புகளை நாய்கள் குறுக்காக வாயில் பற்றின!
அற்புதம்!
பாதிரியாரே! நாய்களைத் திரும்ப அழைத்துக் கொள்ளுங்கள்!
ராபின் நேசக் கரம் நீட்டினான்...
நான் ராபின்ஹூட். எங்களுக்கு ஒரு பாதிரியார் வேண்டும்...
அப்படி நயமாகக் கேட்டால் நானும் உன்னுடன் வரத் தயார்!
இரக்கமற்ற ஜமீன்தார்களுக்குச் சேவகம் செய்வதைவிட 'ராஜத்துரோகி' என்ற குற்றச்சாட்டைத் தாங்குவது பெரிய கஷ்டமில்லை!
டக் பாதிரியாருடன் கானகம் வந்து சேர்ந்தான் ராபின்... ஒரு நாள்...
யாரது? எங்கே வந்தாய்? எங்களை வேவு பார்த்துப் போகவா?
ராபின்! நான் உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்; உங்களுடன் சேர்ந்து கொள்ளத்தான்...
கத்தியை எடு! வீரத்தைப் பரிசோதிக்காமல் யாரையுமே நாங்கள் சேர்த்துக் கொள்வதில்லை!


இளைஞன் வீரத்துடன் போரிட்டான். ஆனால் வெகு சீக்கிரம் ராபினிடம் தோற்றுப் போனான்...
கத்திச் சண்டையில் நீ கற்றுக் கொள்ள வேண்டியது இன்னும் நிறைய இருக்கிறது!
இளைஞனின் கத்தியைத் தட்டிவிட்ட ராபின், அவனைச் சிறைப்படுத்தக் கட்டிப் பிடித்தான்.... இளைஞனின் குல்லாய் கழன்று விழ....
மரியன்! நீயா!
வியப்பு அடங்கியதும்....
எதற்காக வந்தாய்? மாறு வேடம் ஏன்?
எல்லாரும் போற்றிப் புகழும் ராபினைப் பார்க்கத் தான் வந்தேன்...
மக்களைக் கொடுமைப்படுத்தும் நிலப்பிரபுக்களையும் அதிகாரிகளையும் வழிமறித்துப் பணத்தைப் பறிக்கிறாயாம்...
'கொள்ளைக்காரன்' என்று பேர் வாங்கி விட்டேன்!
அந்தப் பணத்தைக் கொண்டு ஏழைகளுக்கு உதவுகிறாயாம்... 'ஏழை பங்காளன்' என்று உன்னை மக்கள் போற்றுகிறார்கள்...


அதுசரி, மாறுவேடம் எதற்கு..?
ஆண் வேடம் அணியாவிட்டால் ரோஜர் பிரபுவின் ஆட்கள் என்னை வீட்டை விட்டு வெளியேறவே அனுமதித்திருக்க மாட்டார்கள்...!
அதுயார் அவன், ரோஜர் பிரபு?
என்னை மணந்து கொள்ளப் போவதாக எண்ணியிருப்பவன்! அதற்கு என் அப்பாவின் சம்மதத்தைப் பெற்றுவிட்டவன்... என்னைச் சதா கண்காணிப்பவன்!
மரியன்! என்னை மணந்து கொள்கிறாயா?... காட்டில் வாழ்வது வசதியாக இராது...
ரோஜர்பிரபுவுடன் மாளிகையில் வாழ்வதும் நரகம்! உன்னுடன் காட்டில் வாழ்வதும் சொர்க்கம்!
டக் பாதிரியார், காட்டிலே திருமணம் நடத்தி வைத்தார்...
தலைவன் ராபின், வாழ்க!
தலைவி மரியன், வாழ்க!


நாட்டிங்ஹாம் கிராமத்தில் வட்டார அதிகாரி பந்தயங்கள் நடத்தினார்... குயவன் வேஷத்தில் ராபின் ஹூட்...
இதைவிட நன்றாக அம்பெய்த முடியாதா என்ன?
அரசு அதிகாரி, போட்டியில் பங்கு பெற ராபினுக்கு அனுமதி அளித்தார்...
ஏன், நீ முயன்று பாரேன்!
ஒன்றன் பின் ஒன்றாக மூன்று அம்புகள் இலக்கின் மையத்தைத் துளைக்க...
அபாரம்!
ஆச்சர்யம்!
குயவனுக்கே முதல் பரிசு!
வட்டார அதிகாரி சந்தேகித்து...
குயவா! உண்மையைச் சொல்! உனக்கு யார் வில் வித்தை கற்றுத் தந்தது?
ராபின் ஹூட்
ராபின் இருக்குமிடத்துக்கு என்னை அழைத்துப்போ! உனக்கு நூறு பொற்காசு தருவேன்!
அதற்கென்ன, ஆகட்டும்!




கொடுங்கோலனான அதிகாரியை ராபின் காட்டுக்குள் அழைத்துப் போக...
சாலையிலிருந்து வெகு தூரம் வந்து விட்டோமே?...
படையுடன் தானே வந்திருக்கிறீர்? பயமென்ன?
ராபின் தன் ஊது குழலை எடுத்து மூன்று முறை ஊதவும்
பூபூபூம்ம்ம்!
நாலாபுறமிருந்தும் ராபின் ஆட்கள் வந்து சூழ்ந்து கொண்டனர்...
ஐயோ! ராபின்ஹுட் ஆட்கள்! திரும்பி விடுவோம்!
ஓடாதீர்கள்! போரிடுங்கள்!
அந்தக் குழப்பத்தில் குயவன் நழுவிச் சென்று ராபினாகமாற, லிட்டில் ஜான்...
தப்பமுடியாது! சரணடைந்தால் விட்டுவிடுவோம்! குயவன் ராபினேதான்!
ஆ! ஏமாந்தேன்!
அரசு அதிகாரியின் படை பயந்து சரணடைய...
குதிரைகள், பொற்காசுகள் எல்லாவற்றையும் கொடுத்து விட்டு ஓடுங்கள்!
அதிகாரிக்குத் தங்கச் சங்கிலி உறுத்துகிறதாம்! கழற்றி விடுகிறேன்!


ராபின் பல மாறு வேடங்களில் வீர சாகசங்கள் புரிந்து, கொடுங்கோன்மையை எதிர்த்துப் போராடினான். ஏழை எளியோருக்குப் பெரிதும் உதவினான். அவன் புகழ் நாடெங்கும் பரவியது....
ஒருநாள் சந்தையில் ராபின் மாறு வேடத்தில் இருந்தபோது...
சேதி தெரியுமா? அரசன் ஹென்றி இறந்துவிட்டான்! இனி ரிச்சர்ட்தான் ராஜா!
செய்தியை உறுதிப் படுத்திக் கொண்டு ராபின் கானகம் திரும்பினான்.
நண்பர்களே! நமது வழிகள் தவறானவை. அவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது!
லிட்டில் ஜான் கோபமுற்று....
இதென்ன புதிய ஞானோதயம்?
கொடுங்கோன்மையை நாம் எதிர்த்தமட்டில் சரி; ஆனால் இப்போது ஆட்சி மாறிவிட்டது...
...ஹென்றி இறந்துவிட்டான். இனி ரிச்சர்ட்தான் மன்னர். நல்லவர். தர்மத்தின் ஆட்சி நடக்கும்...
வாழ்க, மன்னர் ரிச்சர்ட்!


ஒரு நாள் ராபினைக் காண, வேண்டுமென்றே கானக வழியில் சென்றார் ரிச்சர்ட்! சோதிப்பதற் கென்றே பேசினார்....
ஜாக்கிரதை! அந்தத் திருட்டுப் பயலுகள் இங்கேதான் வசிக்கிறார்கள்! பணம் பத்திரம்!
மாறுவேடத்தில் ராபினும் லிட்டில் ஜானும் வெளிப்பட்டு....
மன்னவா! கவலை வேண்டாம்! உங்களைப் பத்திரமாக வழிகாட்டி அழைத்துப் போகிறோம்!
யார் நீங்கள்?
எங்களை ராபின் அனுப்பி வைத்தார்... அவருக்குப் புதிய அரசரான உங்களிடம் ரொம்ப மரியாதை...
...கேட்பார் பேச்சைக் கேட்டு அவரை நீங்கள் தவறாக எடை போடக் கூடாது....
ராபின் நியாயங்களுக்காகப் போராடினான் என்பது எனக்குத் தெரியும்! மாறுவேடத்தில் கெடிக்காரன் என்றும் தெரியும்! எழுந்திரு, 'ஸர்' ராபின்!
'ஸர்' பட்டம் பெற்ற ராபின் வியப்புடன் எழுந்தான்...
ராபின்! நல்லாட்சி மலரவேண்டும்! இனி நீதான் இந்த வட்டார அதிகாரி!
நன்றி மன்னவா! தங்கள் நம்பிக்கை வீண் போகாது!

இசைக் கருவிகளின் பெயர் என்ன?


இங்கே தோலினால் ஆன இசைக் கருவிகள் இருக்கின்றன. இவற்றின் பெயர்களைக் கீழே எழுதுங்களேன்!



1




2




3




4



5



6



7

ஆழி

விடை 83ஆம் பக்கம்

4

ஒரு மரத்துப

வகுப்பு முடிந்ததும் அறிவியல் ஆசிரியை வகுப்பை விட்டுப் புறப்படுவதற்கு முன், சற்று நின்று எல்லா மாணவிகளையும் பார்த்தார்.

''இங்கே பாருங்க, நேற்று நடந்த பாரதியார் விழா சிறப்பாகத்தான் முடிந்தது. சந்தேகமே இல்லை. ஆனால் அந்தச் சந்தோஷத்திலேயே மிதந்து கொண்டு இன்றைய பாடங்களை விட்டுடாதீங்க. எனக்குத் தெரியும், ஒருத்தரும் இன்றைக்கு முழுக் கவனத்தோடு பாடத்தைக் கேட்கல்லே. விழாவைப் பற்றியே இனியும் பேசிக்கிட்டிருக்க வேண்டாம். இந்த வாரம் இன்ஸ்பெக்ஷன் இருக்கு, தெரியுமில்லே? அதையும் வெற்றிகாமா முடிச்சாகணும். எல்லாம் உங்க கையிலேதான் இருக்கு. நல்லாப் படியுங்க,'' என்று அவர் சொல்லி விட்டுப் போனார்.

அடுத்த பாட ஆசிரியை வருகிற வரை வகுப்பைக் கவனித்துக் கொள்ளப் பவித்ரா எழுந்து வந்து கரும்பலகை பக்கத்தில் நின்றாள்.

''ஏய், பவித்ரா! கரும்பலகை பக்கத்திலே பொன் கலரிலே நீ நிற்கிற போது, இன்னும் நீ எடுப்பாகத் தெரியறேடி,'' என்று சற்று உரக்கக் கத்தினாள் திவ்யா.

''வாயாடி! அமைதியாயிரு. ஆரம்பிச்சிடாதே,'' என்று அவளைச் சிரிப்போடு அடக்கினாள் பவித்ரா.

''ஆங், பெருமைதான். கொஞ்சம் பாராட்டிட்டாப் போதுமே, குஷிதான்,'' என்றாள் திவ்யா.

''என்ன... அவளும் பெண்ணில்லையா?'' என்றாள் ரம்யா குறும்பாக.

''சும்மா இருங்கடி. புவியியல் டீச்சர் அதோ வந்துக்கிட்டிருக்காங்க,'' என்று அவர்கள் வாயை அடக்கமுயன்றாள் வகுப்புத் தலைவி.

''கிளாஸ் ப்யூப்பில் லீடரும் ஒரு வகுப்பு மாணவியே!'' என்று ஏதோ நகைச்சுவை சொல்லிவிட்டதைப் போல், அட்டகாசமாகச் சிரித்தாள் வடிவழகி.

''அது சரி, லீடர் அம்மா! உன்னையும் எஸ்தரையும் எச். எம். கூப்பிட்டனுப்பிச்சாங்களே, என்ன விஷயம்? எங்களுக்குத் தெரியக் கூடாதா?'' என்று கேட்டாள் வனிதா.

''ஒன்றுமில்லை...'' என்று அவள் மேலே தொடர்வதற்குள், ''பாருங்கடி, ஒன்றுமில்லாததற்கெல்லாம் தலைமை ஆசிரியை ஆளை விட்டு அழைக்கிறாங்க...'' என்று கிண்டலடித்தாள் வித்யா.


''உஸ்... அமைதி. பக்கத்து வகுப்புக்கு டீச்சர் வந்துட்டாங்க. சப்தம் போட்டால் உடனே வந்து 'சர்டிபிகேட்' கொடுத்திடுவாங்க,'' என்று எச்சரித்துவிட்டு, ''எச். எம். ஏன் கூப்பிட்டனுப்பினாங்க? ஆங்! விழா நல்லா நடக்கணும்; இன்ஸ்பெக்ஷன் இந்த வாரம் நடக்கும்; வகுப்பை எல்லாம்ஒழுங்காகப்பார்த்துக்கொள்ளணும் – அப்படின்னு எனக்கு மட்டுமில்லே, எல்லா வகுப்பு லீடர்களுக்கும்தான் சொன்னாங்க,'' என்றாள் பவித்ரா.

''எஸ்தர் மேரியும் வந்தாளே?'' என்று எதையோ எதிர்பார்த்துத் தன் ஐயத்தைக் கிளப்பினாள் ரம்யா.

''எஸ்தர் நல்லாப் பாடுவாள் இல்லே... நம்ம பள்ளிக்குக் கல்வி அதிகாரி வருகிற போது, பிள்ளைகள் முன்னாடி கொஞ்ச நேரம் பேசுவாராம். அந்தக் கூட்டத்துக்கு ஆரம்பத்திலே கடவுள் வாழ்த்து, கடைசியிலே

பூவை அமுதன்

பறவைகள்



நாட்டுப் பாடல் ஒழுங்காக, உதறல் இல்லாமல் பாடுவதற்கு வேறு சில வகுப்பு மாணவிகளையும் சேர்த்துப் பயிற்சி கொடுக்கச் சொன்னார் எஸ்தரை,'' என்று கூறினாள் பவித்ரா.

''அதாவது எஸ்தர்மேரிதான் நம் பள்ளிக்குச் சம்பளம் வாங்காத பாட்டு டீச்சர்!'' என்று திவ்யா சொன்னதும் எல்லோரும் இலேசாகச் சிரித்து விட்டார்கள்.

''உரக்கத்தான் சிரியுங்களேண்டி. முத்தா உதிர்ந்து போகும்? வகுப்பிலே பேசத்தான் கூடாது; சிரிக்கக் கூடவா தடை?'' என்று குறும்பாகக் கேட்டாள் அவள்.

''எதுவுமே அளவை மீறக் கூடாது. சப்தம் போடாமல் இருங்க,'' என்று அவர்களை அமைதிப்படுத்தினாள் பவித்ரா.

அப்போது அந்த வகுப்புக்கு வெளியே ஓர் ஆசிரியை வந்து நின்றார். எல்லோரும் குழப்பத்தோடு எழுந்து நின்று அவரைப் பார்த்தார்கள். அவர் புவியியல் நடத்தும் ஆசிரியை அல்லர்.

''உங்க ஜாக்ரஃபி டீச்சர் இன்றைக்கு லீவு. நீங்க எல்லோரும் வரிசையாக டீ. வி. ரூமுக்கு வாங்க. 'காண்போம் கற்போம்' நிகழ்ச்சியிலே, உங்கள் பாட சம்பந்தமான படத்தை ஒளிபரப்பறாங்க. வந்து பாருங்க. அமைதியா சப்தம் போடாமல் வரிசையா வாங்க,'' என்று அழைத்துக்கொண்டுபோனார் அந்த ஆசிரியை.

எல்லோரையும் வரிசையாகப் போகச் செய்து, கடைசியில் வகுப்புத் தலைவி பவித்ராவும் அவளுக்கு முன்னே மீனாவும் போய்க் கொண்டிருந்தார்கள்.

''மீனா! இன்றைக்கு மாலையிலே பள்ளி விட்டதும் என் கூட நீ வீட் வீட்டுக்கு வரணும்,'' என்றாள் பவித்ரா.

''இன்றைக்கா? இன்னொரு நாளைக்கு ஆகட்டுமே!'' என்றாள் மீனா, திரும்பிப் பாராமலேயே.

''ஏன், இன்றைக்கு என்னவாம்? நல்ல நாள் இல்லையா? இல்லே... மீனாதேவிக்கு வேறு புரோக்ராம் இருக்கா?'' என்று அவள் இடுப்பிலே ஒரு கிள்ளு வைத்தாள்.

மீனா துள்ளிப் போய், முன்னால் போய்க் கொண்டிருந்த உமாவின் மீது மோதிக் கொண்டாள்.

''நீ போ. நான் வந்துக்கிடறேன்.''

''இல்லே. என் கூடத்தான் வருவே!''

''உன்னோடு வந்தால் உங்க காரிலே வரணும்.''

''எங்க கார் ஒண்ணும் கோவிச்சுக்காது. காரிலே வர உனக்கு ஏதும் அலர்ஜியில்லையே?'' என்று மெதுவாகச் சிரித்தாள் பவித்ரா.

''இல்லே... இங்கே மற்ற மாணவிகள் ஒரு மாதிரியா நினைச்சுப்பாங்களேன்னு பார்க்கிறேன்.''

''எப்படி...?''

''நீ என் மேலே அதிகமா அன்பு காட்டறே. அது பலருக்குப் பிடிக்கலே. இன்னொண்ணு... நான் என்னவோ உன்னை, எதுக்காகவோ காக்கா பிடிப்பதாகத் தப்பா நினைச்சுப்பாங்க.''

''காக்கா பிடிக்கிறதாவது, குருவி பிடிக்கிறதாவது? பார்த்தாயா மீனா, கால்கை பிடிப்பது எப்படிக் காக்கா

பிடிப்பதாக மாறிப் பறந்துகிட்டிருக்குன்னு? அது சரி... ஏன் இப்படியெல்லாம் நீயாவே நினைச்சுக்கறே? மற்றவங்க அப்படி நினைப்பாங்க, இப்படி நினைப்பாங்க என்று நாமே நினைத்துக் கொண்டு நம்ம சுதந்திரத்துக்கு நாமே தடை போட்டுக் கொள்வது சுத்த மடத்தனம்,'' என்றாள் பவித்ரா.

''சுத்த மடத்தனமோ, அசுத்த மடத்தனமோ? லீடரா லட்சணமா சும்மா வா. எல்லாம் சாயந்திரம் பார்த்துக்கலாம். அதோ டீ. வி. அறைக்கு வெளியே பார், எச். எம். நிற்கிறாங்க,'' என்று அடக்கினாள் மீனா.

அன்று மாலை பள்ளியை விட்டதுமே ஓட்டமாக வீட்டுக்குப் புறப்பட்ட மீனாவை ஓடிச் சென்று கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, தன்னுடன் காருக்கு வற்புறுத்தி அழைத்துச் சென்றாள் பவித்ரா.

போகிற வழியில், ''பார் மீனா, இதோ இந்தக் குழாய்தான். இப்பொழுது ஒழுகவில்லை பார். ரிப்போர் பண்ணிவிட்டார்கள் போல,'' என்று பெருமையாக அந்தக் குழாயைச் சுட்டிக் காட்டினாள் பவித்ரா.

''அம்மா, நான் போய் அன்றைக்கு அந்த ஆபீசில் சொன்னபோது, யாரோ ஒருத்தர் எரிஞ்சு விழுந்தாரும்மா,'' என்றார் டிரைவர், சற்றுத் திரும்பிப் பவித்ராவைப் பார்த்து.

''சரி, திரும்பாமே பேசுங்கோ. ரோடைப் பார்த்துக் காரை ஓட்டுங்க. நீங்கள் சரியாக ஓட்ட மாட்டீங்கன்னு சந்தேகமோ என்னவோ, என் ஃபிரெண்டு காரிலேயே வரமாட்டேன்னுட்டா!'' என்று சிரித்தாள் பவித்ரா.

''சும்மாயிருடி. அவர் என்னைத் தப்பாக நினைச்சுக்கப் போகிறார்,'' என்று அவளைக் கிள்ளினாள் மீனா.

''டிரைவர், நீங்க பஞ்சாயத்து ஆபிசிலே புகார் பண்ணிய போது, என்ன சொன்னாங்க?'' என்று வினவினாள் பவித்ரா.

''அது வந்தும்மா... ஊரிலே ஆயிரம் குழாய் இருக்கும்..''

''இருக்காதே. ஒரு நூறு இருக்கலாம். அப்புறம் சொல்லுங்க...''

''அதிலே முக்கால்வாசி ஒழுகத்தான் செய்யும்.''

''முக்கால்வாசியா, முழுவாசி!''

''அந்த ஆளு சொன்னாரும்மா. பெரிசா ரிப்போர்ட் பண்ண வந்திட்டீங்க அப்படீன்னு ரொம்பத்தான் அலுத்துக்கிட்டார்.''

''அப்புறம்?''

''என்னங்க, உடனடியாகச் சரி பண்ணிடணும். இல்லேன்னா எங்க அம்மா வந்து...''

''எந்த அம்மா...?''

''உங்க அம்மாம்மா. அவங்க வந்து, கமிஷனரைப் பார்த்துப் பேசுவாங்கன்னு சொல்லி, நம்ம அம்மா பேரைச் சொன்னேன். ஆளு அலறிக்கிட்டு எழுந்து நின்னு உடனே கவனிக்கிறேன்னா நம்மா.''




''ஆமாம். கவனித்துத்தான் இருக்கிறார்!''

''ஆமாம்மா. அப்பாலே நம்ம ஃபிரெண்டு!''

''யாரு நம்ம ஃபிரெண்டு?''

''அதாம்மா, உங்க கூட வருதே பாப்பா... உங்க சிநேகிதி — இது

யாரும்மா, புதுசா இருக்கு?'' என்று கேட்டார் காரோட்டி.



''இரண்டு தடவை நம் வீட்டுக்கு வந்தால் பழகி ஆயிடுவாள். இந்த மகாராணி மீனாதேவி இன்றைக்கு நம் குடிசைக்கு விஜயம் செய்வது நான் செய்த பாக்கியம்,'' என்று இரு கரங்களையும் விரித்துத் தலை வணங்கிச் சொன்னாள் பவித்ரா.

அவள் செய்கை மீனாவுக்குச் சிரிப்பையூட்டியது. அவளோடு பவித்ராவும் சேர்ந்து சிரித்தாள். என்ன புரிந்ததோ, தன் பங்குக்கு டிரைவரும் சிரித்து வைத்தார்.

அதற்குள் கார் பெரிய காம்பவுண்டுக்குள் நுழைந்து, ஓர் அழகிய பங்களாவின் போர்ட்டிகோவில் போய் ஒயிலாக நின்றது.

''இதுதான் உன் குடிசையா?'' என்று கேட்டுக் கொண்டே அவள் பின்னே இறங்கினாள் மீனா.

''அம்மா!'' என்று உரக்கக் கூவிக் கொண்டு, மீனாவை

இழுத்துக் கொண்டு ஹாலுக்குள் நுழைந்தாள் பவித்ரா. அவளுடைய தந்தை முத்து மணி, படிக்கட்டுகளில் இறங்கிக் கொண்டிருந்தார்.

"யாரு... நம்ம முதலாளியம்மா மீனாவா?" என்று வாய் நிறையச் சிரித்துக் கொண்டு அவர்கள் அருகே வந்து, "உட்காருங்கோ," என்றார்.

"பவித்ரா வந்தாச்சா?" என்று கேட்டுக் கொண்டே அறைக்குள்ளிருந்து வெளியே வந்த உதயா, அவளோடு வேறு ஒரு மாணவி நிற்பதைப் பார்த்து, ""யாரும்மா, உன் ஃபிரெண்டா? வாம்மா வா," என்று குழப்பத்தோடு கூறினாள்.

அதைப் புரிந்து கொண்டாள் பவித்ரா.

"என்னம்மா,தெரியல்லேஉனக்கு? டிராமாவிலே இந்த மீனாதான் என் எஜமானி," என்றாள் பவித்ரா.

"ஆமாம் ஆன்ட்டி. வேலைக்காரியாய் நடிச்ச உங்க பெண் பவித்ராவை நாடகத்திலே விரட்டி விரட்டி வேலை வாங்கினேனே, நான்தான் எஜமானி மீனா. புரியலையா?" என்று சிரித்தாள் மீனா.

உதயாவின் முகம் உடனே சுருங்கிப் போய் விட்டது. அதை முத்துமணியும் கவனித்தார்.

"இதோ வந்திட்டேம்மா. உள்ளே வேலையிருக்கு. நீ இரு. பவித்ரா, உன் சிநேகிதிக்குக் காப்பி கொடும்மா," என்று வேகமாகத் தன் அறைக்குள் போய் விட்டாள் உதயா.

பவித்ரா அம்மாவின் அறைக்குள் சென்றாள். அப்பா மீனாவை ஏதோ விசாரித்துக் கொண்டிருந்தார்.

அறை மறைவில் அம்மாவிடம், "என்னம்மா இது, சிடுசிடுன்னு இருக்கே? என் சிநேகிதிக்குத் தெரிந்தால் தப்பாய் நினைப்பாள் இல்லே? ஏன், உனக்கு மூடு சரியில்லையா?" என்று கேட்டாள் பவித்ரா.

"என் மூடுக்கு என்னடி? எப்பவும் சரியாகத்தான் இருப்பேன். சிநேகிதியாம்... எஜமானியாம்! அன்னைக்கு என்னமோ டிராமாவிலே சுமாராத்தான் இருந்தாள். இப்ப பார்த்தால், சகிக்கலே. கறுப்பா... கிச்சிலி ஊறுகாய் மாதிரி என்னமோ... கண்ணறாவி. அவள் உனக்கு எஜமானியா நடிச்சாளே!"

"என்னம்மா நீ, ஏதோ பெரிய மானக்கேடே நேர்ந்து விட்டதைப் போல நொந்துக்கறே? நிறம், தோற்றம் இதெல்லாம் பெரிசில்லேம்மா. மனம்... மனம்தானே பெரிசாயிருக்கணும்? நான் பணக்காரியா இருக்கலாம்; அவள் நல்ல குணக்காரி. நீ ஏன்தான் இப்படி நடந்துக்கிறியோ? சரி, நான் போறேன், நீயே பலகாரம் கொண்டு வாம்மா, எங்கள் இரண்டு பேருக்கும். அதுதான் நல்லாயிருக்கும். நீதானே கூட்டிக்கிட்டு வான்னு சொன்னே?" என்று வேதனையை

ஆச்சரியம்!

* கரையான் ஒரு மாதத்தில் மொத்தம் 80 ஆயிரம் முட்டைகள் இடும்.
* உலகிலேயே மிகவும் உயரமான நீர்வீழ்ச்சி தென் அமெரிக்காவில் உள்ளது. இதன் பெயர் ஏஞ்செல் நீர்வீழ்ச்சி. இதன் உயரம் 970 மீட்டர்.
* ஒட்டகம் மூன்று நிமிடத்தில் சுமார் 400 லிட்டர் வரை தண்ணீர் குடிக்கும்.
* முதன் முதல் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' பகுதியைத் துவக்கிய முதல் பத்திரிகை காந்திஜியின் 'யங் இந்தியா' தான் வருடம் 1919.
* 'மாடம் காமா' என்பவர்தான் நமது மூவர்ணக் கொடியை உருவாக்கியவர்.
* 'பாப்' மியூசிக் என்பது நமக்குத் தெரியும். 'பாப்' என்றால் என்ன தெரியுமா? 'பாபுலர்' என்பதின் சுருக்கம்தான் 'பாப்'.
* தமிழ் நாட்டில் மட்டும் 65 வகையான ரோஜாக்கள் உள்ளன!
* உலக நாடுகளில் கடற்கரைப் பகுதி மிகுந்த நாடு கனடாதான். இங்கு இரண்டு லட்சத்து 50 ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதி உள்ளது.
* டெலிபோன் இணைப்பு நம் நாட்டில் 1879 ஆம் ஆண்டு ஏற்பட்டது. கல்கத்தாவிற்கும் டைமண்ட் துறை முகத்திற்கும் இடையே 24 கிலோ மீட்டர் தூரத்திற்கு இந்த இணைப்பு ஏற்படுத்தப்பட்டது.
* தண்ணீர் பாம்பு முட்டை இடாது; குட்டி போடும்.
* நள்ளிரவில் சூரியன் தோன்றும் நாடு நார்வே.

தொகுப்பு : எஸ். விஜயா சீனிவாசன்.

வெறுப்போடு சொல்லிவிட்டுப் போய் விட்டாள் பவித்ரா.

சிறிதுநேரத்தில் பலகாரத் தட்டுக் களைக் கொண்டு வந்து அவர்கள் எதிரே வைத்து விட்டுப் போனாள் உதயா. அம்மா ஏதோ கடனுக்குச் செய்வதைப் போலிருந்தது பவித்ரா வுக்கு. அதையெல்லாம் எதையும் கவனிக்காதவள் போல மீனா தன் அழகிய கண்களை அகலத் திறந்து சுற்றிலும் உள்ள இயற்கைக் காட்சிப் படங்களை இமைகொட்டாமல் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

"மீனா, சாப்பிடு. அப்புறம் மாடிக் குப் போகலாம்," என்று உபசரித் தாள் பவித்ரா.

"அப்பா! இந்த ஹாலை விட்டு ஒரு அடி கூட மேலே வைக்க மாட் டேன். அம்மாடியோவ்! எவ்வளவு அழகான வீடு... கண்ணாடி போல மொசைக் தரை. காலைக் கீழே வைக்கவே கூசுது," என்று அதிசயித் தாள் மீனா.

முத்துமணி சிரித்தார்.

அதற்குள் அம்மா மீண்டும் வந்து, 'சீக்கிரம் அவளை அனுப்பி வை!' என்பது போலப் பவித்ராவுக்குச் சைகை காட்டினாள். அப்பாவுக்கும் அதுதான் சரி என்று பட்டது.

எப்படியோ சமாளித்துச் சாலை வரை வந்து மீனாவை வழியனுப்பி விட்டுச் சென்றாள் பவித்ரா.

உதயா சோபத்தோடு இருந்தாள். அப்பா ஏதோ கூறிச் சமாதானம் செய்து கொண்டிருந்தார். விஷ யத்தை ஒருவாறு ஊகித்துக் கொண் டாள் உள்ளே புகுந்த பவித்ரா.

"அம்மா! வசதி வரும், போகும். ஆனால் வளர்த்துக்கிட்ட நல்ல குணம் என்றைக்கும் போகாது. உனக்குச் சொத்தை மட்டும்தான் வளர்த்து வச்சிருக்காங்க தாத்தா பாட்டி!" என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் புகுந்து கொண் டாள் பவித்ரா.

"என்னாலே இப்படித் தைரியமாச் சொல்ல முடியுதா?" என்று சொல் லிக் கொண்டே தோட்டத்துப் பக்கம் போனார் முத்துமணி.

(தொடரும்)



பூவண்ணன்

பதினெட்டாம் பரிசு ரூ.10,000×2½

டில்லியில் இந்தியச் சிறுவர் கல்விக் கழகம் (Indian Council for Child Education) என்னும் அமைப்பு உள்ளது. இது இந்தியாவின் சிறந்த குழந்தை எழுத்தாளர் ஒருவருக்கு ரூ. 25,000 பரிசு வழங்குகிறது. இப் பரிசை இம் முறை பெற்றவர் டாக்டர் பூவண்ணன்.

ஜனவரி 2, 3 தேதிகளில் இந்தியச் சிறுவர் கல்விக் கழகம் டில்லியில் குழந்தைக் கல்வி தேசிய மாநாடு நடத்தியது. மாநாட்டில் டாக்டர் கரன் சிங், டாக்டர் பூவண்ணனுக்கு ரூ. 25,000 பரிசும் விருதும் சான்றிதழும் வழங்கினார். சிறுவர் இலக்கியத்தைப் பொறுத்தவரை இதுவே மிக உயர்ந்த பரிசு. இப் பரிசைப் பூவண்ணனுக்கு முன்பு பெற்றவர், ஆங்கில எழுத்தாளர் ரஸ்கின் பாண்ட் (Ruskin Bond) ஒருவரே.

டாக்டர் பூவண்ணன் கடந்த நாற்பதாண்டுகளாகக் குழந்தைகளுக்காக எழுதி வருகிறார். கோகுலத்திலும் இரண்டு தொடர்கதை எழுதியுள்ளார். மத்திய, மாநில அரசுகளிடமிருந்து பற்பல பரிசுகள் பெற்றுள்ளார். இப்போது இவர் பதினெட்டாம் முறையாகப் பரிசு பெற்றுள்ளார்.

பந்தயமாம் பந்தயம்



குண்டாயிருக்கான்கிறதுக்காகச் 'சேதுவைப் பரிகாசம் பண்ணலாமா? சைக்கிளிலே ஆசையாச் சேதுவை டபுள்ஸ் அழைச்சிட்டுப் போகக் கணேஷ் நினைச்சு, சேதுவைப் பின் ஸீட்லே ஏறி உட்காரச் சொன்னான். டயர் வெடிச்சுப் போச்சு. அதுக்குச் சேதுவைக் கோபிச்சுக்கலாமா?

அவனுக்கும் பல நல்ல நண்பர்கள் உண்டு. எப்பவும் அவங்க கூடத்தான் இவன் பள்ளிக்கூடம் போவான்; வருவான். அவன் விளையாடுவான் கிறதை விட அவனை வெச்சிக்கிட்டு மத்தவங்க விளையாடுவாங்க. சேதுவோட நண்பர்களுக்குப் பச்சைக் குதிரை தாண்டற விளையாட்டு விளையாடணும்கிற ஆசை. அதனாலே என்ன நடந்துதுன்னா கேட்கறீங்க?

இவங்க கும்பல்ல நெட்டையா ஒருத்தன். அவன் குதிரை போலக் குனிய, சேது வேகமா ஓடி வந்து அவனைத் தாண்டணும். அதுக்குப் பதிலா, அமுக்கின அமுக்கிலே அந்த நெட்டையன் நெளிஞ்சு, மடிஞ்சு, ஒடிஞ்சு தடால்னு தரையிலே சாய, அவன் மேலே லேசாத்தான் சேது விழுந்ததாச் சொன்னான். நெட்டையனுக்குச் சரியா மூச்சு வர மூணு நாளாச்சு. இதுக்காகச் சேதுவைக் கோவிச்சுக்கலாமா?

அன்னிக்கு இந்தக் கும்பல்லேயிருந்து பிரிஞ்சு போனவன்தான் நெட்டையன் லோகய்யா. அதுக்கப்புறம் சேதுவைக் கண்டாலே பிடிக்காமல் போயிட்டது அவனுக்கு. எப்படியும் சேதுவைப் பழிவாங்கணும், அவமானப்படுத்தணும்னு துடிச்சிட்டிருந்தான்.

இந்த மாதிரி எண்ணங்களுக்கு சபாஷ் சொல்லி ஊக்குவிக்கத்தான் ஆளுங்க நிறைய இருப்பாங்களே! லோகய்யாவை ஆதரிச்சு ஒரு கும்பலே கிளம்பிட்டாங்க. 'சேது வேணும்னு எதுவும் செய்யலே. விளையாட்டிலே நேர்ந்த எதையும் விளையாட்டாவே எடுத்துக்கணும். மனசில வெச்சுக்கக் கூடாது,'ன்னு யாராவது லோகய்யா கும்பலுக்கு எடுத்துச் சொன்னாத்தானே? இதனால என்னாச்சு? லோகய்யாவை ஆதரிச்சு ஒரு பத்துப் பேருன்னு ஏற்பட்டுப் போச்சு. பள்ளிக்கூடத்திலேயும், சேதுவுக்கும் லோகய்யாவுக் கும்எதிலேயும்போட்டிங்கறநிலைமை ஏற்பட்டுப் போயிட்டது.

ஆத்தபிறான்

பள்ளிக் கூடத்திலே எல்லாப் போட்டியும் நடக்கும். ஆனா வருஷா வருஷம் கயிறு இழுக்கற போட்டி — டக்கஃப் வார் — இந்தப் போட்டி மட்டும் ஊர் ஜனங்க முன்னால கோவில் மைதானத்திலேதான் நடக்கும். சேதுவை நம்பிச் சிலர் ஒரு பக்கம். லோகய்யாவை நம்பி வேறு சிலர் எதிர்ப்பக்கம். போட்டி ஆரம்பமாச்சு. விசில் ஊதின அடுத்த வினாடி, சேதுவும் அவன் நண்பர்களும் கயிற்றை இழுத்ததுதான் தாமதம், லோகய்யா நண்பர்கள் காத்தடிச்சுப் பறந்து சாயற மாதிரியாய்ச் சேதுப் பக்கம் ஓடி வந்து ஒருத்தர் மேல ஒருத்தரா விழுந்தாங்க.

இந்த நிகழ்ச்சி நடந்து ஒரு வாரம் இருக்கும். லோகய்யா கிட்டேயிருந்து சேதுவுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. அதைப் படித்ததும் சேதுவின் உடம்பு நடுங்கிற்று. அதே நேரத்தில் முகம் எல்லாம் கறுத்தது; கடுகடுத்தது. வேகமாகத் தன் நண்பர்கள் வீடு நோக்கி ஓடினான். சேதுவாலே எப்படி ஓட முடியும்னு நினைக்கிறீங்களா? அந்தக் கடிதமே ஓட்டப் பந்தயம் விஷயம்தான். நெட்டை லோகய்யா சவால் விட்டிருந்தான். குண்டு சேதுவைத் தன்னோட ஓட்டப் பந்தயத்துக்கு வந்து பார்க்கும்படியும் அப்போதான் அவன் ஒரு ஆம்பளைன்னும் கடிதாசிலே எழுதி, சிவப்புப் பென்சிலாலே மார்க் பண்ணி இருந்தாங்க. முதல்ல சேது அவன் நண்பன் நட்டு வீட்டுக்கு வந்தான். அவன் தலைதெறிக்க ஓடி வருவதைப் பார்த்த மற்ற நண்பர்களும் சேதுவின் பின்னால் ஓடி வர, நட்டு வீட்டில் அனைவரும் கூடி விட்டார்கள். ஒரு பெரிய கூட்டமே நடந்தது.

''ஏண்டா சேது என்னாச்சு?''

''முதல்லே இந்தக் கடிதாசியைப் படியுங்கோடா.''

ஒருவன் உரக்கப் படித்தான். ''டேய் குண்டு சேது, நான் விடற சவாலைஏத்துக்கலே, நீ ஆம்பிளையே இல்லை. சவால் இதுதான். உனக்கும் எனக்கும் ஓட்டப்பந்தயம். கோவிலை நூறு த்டவை சுத்தி வரணும். யார் முதல்ல வருவாங்கன்னு பார்க்கலாமா? தயாரா? தயார்னா சொல்லியனுப்பு. சொல்லி அனுப்பல்லே...

இப்படிக்கு,
லோகய்யா, நண்பர்கள்.



''இப்போ என்னடா பண்றது?'' சேது கவலையாக் கேட்கும்போதே உடம்பு நடுங்கவும், கண்லே தண்ணி ததும்பவும் சரியாயிருந்தது.

''கவலைப்படாதேடா. சவாலை ஏத்துக்க,'' என்றான் முத்து.

உடனே தலையிலே கை வைத்துக் கொண்டு தரையிலே உட்கார்ந்து விட்டான் சேது.

மற்றவர்களும் அவனைச் சுற்றிக் கீழே உட்கார்ந்து கொண்டு அவனிடம் கெஞ்சிக் கூத்தாடி சவாலை ஏற்றுக் கொள்ள வைத்தார்கள். அவ்வளவுதான். அந்தக் கிராமம் பூராவும் இந்தச் செய்தி பரவிற்று.

''சேது ஓட்டப் பந்தயத்துலே ஓடறதாவது... நம்ப முடியலியே!''

''அதுவும் கோவிலை நூறு தடவை சுற்றி ஓடறதாவது!''

''வேடிக்கையாயிருக்கப் போவுது.''

''பாவம், சேது அவன் அங்கே நடந்தாலே இங்கே மூச்சு நம்ம மேலே படும். இவன் எப்படி ஓடறது?''



"எதுக்கு இவனுக்கு வீண் வம்பு?"

"நமக்கு நல்ல வேடிக்கை காத்துக் கிட்டிருக்கு..."

— இப்படி கிராமத்துப் பையன்கள், அதுவும் சேதுவை நல்லாத் தெரிஞ்சுகிட்டவங்க பேசினாங்க. சேதுவின் நண்பர்கள் ஒரு பக்கம், நெட்டையன் நண்பர்கள் ஒரு பக்கம் என்று போட்டிக்கு ஏற்பாடுகளைக் கவனிக்கலாயினர். சேதுவின் நண்பர்கள் 'ஆமையும் முயலும் கதையைப் படமாகப் போட்டு, சேதுவுக்கே வெற்றி என்று பெரிய அளவில் கரும்பலகையில் எழுதி சேதுவின் வீட்டு வாசலிலேயே வைத்து விட்டார்கள் பந்தயத்தை.

ஒரு விடுமுறையில் எல்லோரும் ரசிக்கும்வண்ணம் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்தார்கள். இது சேதுவின் தாய் தந்தைக்குப் பிடிக்கவில்லை. கோவிலின் முகப்பில் காகிதக் கொடிகள், மாவிலை, தென்னங்குருத்துத் தோரணங்கள் எனப் பெரிய அலங்காரம். சேது நெட்டையன் ஓட்டப் பந்தயம் சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது. இதையெல்லாம் பார்த்த ஊர்ப் பிரமுகர் ஒருத்தர், ஜெயித்தவன் எடைக்கு மைசூர்ப்பாகு தருவதாக வேறு அறிவித்து விட்டார். சேதுவின் நண்பர்களுக்கு எப்படியாவது சேது ஜெயித்து விட்டால் எடைக்கு எடை மைசூர்ப்பாகு வருமே எனத் துடிப்பு.

பந்தய நாளன்று கோவில் முன் பெரிய மேடை. ஊர்ப் பிரமுகர்கள் அமர்ந்துள்ளார்கள். மேடையின் ஒரு பக்கத்தில் பெரிய பந்தல். சேதுவின் குழுவினர் ஒரு பக்கம், மற்றொரு பக்கம் லோகய்யாவின் கூட்டம்.

மேடையில் ஒலிபெருக்கியில், "நூறு தடவை கோவிலை யார் சுற்றி வருகிறார்களோ, அவர்களுக்கு நமது ஊர்த் தலைவர் வள்ளியப்பா அவர்கள் ஒரு சைக்கிள் பரிசளிக்க இருக்கிறார்," என்று அறிவிப்பு!

லோகய்யாவின் நண்பர்கள், தாங்கள்தான் வெற்றி பெறப் போகிறோம் என்பதற்கு அடையாளமாக லோகய்யாவின் இரு கைகளையும் உயர்த்திக் கோஷமிட்டார்கள். பந்தயத்துக்கு இப்போது எல்லாம் தயார் நிலையில் உள்ளது. இந்தச் சமயத்தில் அவ்வூர் மேல்நிலைப் பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர் ராஜா வந்து, ஒலிபெருக்கியைப் பிடிச்சார். "இன்னும் சிறிது நேரத்தில் போட்டி ஆரம்பமாகப் போகிறது," என்று அறிவிப்புக் கொடுத்தார்.

லோகய்யாவை அவன் நண்பர்கள் கைகுலுக்கி, மேடைக்கு எதிரே போட்டிருக்கும் சுண்ணாம்புக் கோட்டின் அருகே அழைத்து வந்து நிறுத்தினார்கள். சேதுவிற்கு அவன் நண்பர்கள் நெற்றியில் கோவில் திருநீறு, குங்குமம் இட்டு திருநீற்றைக் கொஞ்சம் வாயிலும் போட்டு அவனையும் அழைத்து வந்து ஓட்டப் பந்தயம் துவங்கும் இடத்தில் விட்டு விட்டுத் தங்கள் பந்தலுக்கு வந்து விட்டார்கள். உடற்பயிற்சி ஆசிரியர் விசில் ஊதத் தயாராக இருக்கிறார். மைதானத்தில் ஆரவாரம். இதோ விசில் ஊதியாகி விட்டது.

வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல லோகய்யா கிளம்பினான். சேதுவும் அவனைத் துரத்திக் கொண்டே ஓடினான். எல்லோரும் கைகொட்டிச் சிரித்து ஆரவாரம் செய்தார்கள்.

கோவிலைச் சுற்றி நின்ற ஜனங்கள் கைதட்டி, "விடாதே, சேது விடாதே, ஓடு, ஓடு கமான், அப்," என்று உற்சாகப்படுத்தினார்கள்.

எடுத்த எடுப்பிலே இருபத்தைந்து சுற்று முடித்து விட்டு லோகய்யா தன் நண்பர்களுடன் நின்று, தாகசாந்தி செய்து கொண்டிருக்கிறான். அப்போதுதான் சேது பத்துச் சுற்று முடித்தான்.

சேதுவின் நண்பர்கள், "சேது, ஓடு. நிக்காதே! ஓடிக் கொண்டேயிரு," என்றெல்லாம் சொல்லிக் கொண்டு இருக்கும் நேரத்தில் லோகய்யா இன்னும் வேகமாக ஓடினான்.

இப்போது ஒலிபெருக்கியில் லோகய்யா ஐம்பது ரவுண்டு ஓடி விட்டான். சேது இருபத்தைந்து ரவுண்டு ஓடியிருக்கிறான் என்ற ஓட்ட எண்ணிக்கை வர்ணனை போல தரப்பட்டது. இந்தச் சமயத்தில் சேது



மிகவும் சோர்வுடன் முடியாமல் தள்ளாடிக் கொண்டு, ''டேய்! டேய்' ஓடிப் போய் என் அம்மா, அப்பாவை உடனே அழைச்சிக்கிட்டு வாங்கடா,'' என்றான்.

சேது ஓடும் போது மற்றவர்கள், பிள்ளையைக் கேலி செய்வார்களே, இதைப் பார்ப்பதா என்று பெற்றவர்கள், பந்தயம் நடக்குமிடத்திற்கு வரவேயில்லை. சேது இப்படிச் சொன்னவுடன் என்னவோ; ஏதோ என்று ஓடிப் போய்ச் சேதுவின் பெற்றோர்களை அழைத்து வந்தார்கள்.

சேது அவர்களை மேடைக்கு எதிரே வந்து நிக்கச் சொல்லி, ''டேய், லோகய்யா எவ்வளவு தடவை கோயிலைச் சுத்தியிருக்கிறான்?'' என்று கேட்டான்.

''அறுபத்து ஐந்து. நாற்பத்திரண்டு,'' என்றார்கள்.

''இப்போ நாற்பத்திரண்டிலிருந்து எண்ணிக்கோங்கடா,'' என்று தாய், தந்தையை வேகமாகச் சுற்றத் தொடங்கினான்.

கூடியிருப்பவர்களுக்குச் சேதுவின் செயல் புதுமையாகவும், விந்தையாகவும் வேடிக்கையாகவும் இருந்தது. லோகய்யா எதையும் கவனிக்காமல் ஓடிக் கொண்டே இருந்தான்.

ஒரு கட்டத்தில் சேது, ''நான் நூறு தடவை கோவிலைச் சுற்றி விட்டேன். எனக்குத்தான் சைக்கிள். நூறு தடவை கோவிலை நான் சுற்றி விட்டேன்,'' என்று கத்தினானே பார்க்கணும்.

லோகய்யா ஓடுவதை நிறுத்தி விட்டு, ''என்ன, நூறு தடவை ஓடியாச்சா?'' என்றான்.

அதற்குச் சேது, ''ஆமாம், நான் கோயிலை நூறு தடவை சுற்றி விட்டேன்,'' என்று தன் தாய், தந்தையரைக் காட்டினான்.

ஒரே குழப்பம். ''என்னடா உளர்றே?'' என்றான் லோகய்யா.

''நான் ஒண்ணும் உளறலே. கோவிலைச் சுத்தணும்னுதான் சொன்னே. எழுதியிருக்கே. எந்தக் கோவில்னு சொல்லலே. என்னைப் பொறுத்த வரை என் அம்மா, அப்பாதான் எனக்குக் கோவில். இந்தக் கோவிலைச் சுத்தறதும், என் அம்மா, அப்பாவைச் சுத்தறதும் ஒண்ணுதானே? நான் ஜெயிச்சுட்டேன்,'' என்றான்.

ஊர்ப் பிரமுகரும், சேதுவின் வாதம் நியாயமானது, சமயோசிதமானது என்று பாராட்டி சேதுவுக்கே சைக்கிள் என்றார்.

நாரதமுனி கொண்டு வந்த கனிக்காக வானத்தில் முருகப் பெருமான் மயில் வாகனத்தில் உலகைச் சுற்றி வருவது போலவும், விநாயகப் பெருமான் அம்மை அப்பனைச் சுற்றி வந்து கனியை வென்ற கோலமும் அனைவரின் மனக்கண்களிலும் தோன்றிப் பரவசப்படுத்தியது.

பிருந்தாவனக்



நன்மையும் தீமையும்

வழக்கம் போலச் சாந்தியும் அவள் தம்பி மணியும் பள்ளிக் கூடத்திற்குச் சென்று கொண்டிருந்தார்கள்.

பள்ளிக் கூடம் பக்கத்துக் கிராமத்திலிருந்ததால் அவர்கள் ஒரு மைல் தூரம் நடக்க வேண்டியிருந்தது. போகின்ற வழியில் ஒரு மாந்தோப்பு இருந்தது. செந்நிறமான பழங்கள் பல தொங்கிக் கொண்டிருந்தன.

மாந்தோப்பின் அருகே வந்ததும் இருவருக்கும் நாவில் எச்சில் ஊறியது. மணி மெதுவாகப் பையைத் தரையில் வைத்து விட்டுச் சுற்று முற்றும் பார்த்துவிட்டு ஒரு கல்லை எடுத்து மரத்தை நோக்கிக் குறி வைத்தான்.

திடீரென்று திரும்பிய சாந்தி, தம்பி இருக்கும் நிலையைக் கண்டாள். ''மணி, இது நமக்கு வேண்டாம். இது நமது தோட்டமல்ல'' என்று கூறிக் கொண்டே மணியின் அருகில் வந்து, அவனது கரத்தைப் பற்றிக் கொண்டாள்.

உடனே மணி, ''இங்கேதான் யாரும் இல்லையே. நீ ஏன் பயப்படுகிறாய்? நாம் பறித்தாலும் யாருக்கும் தெரியாது'' என்றான். சாந்தி அதற்கு மனிதருக்குத் தெரியாவிட்டாலும் கடவுளுக்குத் தெரியும். நாம் அவற்றைப் பறிப்பது திருட்டு. அது கூடாது! என்றாள். மணியும் அதனை ஏற்றுக் கொண்டு கல்லைத் தூர எறிந்து விட்டுப் பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

இவர்கள் இருவருக்கும் இடையே நடந்த வாக்குவாதத்தைத் தூரத்திலிருந்து கவனித்துக் கொண்டிருந்த தோட்டக் காவலர் விரைந்து அவர்கள் அருகில் வந்தார். சாந்தியும் மணியும் பயந்து விட்டனர். ஆனால் அவர் சாந்தியின் முதுகில் தட்டிக் கொடுத்து அவரே இரு நல்ல மாங்கனிகளைப் பறித்து ஆளுக்கு ஒன்றாகக் கொடுத்து அனுப்பினார்.

— எஸ். ரவி, வந்தவாசி.



மேகம் பசு ரத்தினம்

திருமலைராயன் பட்டினத்தில் அதிமதுரகவிராயர் என்ற புலவர் செல்வாக்குடன் புகழ்பெற்று இருந்தார். அவர் ஒரு நாள் மளிகைக் கடையருகில் கடைக்காரனுக்கு உதவியாகக் காளமேகப் புலவர் இருப்பதைக் கண்டார். உடனே அவரை மட்டம் தட்ட விரும்பி தனது வேலையாளை அழைத்து, ''நீ நேராக அந்தப் புலவர் இருக்கும் கடைக்குச் சென்று 'மேகம், பசு, ரத்தினம்' நான் கேட்டதாகக் கேள்,'' என்று சொல்லியனுப்பினார்.

வேலைக்காரன் கடைக்குச் சென்று, ''மேகம், பசு, ரத்தினம் தாருங்கள்,'' என்று கேட்டான்.

கடைக்காரருக்கு ஒன்றும் புரியவில்லை. அருகில் இருந்த காளமேகப் புலவர் காரா மணியைக் கட்டிக் கொடுத்து, கீழ்க்கண்டவாறு கூறிக் கடைக்காரரின் குழப்பத்தைத்

கதையரங்கம்

தீர்த்து வைத்தார்.

''அவர் கேட்பது காராமணி. கார் மேகம், ஆ = பசு, மணி = ரத்தினம்.''

— என். சிவகுமார், பரங்கிப்பேட்டை.

எல்லாம் தெரிந்த ஏகாம்பரம்

ஓர் ஊரில் எல்லாம் தெரிந்த ஏகாம்பரம் என்று ஒருத்தர் இருந்தார்.

அந்த ஊர் கிராமத்து ஜனங்களுக்கு ஒன்றுமே தெரியாது. ஏகாம்பரம் ஒருத்தர் தான் விஷயம் தெரிந்தவராக இருந்தார் அந்தக் கிராமத்திலேயே.

ஒரு நாள் வெள்ளத்தில் வந்து ஒதுங்கிக் கிடந்த பனங்கொட்டையை அந்தக் கிராமத்து ஜனங்கள் பீதியோடு பார்த்தனர். அதற்கு முன் அவர்கள் பனங்கொட்டையைப் பார்த்தது கிடையாது.

ஏகாம்பரம் வந்தார். பார்த்தார். அவரும் அதுவரை பனங்கொட்டையைப் பார்த்ததே இல்லை. அது கறுப்பாகவும் மேலெல்லாம் உரோமம் வளர்ந்தது போலவும் இருந்தது. சமாளிக்கத் தயாரான ஏகாம்பரம் ''ஹூம் இவ்வளவுதானா? நானும் என்னமோ ஏதோ என்று பயந்து போனேன். கரடி முட்டை ஐயா, கரடி முட்டை. இதற்கு முன்னால் இதையெல்லாம் பார்த்திருந்தாலல்லவா தெரியப் போகிறது உங்களுக்கு.'' என்று சொன்னார்.

கூட்டத்திலிருந்தவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. ஏகாம்பரத்தைப் பாராட்டினர்.

மற்றொரு நாள் பாம்புக் குட்டி ஒன்று அந்த ஊருக்குள் வந்தது. அதற்கு முன்னால் கிராமத்து ஜனங்கள் அதைப் பார்த்ததே கிடையாது. ஒருவருக்கும் இது இன்னதென்று விளங்கவில்லை. உடனே ஏகாம்பரத்தைக் கூட்டிக் கொண்டு வந்தார்கள். அவருக்கும் தெரியவில்லை என்றாலும், ''பூ இது தெரியாதா உங்களுக்கு! இவ்வளவு தானா. உங்க பிழைப்பு. இதுதானய்யா கோணக்க மாணைக்கத் தையக் குட்டி. நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்,'' என்றார்.

''ஆகா! எல்லாந் தெரிஞ்சவர் இவர் ஒருவர்தான்,'' என்று ஜனங்கள் அவரை வாழ்த்தினார்கள்.

மற்றொரு நாள், அதிகாலையில் அந்தக் கிராமத்தின் வழியாக ஒரு யானை போய்க் கொண்டிருந்தது. ஏகாம்பரமும் தற்செயலாக அங்கு இருந்தார். அங்குள்ள யாருமே யானையைப் பார்த்ததில்லை. கன்னங்கரேல் என்று கறுப்பு நிறத்தில் அது நகர்ந்து செல்வதை ஆவல் பொங்க அதிசயத்தோடு பார்த்து ஏகாம்பரத்திடம்,

''ஐயா! இது என்ன?'' என்று கேட்டார்கள்.

ஏகாம்பரமும் யானையைப் பார்த்ததில்லை. ஆனாலும் சமாளிக்கத் தயாரானார்.

''சரியாய்ப் போச்சு. இதுவரை நீங்கள் பார்த்ததில்லையா இதை? எத்தனையோ தரம் இது நம் ஊரின் வழியாகப் போயிருக்கிறது. இது வேறொன்றுமில்லை; ராத்திரியில் வருகிறதல்லவா இருட்டு? அதனுடைய மிச்சம். அந்த மிஞ்சின இருட்டு இப்பொழுது போகிறது; வேறொன்றுமில்லை.'' என்று சளைக்காமல் சொன்னார் ஏகாம்பரம்.

''பலே! பலே! ஏகாம்பரம் எல்லாந் தெரிஞ்ச ஏகாம்பரமேதான். நாமும் எத்தனையோ பேர் இருக்கிறோமே, என்னத்துக்கு?'' என்று பாராட்டிக் கொண்டார்கள் அந்த ஊர்வாசிகள்.

— அ. அன்பரசன், அசூர்.



விமலாவின் விளக்கம்

பத்தாம் வகுப்பிற்கு உண்டான கணக்குப் பாடத்தை நடத்தி விட்டு வெளியேறினார் ஆசிரியர். ''சார்! சார்!'' என்று குரல் கேட்டுத் திரும்பினார். விமலா நின்று கொண்டிருந்தாள்.

''என்ன?'' என்று கேட்டார் ஆசிரியர்.

''சார், நீங்கள் வகுப்பில் போட்ட கணக்



கில் உங்களை அறியாமல் ஒரு தவறு செய்து விட்டீர்கள்'' என்றாள். அந்தத் தவறு என்ன என்பதையும் தன் கையில் வைத்திருந்த நோட்டைக் காட்டி விளக்கினாள்.

''இதை வகுப்பிலேயே கூற வேண்டியது தானே...?'' என்று கேட்டார் ஆசிரியர்.

''சார், வகுப்பில் சுட்டிக்காட்டியிருந்தால், மாணவ மாணவிகளில் சிலர் நம்ம ஆசிரியரே கணக்கைத் தவறாகப் போடுகிறார் என்று பலவாறாகப் பேசுவார்கள். தாங்கள் பாடம் நடத்தும் பொழுது அலட்சியமாகக் கவனிப்பார்கள்; பாடத்தில் ஆர்வம் செலுத்தாமல் இருந்து விடுவார்கள். அதனால்தான் சார், அங்கே சுட்டிக்காட்டவில்லை,'' என்றாள் விமலா.

தன் தவற்றை உணர்ந்த ஆசிரியர் விமலாவைத் தட்டிக் கொடுத்து, ''சரி, அடுத்த பாட வகுப்பில் சரிசெய்து கொள்ளலாம்,'' என்று கூறிப் பாராட்டிவிட்டுத் தன் பேனாவைப் பரிசாக விமலாவின் கையில் திணித்தார்.

— பி. திருவேங்கடம், புருஷானூர்.

நீயாக இருந்தால்..?

பஸ்ஸில் பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கிறாய். தாங்க முடியாத கூட்டம். நிற்பதற்குக் கூட இடமில்லாமல் பயணிகள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நல்ல வேளை, உனக்கு எப்படியோ உட்கார இடம் கிடைத்து நீ பயணம் செய்து கொண்டிருக்கிறாய்.

உனக்கு அருகில் ஒரு தள்ளாத கிழவர், சரியாக நிற்கக் கூட முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார். உனக்கு இரக்கமாக இருக்கிறது. அவரை நம் இடத்தில் உட்கார வைக்கலாம் என்று நீ எழுந்திருக்கிறாய். அப்பொழுதுதான் அந்தக் கிழவருக்கு அருகே உன் அன்புக்கும் மரியாதைக்கும் உரிய உன் ஆசிரியர் நிற்பதைக் கவனிக்கிறாய். நீ ஆசிரியரை உட்கார வைப்பாயா, இல்லை தள்ளாத கிழவரை உட்கார வைப்பாயா? இல்லை பிரச்னையே வேண்டாம் என்று நீயே உட்கார்ந்து கொண்டு விடுவாயா? உங்கள் முடிவை நியாயப்படுத்தி பதினைந்து வரிகளுக்கு மேற்படாமல் எழுதி, கீழேயுள்ள கூப்பனையும் பூர்த்தி செய்து இணைத்து, ஆசிரியர் 'கோகுலம்' ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 32 என்ற முகவரிக்கு அனுப்புங்கள். கூப்பனுடன் உங்கள் பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் **31.3.1990.** தகுந்த பதிலுக்குப் பரிசு உண்டு. பரிசு பெற்றவர்களின் புகைப்படம் கோகுலத்தில் வெளியாகும்.



பெயர் : ....

முகவரி : ....

....

....

....

பின் கோடு: ....



டிக்கியின் வேர்

கையில் கூடை ஒன்றுடன் குடிசைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த ரங்கன், "டிக்கி, டிக்கி" என்று குரல் கொடுத்தான்.

அடர்ந்த புதர்களுக்கு இடையேயிருந்து ஒரு கீரி ஓடி வந்தது. முகத்தின் நுனியில் கீழ் நோக்கிய இலேசான கம்பி மீசை, உடல் முழுவதும் அடர்ந்த முடி. துறுதுறுவென்று அலை பாயும் கண்கள். அந்தக் கீரியின் பெயர்தான் டிக்கி. அது அடிமைப்பட்டு விட்ட விலங்கு என்பதை அதன் கழுத்தில் போடப்பட்டிருந்த பட்டையும், அதிலிருந்து தொங்கிய நீண்ட மெல்லிய இரும்புச் சங்கிலியும் அறிவித்தன.

ரங்கனுக்கு அருகே வந்த டிக்கி, அணில் மரக்கிளைகளில் உட்கார்ந்து கொள்வது போல் பின்னங் கால்களால் தரையில் உட்கார்ந்து கொண்டு ரங்கனை ஆவலோடு நிமிர்ந்து நோக்கியது.

நான்கைந்து காய்ந்த பாதாங் கொட்டைகளைக் கூடையிலிருந்து எடுத்து ஒவ்வொன்றாகப் போட்டான் ரங்கன். முன் கைகளை உயர்த்தி அவற்றை ஒவ்வொன்றாகக் கேட்ச் பிடித்த டிக்கி, தன்னருகே வைத்துக் கொண்டது.

ரங்கன் குனிந்து தரையில் அதனருகே உட்கார்ந்து கொண்டான். டிக்கி அவனையே பார்த்தது.

"டிக்கி, இதோ பார். நான் சொல்வதைக் கேட்டால் இதைப் போல நிறையப் பாதாங் கொட்டை தருவேன்."

முன் கைகளால் பற்றிக் கொண்டு பற்களால் பாதாங் கொட்டையின் உறுதியான ஓட்டை உடைத்துக் கொண்டே ரங்கனை ஏறிட்டுப் பார்த்தது டிக்கி.

"இன்னிக்காவது அந்த வேரை எனக்கு நீ காட்டிக் கொடுக்க வேண்டும். உன்னோடு சண்டை போட ஏற்றதாக, பெரிய பாம்பு இருக்கும் இடத்தை நான் கண்டுபிடித்து விட்டேன். அந்த ரெட்டைப் பனை மரத்துக்குப் பக்கத்துல ஒரு பாம்புப் புத்து இருக்கே தெரியுமா? அதில் ஒரு பெரிய நாகப் பாம்பு இருக்கிறது. அதோடுதான் நீ சண்டை போட வேண்டும்."

ரங்கன் கூறியதைப் புரிந்து கொண்டதோ இல்லையோ தெரியவில்லை. டிக்கியின் கண்கள் ரங்கனின் கைகளில் இருந்த கூடையையே ஆவலோடு நோக்கின.

"பாம்போடு சண்டை போட்டா, கண்டிப்பா நீதான் ஜெயிப்பே. ஆனாலும் பாம்பு உன்னைக் கடிக்கும் இல்லையா? அது எனக்கும் தெரியும். எனக்கும் அதை நினைத்தால் வருத்தமாத்தான் இருக்கிறது. ஆனாலும் விஷத்தை இறக்கும் வேரை உன்னிடமிருந்து அடையாளம் கண்டு கொள்ள இதை விட்டால் வேறு வழியே இல்லை. அது என்ன வேர் என்பதுதான் எனக்குத் தெரிய வேண்டும். அதைக் கண்டுபிடிக்கத்தான் உன் கழுத்தில் இவ்வளவு மெல்லியதாக ஒரு இரும்புச் சங்கிலியைக் கட்டி வைத்திருக்கிறேன். அந்த வேரை எனக்குக் காட்டிக் கொடு. அதற்குப் பிறகு உனக்கு வேண்டிய மட்டும் பாதாங் கொட்டை தருகிறேன்," என்று டிக்கியோடு கொஞ்சினான் ரங்கன்.

டிக்கியின் பார்வை ரங்கன் கூறியதைக் கவனமாகக் கேட்டுக் கொண்

ரேவதி

டது போல் இருந்தது.

''அந்த அதிசய வேர் எனக்குத் தெரிந்து விட்டால், நான் திடீர் பணக்காரனாகி விடுவேன். நம்ம பக்கத்தில் பாம்புங்க ஏராளம். அதனால், பாம்புக் கடியால செத்துப் போறவங்களும் ஏராளம். அந்த வேர், பாம்பு விஷத்தை இறக்கும் என்றால், எல்லோரும் அந்த வேருக்கு அலைவாங்களே?''

ரங்கன் இன்னும் இரண்டு கொட்டைகளை எடுத்துப் போட்டான். டிக்கி அவற்றை ஆவலோடு பிடித்துக் கொண்டு கொரித்தது. ரங்கன் கதவைப் பூட்டிக் கொண்டு டிக்கியையும் இழுத்துக் கொண்டு கிளம்பினான்.

இரட்டைப் பனைமரத்தினடியில் ஆளுயரத்திற்கு ஒரு பாம்புப் புற்று இருந்தது. டிக்கியை இழுத்துக் கொண்டு ரங்கன் அங்கே வந்து சேர்ந்தான். டிக்கியை இணைத்திருந்த சங்கிலியைக் கைகளால் கெட்டியாகப் பற்றிக் கொண்டு அதைப் பாம்புப் புற்றை நோக்கி விரட்டி விட்டான்.

டிக்கி அம்பைப் போல் புற்றுக்குள் நுழைந்தது. சில நிமிடங்களுக்கெல்லாம் புற்றின் பொந்திலிருந்து மண் வெளியே வந்து தெறித்தது. புற்று ஆடியது. பிறகு அப்படியே ''பொலபொல''வென்று சரிந்து உள்ளேயே விழுந்தது. அடுத்த நிமிடம் புற்றிலிருந்து பாம்பு ஒன்று சீறிக் கொண்டு வெளியே வந்தது.

டிக்கியும் அதன் பின்னாலேயே மின்னல் வேகத்தில் வெளிவந்து தனது தலையையும் உடலையும் உதறிக் கொண்டது. பாம்பு, நல்ல பெரிய நாகப் பாம்பு. உடலை நெளித்துப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு படமெடுத்துச் சீறி டிக்கியைத் தாக்க ஆயத்தமானது. டிக்கி உடலைச் சிலிர்த்துக் கொண்டது. அவ்வளவு தான். அதன் உடம்பிலிருந்த முடிகளெல்லாம் சிலிர்த்து உயர்ந்தன. வால் புஸ்ஸென்று புடைத்துக் கொண்டது. திடீரென்று அது இரண்டு பங்கு பெருத்து விட்டதைப் போல் தோன்றியது.



பாம்பு சிறிப் பாய்ந்து டிக்கியைப் பல இடங்களில் கொத்தியது. டிக்கி அயரவில்லை. பாம்பின் தலைக்கே குறிவைத்துத் தாக்கியது. நீண்ட போராட்டத்திற்குப் பிறகு வென்றது டிக்கிதான்.

ரங்கன் இந்த நிகழ்ச்சிக்காவே காத்திருந்தான். போராடிய போது பாம்பு டிக்கியை எட்டு இடங்களில் கடித்ததை அவன் கணக்கெடுத்திருந்தான். பாம்பின் விஷம் கண்டிப்பாக டிக்கியின் உடலில் கலந்திருக்கும். அந்த விஷத்தை இறக்கிக் கொள்ள டிக்கி ஒரு வேரைத் தேடிப் போகுமே. அந்த வேர் எது என்பதை அறியவே அவன் டிக்கியைக் கவனமாகப் பாதுகாத்து வந்திருந்தான். இதோ அந்த அருமையான வாய்ப்புக் கிடைக்கப் போகிறது.

டிக்கி வாயில் வழிந்த இரத்தத்தோடு ''பரபர'' வென்று புதர்களுக்கிடையே ஓடியது. சங்கிலியை விட்டு விடாமல் பின் தொடர்ந்து ஓடுவது ரங்கனுக்கு சாதாரணமான செயலாக இருக்கவில்லை. ஆனாலும், சங்கிலியைக் கொண்டு டிக்கியின் ஓட்ட வேகத்தைக் குறைக்க வைத்து, தொடர்ந்து ஓடினான்.

அடர்ந்த காட்டின் புதர் நிறைந்த பகுதிகளைக் கடந்த டிக்கி நதியோரமாக வளர்ந்திருந்த மரங்களைக் கடந்துநிலத்தில்மண்ணுக்குவெளியே வேர் விட்டிருந்த ஒரு மரத்தினடியில் வந்து நின்றது. பிறகு மரத்தின் வேரைப் பற்களால் கடிக்கத் தொடங்கியது.

ரங்கனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அந்த மரத்தின் வேரை அப்படியே சிறு சிறு துண்டுகளாக்கி, பாம்பு கடித்தால் உயிரை மீட்டு வரும் அற்புத மூலிகை என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்வது போலவும், அவன் வீட்டு வாசலில் அந்த அற்புத வேரை வாங்கிப் போக மக்கள் கூட்டம் கையில் காசோடு காத்திருப்பதைப் போலவும். அந்த வேரை விற்றே அவன் பெரிய செல்வந்தனாகிக் காரில் போவது போலவும் கற்பனை செய்து கொண்டான்.

டிக்கி ரங்கனை நிமிர்ந்து நோக்கியது. ரங்கன் விற்ற வேரை வாங்கிச் சென்றவர்களெல்லாம் அந்த வேர் பாம்புக் கடிக்கு எவ்விதப் பயனையும் அளிக்காததைக் கண்டு கோபம் கொண்டு தங்களை ஏமாற்றி விட்டதற்காக ரங்கனை அடிக்க வருவது போலவும், ரங்கன் உதையைத் தாங்காமல் ஊரை விட்டே ஓடுவது போலவும் ஒரு வேடிக்கையான காட்சி அதன் மனக் கண்களில் தெரிந்தது. இப்பொழுது அது ரங்கனைப் பார்த்த பார்வையில் இரக்கமே மிகுந்திருந்தது.

காரணம் என்ன தெரியுமா?

அறிவியல் உண்மை:

பல்லி, ஓணான் போன்றவற்றைத் தின்று சீரணிக்கும் அளவுக்குத்தான் கீரியின் உடலில் நஞ்சை எதிர்க்கும் சக்தி இருக்கிறது. அதிக நஞ்சுள்ள பாம்பு கடித்து, அதன் நஞ்சு உடலில் இறங்கினால் கீரியும் இறக்க வேண்டியதே. பாம்போடு சண்டையிடும் போது, கீரி தனது உடலிலுள்ள முடிகளையெல்லாம் சிலிர்த்துக் கொண்டு நிற்பதால், பாம்புக் கடியை அந்தச் சிலிர்த்த முடிகளே தாங்கிக் கொள்கின்றன. பாம்புக்கடி கீரியின் உடலில் பட்டு, விஷம் இறங்கினால் கீரியும் இறக்க வேண்டியதே. பாம்போடு போராடிய பிறகு கீரி வேரைத் தேடி ஓடுவது சண்டையில் தேய்ந்து போன தன்னுடைய பற்களைக் கூர்மையாக்கிக் கொள்வதற்கே. வேரை அவை தின்பதே இல்லை. பற்களைக் கூராக்கிக் கொள்வதற்கே அவை வேரைக் கடிக்கின்றன. அவை கடிக்கும் வேர் எவ்வித மருத்துவக் குணமும் உள்ளவை அல்ல.



ஆசிரியர்: பையா, உங்கப்பா மளிகைக்கடைக் காரரா?

மாணவன்: எப்படி சார் தெரியும்?

ஆசிரியர்: இரண்டாம் குலோத்துங்கன்னு எழுதுடான்னா, இரண்டாம் கிலோத் துங்கன்னு எழுதியிருக்கியே!


— இரா. மதியழகன்.

விநோத தவளைகள்

ஆழி



உலகிலேயே மிகவும் பெரிய தவளை மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள 'கோலி யாத்' தவளைதான். சுமார் 80 செ.மீ. நீளம் உள்ளது. சுமார் 30 பவுண்டு எடை உள்ளது. அதன் இரை என்ன தெரியுமா? எலிகள், பாம்புகள்!




'கோலியாத்' தவளை, சுமார் 1½ மீட்டர் நீளமுள்ள பாம்பைக்கூட விழுங்கிவிடும்! எப்படி? முதலில் பாம்பின் தலைப் பகுதியை வயிற்றுக்குள் செலுத்திவிடும். அந்தப் பகுதி ஜீரணமானதும், மற்றப் பகுதிகளையும் இப்படியே கொத்சங் கொத்சமாக விழுங்கிவிடும். அது விழுங்கி முடிக்க 36 மணி நேரம் ஆகிறது!




போர்னியோவில் உள்ள 'வால்லேஸ்' என்னும் மரத்தவளையின் கால் விரல்களில், இறக்கை போன்ற தோல் அமைப்பு இருக்கிறது. அதன் உதவியால், அந்தத் தவளை, ஒரு மரத்தின் உச்சியிலிருந்து அடுத்த மரத்தின் உச்சிக்குத் தாவிச் சென்றுவிடும்!

ஆஸ்திரேலியாவில் உள்ள 'நீர்த் தவளை' உடலில் நிறைய நீரைச் சேமித்து வைத்துக்கொள்ளக் கூடியது. ஆஸ்திரேலிய ஆதிவாசிகள், நீர் கிடைக்காத காலங்களில் இந்தத் தவளையைப் பிடித்துப் பிழிந்து, அந்த நீரைப் பருகுகிறார்கள்!





தவளைகளில் மிகச் சிறியது 'டார்வின்' தவளை. முழு வளர்ச்சி அடைந்தால்கூட அது 2 செ.மீ. நீளம்தான் இருக்கும்!



தென் அமெரிக்காவில் 'அம்பு விஷத் தவளைகள்' இருக்கின்றன. அங்கே உள்ள செவ்விந்தியர்கள், இந்தத் தவளையின் அடித்தாடையில் உள்ள விஷத்தை எடுத்து அம்பில் தடவி, பிராணிகளைக் கொல்லப் பயன்படுத்துகிறார்கள்!


தவளைக்கு அற்புதமான ஞாபக சக்தி உண்டு. அது, தான் முட்டையிட்ட இடத்தை மறப்பதே இல்லை. சுற்றுப்புறச் சூழ்நிலைகள் மாறினாலும், முட்டையிட்ட இடத்தை அது கண்டுபிடித்துவிடும்!






குரல் எழுப்பிச் சத்தம் போடுவதெல்லாம் ஆண் தவளைகளே. அவை தொண்டையிலுள்ள குரல்- பெட்டியின் மூலம் ஒலியை எழுப்புகின்றன.

தவளையின் கண்கள் அசைவதில்லை. எனவே, அதன் எதிரே உள்ள பொருள்கள் அசைந்தால்தான் அதனால் பார்க்க முடியும்!






'நெருப்பு வயிறு'த் தவளை ஐரோப்பாவில் இருக்கிறது. சுமார் 4 செ.மீ. நீளம் இருக்கும். இதன் வயிறு நெருப்பு நிறத்தில் இருக்கும். இது தன் எதிரியைக் கண்டுவிட்டால் அப்படியே மல்லாந்து படுத்துவிடும். பார்ப்பதற்குத் தவளை மாதிரித் தெரியாது!




தென் ஆப்பிரிக்காவில் உள்ள 'காளைத் தவளை' கத்தும்போது ஒரு காளை மாடு கத்துவதுபோல் இருக்கும்!

தவளையால் வெளியில் தெளிவாகப் பார்க்கமுடிகிற மாதிரி நீருக்குள்ளும் தெளிவாகப் பார்க்க முடியும்!



ப்ருந்தாவனம்



ரிக்ஷாவைத் தெரியுமா?



ரிக்ஷா வாகனம் முதன் முதலில் உபயோகத்திற்கு வந்தது ஜப்பான் நாட்டில் தான். அவர்கள் இதனை 'மனித சக்தியால் இயங்கும் வண்டி' என்றழைத்தனர். ஜப்பானிய மொழியில் இதற்கான சொல், 'ஜின்—ரிகி—ஷா' என்பதாகும். இதுவே சுருக்கமாக ஆங்கிலத்தில் 'ரிக்ஷா' என்று உருப்பெற்றது!

— தகவல் செ. பாஸ்கரன்

2519 எண்ணுக்கு என்ன பெருமை?

2519 என்ற இந்த எண்ணுக்கு ஒரு சிறப்பு உண்டு. இவ்வெண்ணை—

10 ஆல் வகுத்தால் — 9 மீதியும்,
9 ஆல் வகுத்தால் — 8 மீதியும்
8 ஆல் வகுத்தால் — 7 மீதியும்
7 ஆல் வகுத்தால் — 6 மீதியும்
6 ஆல் வகுத்தால் — 5 மீதியும்
5 ஆல் வகுத்தால் — 4 மீதியும்
4 ஆல் வகுத்தால் — 3 மீதியும்
3 ஆல் வகுத்தால் — 2 மீதியும்

கிடைக்கும்.

— ஆர். வெங்கடசுப்பிரமணியன், சோழபுரம்.

திருவோடு சாதாரணமானது அல்ல!



கூடல் தேங்காய் எனப்படும் இரட்டைத் தேங்காயே திருவோடாகும். இதன் பிறப்பிடம் 'சிசெல்ஸ்' தீவுகள். இதன் உயரம் 8—30 மீட்டர் வரையாகும். இத் தேங்காயின் எடை 7 முதல் 13 கிலோ வரையில் இருக்குமாம்.

— வி. சுந்தரராமன், குத்தாலம்.



"கேட்டீங்களா அதிசயத்தை!"

குரைக்கத் தெரியாத நாய்:

டிங்கோ எனும் ஆஸ்திரேலிய வகை

நாய்க்குக் குரைக்கத் தெரியாது.

தண்ணீர் குடிக்காத எலி:

அமெரிக்காவில் வாழும் கங்காரு, எலிகள் தண்ணீர் குடிப்பதேயில்லை!

பின்பக்கமாகவும் பறக்கும் பறவை:

'ஹம்மிங் பேர்ட்' — எனும் பறவை பின் பக்கமாகப் பறக்கும் சக்தியுடையது ஆகும்.

— வி. சுந்தரராமன், குத்தாலம்.



இளம் எழுத்தாளர் ஒருவர் தாம் எழுதிய கதையொன்றை நாவலாசிரியர் அலெக்ஸாண்டர் டூமாஸுக்கு அனுப்பி, அதைப் பற்றி ஒரு மதிப்புரை வழங்குமாறு கேட்டார்.

அதற்கு டூமாஸ் எழுதினார். ''கழுதையும், குதிரையும் ஒன்றாகுமா?'' என்று.

அதற்கு அந்த எழுத்தாளரும் பதில் அனுப்பினார். ''என்னைக் குதிரை என்று குறிப்பிட்டதற்கு நன்றி!''

— எஸ். குருமூர்த்தி.



20 ஆண்டுகளுக்கு முன் சந்திரனில் இறங்கிச் சாதனை படைத்த 2 அமெரிக்க விண்வெளி வீரர்களின் காலடிச் சுவடுகள் இன்னும் 5 இலட்சம் ஆண்டுகளுக்கு அழியாமலிருக்குமாம்! ஏனெனில் சந்திரனுக்கு வளி (காற்று) மண்டலம் கிடையாது. அதனால் விண்வெளி வீரர்கள் சந்திரனில் பதித்த காலடிச் சுவடுகள் 5 இலட்சம் ஆண்டுகள் வரை அப்படியே இருக்குமாம்!

கலிபோர்னியா பல்கலைக் கழகத்தின் விண்வெளி ஆய்வு நிலைய இயக்குநர் ஜேம்ஸ். ஆர். ஆர்னால்ட் இந்த அரிய தகவலைக் கூறியுள்ளார்.

எனினும், வளி மண்டலம் இல்லாததால் சந்திரனுக்கு ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது. விண் கற்கள் உள்ளிட்ட பிற விண்வெளிக் காரணங்களால் படிப்படியாகச் சந்திரனில் பதிந்துள்ள வீரர்களின் காலடிச் சுவடுகள் மறையலாம் என்னும் அவர் தெரிவித்துள்ளார்.

1969 ஆம் ஆண்டு அமெரிக்க விண்வெளி வீரர்கள் நெய்ல் ஆம்ஸ்ட்ராங், எட்வின் ஆல்ட்ரின் ஆகிய இருவரும் சந்திரனில் இறங்கிச் சாதனை படைத்தது நினைவிருக்கலாம்.

— ரேவதி பாஸ்கர், குரோம்பேட்டை.



1. இலங்கையின் தேசியப் பறவை மைனா.
2. பள்ளிக்கூடச் சான்றிதழ்களில் சாதியைப் பற்றிக் கேட்க மாட்டார்கள்.
3. பள்ளிக்கூடங்கள் காலை எட்டு மணிக்குத் தொடங்கி பகல் ஒரு மணிக்கு முடிகின்றன.
4. உலகத்தில் முதல் கண் வங்கி ஏற்பட்டது இலங்கையில்தான்.
5. நமது ரூபாயின் மதிப்பு இலங்கையில் இரண்டு மடங்கு.
6. புகை வண்டியினை 'புகை இரதம்' என்று அழைப்பர்.
7. கடைகள் காலையில் எட்டு மணிக்குத் தொடங்கி மாலையில் நான்கு மணி வரை திறந்திருக்கும்.
8. இலங்கை டி.வி.க்கு 'ரூபாவாஹினி' என்று பெயர்.
9. இலங்கையில் பேருந்து முழுவதும் தேசியமயமாக்கப்பட்டுள்ளது.
10. பெண்களுக்கென்று பேருந்துகளில் தனியே இருக்கை கிடையாது.
11. விரைவு பேருந்துக்கும், சாதாரணப் பேருந்துக்கு ஒரே கட்டணம்தான்.

12. ஒவ்வொரு பேருந்திலும் மத குருமார் களுக்குத் தனி இருக்கைகள் இரண்டு இருக்கும்.

13. கொழும்பு வீதிகளில் ஒரு பக்கம் ஒற்றைப் படை எண்ணும் மறுபக்கம் இரட்டைப் படை எண்ணும் இருக் கும்.

14. இலங்கைத் தபால் தலையில் அந் நாட்டின் பெயரும் விளக்கமும் அச் சிடப்பட்டிருக்கும்.

15. இங்கு சிங்களர்கள் வீடுகளில் காவ லுக்குப் பாம்பை வளர்க்கின்றனர்.

16. தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும் அதே நாளில்தான் சிங்களப் புத்தாண்டும் பிறக்கிறது.

17. மகாவலி கங்கை — களு கங்கை — களனி கங்கை — மாணிக்க கங்கை — இவையெல்லாம் இலங்கையில் பாயும் நதிகளின் பெயர்கள்.

18. யாழ்ப்பாணத்தில் தமிழில் வெளிவந்த முதல் இதழ் உதய தாரகை. 1841 ஆம் வருடம்.

19. சிலோன் கெஜட்டில் தமிழ் இடம் பெற்றது 1802 இல்.

20. ரூபாய் நோட்டுகளில் வருடம் — மாதம் — நாள் கூட அச்சிடப்பட் டிருக்கும்.

— ந. க. பரமசிவம், புரசைவாக்கம்.



நாயை வணங்க மாட்டோம்! ஆனால் அதையே திருப்பிப் போட்டால் வணங்கு வோம்! எப்படித் தெரியுமா? இப்படித்தான்!

DOG (நாய்)
GOD (கடவுள்)

— சிவ. மதிவாணன், எடையூர்.



தேசபிதா மகாத்மா காந்தியடிகள் பிறந்த ஊர் போர்பந்தர். போர்பந்தருக்கு மற்றொரு சிறப்பும் உண்டு. மகாபாரதத்தில் கண்ணனின் குருகுல நண்பனான குசேலன் பிறந்ததும் கூட இந்தப் போர்பந்தரில் தான். குசேலனுக்கு சுதாமன் என்ற ஒரு பெயரும் உண்டு. போர்பந்தரில் பரம பக்தனான சுதாமனுக்கும், அவருடைய மனைவி சுசீலா தேவிக்கும் கோவில் இருக்கிறது. இக் கோவில் காந்தியடிகள் பிறந்த இல்லத் திலிருந்து ஒரு கிலோ மீட்டருக்கும் குறை வான தூரத்தில் உள்ளது. புராணங்களில் போர்பந்தர் சுதாமபுரி என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

— போ. பாலரிஷி, எட்டையாபுரம்.



14 வயதில் பார் புகழும் அருமையான சோக நாடகத்தினை எழுதி புகழ் பெற்றான் 'வில்லியம் பிட்'

15 வயதில் பிரெஞ்சு இலக்கியக் கழகத் திற்குச் சிந்தனையூட்டும் கவிதை ஒன்றைச் சமர்ப்பித்துத் தன் புகழுக்கு வித்திட்டான் 'விக்டர் ஹ்யூகோ.'

16 வயதில் தன் தந்தையின் படைக்குத் தலைமை தாங்கி உலகையே நிலைகலக் கினான் மாவீரன் 'அலெக்ஸாந்தர்.'

17 வயதில் பைசா நகரத்துக் கோபுரத் தில் உள்ள விளக்கு ஊசலாடுவதைக் கொண்டு ஆராய்ச்சியில் இறங்கிப் புதுமை கண்டான் 'கலிலியோ.'


18 வயதில் பிரெஞ்சுக்காரர்களிடம் தாய் நாட்டுப்பற்றை ஊட்டிப் போர்க் குரல் எழுப்பினான் 'ஜோன் ஆப் ஆர்க்'.

19 வயதில் இரயில் எஞ்சின் பற்றிய எந்திரத்தினைச் சிந்தனையில் உருவாக் கினான் ஸ்டீவன்சன்.

20 வயதில் மாற்றாரும் போற்றும் மகோன்னத நிலையைப் பெற்றான் புகழ் பெற்ற எழுத்தாளர் 'வாஷிங்டன் இர்விங்.'

21 வயதில் இசை உலகில் தன் பெயரை நிலைநாட்டிக் கொண்டான் 'பீதோவன்'.

தொகுத்தவர்: சேந்தங்குடி சேப்பு சுந்தர், மயிலாடுதுறை.



பெங்களூர் மெயிலில் வந்த சிங்கம்!

1980 ஆம் ஆண்டு, டிசம்பர் 6 அதிகாலை சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் ஒரே பரபரப்பு! எப்படியோ செய்தி வெளியே போய் விட்டது. 'ஏதோ சிங்கம் ஒன்று கூண்டை உடைத்துக் கொண்டு தப்பி பெங்களூர் மெயிலில் வருதாமே!' என்று ஒருவருக் கொருவர் பீதியுடன் கேட்டுக் கொண்டனர்.

அது உண்மைதான். கல்கத்தாவில் இருந்த 'எம்பயர் சர்க்கஸ்' என்ற கம்பெனி, தனது சர்க்கஸ் காட்சிக்காக மைசூர் மிருகக் காட்சிசாலையிலிருந்து இரண்டு சிங்கங்களையும் இரண்டு புலிகளையும் வாங்கியது. அன்றய மதிப்பின்படி ரூபாய் முப்பத்தோராயிரம் மதிப்புள்ள இவை, தனித் தனிக் கூண்டுகளில் அடைக்கப்பட்டு, பெங்களூருக்குக் கொண்டு வரப்பட்டன. பெங்களூர்—சென்னை இரயிலில் சாமான்கள் போட உள்ள 'பிரேக் வானில்' இவை ஏற்றப்பட்டன. சென்னைக்கு வந்ததும் கல்கத்தா இரயிலில் ஏற்றப்பட்ட சிங்கம் புலிகளுக்குக் காவலாக இன்னொரு பெட்டியில் ஐந்து பயிற்சியாளர்களும் இரயிலில் கூடவே வந்தனர்.

இவை அடைக்கப்பட்ட கூண்டில், ஒருபக்கத்துக் கம்பி அடைப்பை அப்படியே மேலே தூக்கிவிடும் வசதி இருந்தது. விலங்குகள் சிறுநீர் கழித்தால் அவை கூண்டிலேயே தங்கிவிடாது வெளியேற இந்த அடைப்பின் கீழ் எட்டு சென்டி மீட்டர் உயரத்திற்கு சிறு இடைவெளி விட்டு தூக்கிவைத்திருப்பார்கள்.

கூண்டில் அடைப்பட்டுக் கிடந்த ஒரு சிங்கத்தால் சும்மா இருக்க முடியவில்லை. இந்த இடைவெளியைக் கால்களால் இழுத்துப் பார்த்து அசைத்தது. இப்படிச் செய்த போது தற்செயலாக அடைப்பு மேலே போய்

விட்டது. வெளியே வந்துவிட்டது!

சிங்கத்தின் கொண்டாட்டத்திற்குக் கேட்கவா வேண்டும்! பிரேக் வேனுக்குள்ளேயே அது சிங்க நடை போட்டது! ஒரு வாரத்திற்கென ஐஸ் பெட்டியில் வைத்திருந்த இறைச்சியை ஒரு கை பார்த்தது! கால்வீசிப் பாய சுதந்திரம் கிடைத்த குஷியில் அது பிரேக் வேனுக்குள் ஆடிப் பாய்ந்து கர்ஜனை புரிந்தது.

பிரேக் வேனுக்கு அடுத்த பெட்டி பெண்கள் பெட்டி. சிங்கம் செய்த கலாட்டா அதில் பயணம் செய்தவர்களுக்குக் கேட்டிருக்கிறது. அவர்கள் பயந்து அரக்கோணம் வந்ததும் புகார் செய்தனர். பாதுகாப்பாக வந்த பயிற்சியாளர்களில் ஒருவர் சந்தேகத்தோடு பிரேக் வேனின் கதவை மெல்லச் சிறிதளவு தூக்கிப் பார்த்தார். சிங்கம் உலா வந்த காட்சி தெரிந்தது. உடனே மூடிவிட்டார்!

அதிகாரிகள் கூடிப் பேசினர். சென்னைக்குத் தகவல் பறந்து ஆலோசித்தனர். அப்படியே சென்னைக்குக் கொண்டு வந்து விடும்படி உத்தரவு கிடைத்தது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்ட்ரல் ரயில் நிலைய பிளாட்பாரங்கள் உடனுக்குடன் காலி செய்யப்பட்டன. வழிகள் பலப்படுத்தப்பட்டு மூடப்பட்டன. கூண்டை உடைத்த சிங்கத்தை வரவேற்க போலீசாரும், போர்ட்டர்களும், மிருகப் பயிற்சியாளர்களும் காத்திருந்தனர்.

இரயில் சென்ட்ரலை அடைத்ததும், பிரேக் வேனை, மட்டும் தனியாகப் பிரித்து வால்டாக்ஸ் ரோடு பக்கம் உள்ள பார்சல் பிரிவுக்குக் கொண்டு போனார்கள். 'வெல்டு முஷ்' எனும் கம்பிச் சுருளில் !பிரேக் வேனை மூடி வழி செய்தார்கள். புதிய கூண்டு ஒன்றைக் கொண்டு வந்து அந்த வழியில் நிறுத்தினார்கள்.

இனி அடுத்த வேலை, சிங்கத்தை பிரேக் வேனை விட்டு வெளியே வரச் செய்து கூண்டிலடையும்படி செய்ய வேண்டும். காலி தகர டப்பாக்களைக் கொண்டு / பிரேக் வேனில் தட்டி பயங்கரமான சத்தம் எழுப்பினார்கள். சிங்கம் அசையவில்லை! மேலுள்ள காற்றுக்கான இடைவெளி வழியாகக் கயிறு முடிச்சுக்களைப் போட்டுக் கழிகளால் குத்தி, சிங்கத்தின் கழுத்தில் சுருக்குப் போடப் பார்த்தார்கள். சிங்கம் கயிற்றைக் கடித்துப் பஞ்சு பஞ்சாக்கியது! இறைச்சியில் மயக்க மருந்தை வைத்து சிங்கத்திடம் வீசினார்கள். அந்தப் புத்திசாலிச் சிங்கம் அதை சட்டை செய்யாது மீதியிருந்த பழைய இறைச்சியையே சுவைத்தது! காலை ஆறு மணிக்குத் தொடங்கப் பட்ட இந்த முயற்சிகள் இரவு ஏழு மணி வரை இடைவிடாமல் தொடர்ந்தன. சிங்கம் எதற்கும் சிக்கிக் கொள்ளாது கர்ஜித்து விளையாடிக் கொண்டிருந்தது பிரேக் வேனுக்குள்ளேயே!

கடைசி முயற்சியாக ஒரு 'டியூப்' வரவழைக்கப்பட்டது. அதை சிங்கத்தின் முகத்தினருகே கொண்டு தொங்க விட்டார்கள். மறு முனையில் இருந்து மயக்க மருந்தை டியூப் வழியாக 'ஸ்ப்ரே' செய்து தூவினார்கள். சிங்கம் ஒருவழியாக மயங்கியது. அதற்குப் பிறகு கழுத்தில் சுருக்குப் போட்டு அதைக் கூண்டில் அடைத்தார்கள். அதன்பிறகுதான் சென்னை நகரம் அமைதியாகப் பெருமூச்சு விட்டது!

— ரே.


பெரியவர்: ஏண்டா, சைக்கிளில் வந்து மோதினே?

சிறுவன்: பிரேக் பிடிக்கலீங்க.

பெரியவர்: உன் சைக்கிளில் நல்லாத்தானே பிரேக் பிடிக்குது?

சிறுவன்: நான் பிரேக் பிடிக்கலீங்க!


— திலக்மன்.



[redacted]

புதையல் பூமி...

கொ.மா.கோதண்டம்



இதோ அருகிலேதான் இருக்கிறது என எண்ணிக் கொண்டு வந்தால் அந்த மலை இன்னும் தூரத்தில்தான் இருக்கிறது. சைக்கிள்களில் நாங்கள் நான்கு மாணவர்களும், எங்களை அழைத்து வரும் ஈஸ்வர ராஜும் கிராம வண்டிப் பாதையில் சென்று கொண்டிருந்தோம்.

'மொட்டை மலைக்குப் பாதை எப்படி?' என்று விசாரித்துக் கொண்டோம். இடையில் ஓடைகளில் இறங்கியும் மேடுகளில் சைக்கிள்களை உருட்டிக் கொண்டும் சென்றோம். அடிவாரம் வந்தாகி விட்டது. ஒரு மரத்தடியில் சைக்கிள்களை நிறுத்தி விட்டு நடந்து மலைக்குச் சென்றோம்.

சென்ற வாரம் ஓர் அமைப்பின் வேண்டுகோளுக்கிணங்க எங்கள் பள்ளியின் நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் கிருஷ்ணன் — கோவிலில் தூய்மைப் பணிகளைச் செய்து கொண்டிருந்தோம்.

மதியம் சாப்பிட்டுச் சிறிது ஓய்வு இருந்த நேரத்தில் எங்கள் ஆசிரியர் சந்திரவாணனிடம் ஈஸ்வர ராஜு சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தார். தெரிந்து கொள்ளும் ஆவலுடன் நானும் அருகில் சென்று அமர்ந்தேன்.

'நாங்கள் முன்பு விவசாயம் செய்து வந்த அந்த ஊரின் அருகே உள்ள மலையில் ஒரு குகைக் கோவில் இருப்பதாகவும், அது ஒரு அழகிய இடமென்றும், ஒரு மன்னன் ஆதிகாலத்தில் அந்தக் கோவிலுக்குத் தங்கத்தில் பல்லக்குச் செய்து தந்ததாகவும், பின்னால் தங்கப் பல்லக்கை அபகரிக்க யாரோ கொள்ளைக் கூட்டத்தினர் வரவிருந்த செய்தி அறிந்து ஊர் மக்கள் அந்தப் பல்லக்கை மலையடிவாரத்தில் புதைத்து வைத்து விட்டதாகவும், மலையில் பல குகைகள் இருப்பதாகவும், அடிவாரம் முழுவதும் ஆங்காங்கே முதுமக்கள் தாழி, மண்பாண்ட கலைப் பொருட்கள், பூமியில் புதைந்தும் சிதைந்தும் இருப்பதாகவும் அந்த இடம் பார்க்க வேண்டிய இடம்' என்றும் கூறினார்.

வரலாறு, புதைபொருள் இவைகளில் ஆர்வமுடைய எங்கள் ஆசிரியர், ''ஒரு நாள் எமது மாணவர்களை அங்கு அழைத்துச் சென்று காட்ட

இசைக் கருவிகளின் பெயர் என்ன?

புதிர் — விடை:

1. மிருதங்கம்,
2. டமாரம்,
3. தவில்,
4. தப்லா,
5. உடுக்கை,
6. கஞ்சிரா,
7. டோலக்.

வேண்டும். நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அங்கே பெரிய ஊர் இருந்திருக்க வேண்டும். மக்கள் செல்வச் செழிப்பில் வாழ்ந்திருக்க வேண்டும். அதுபோன்ற இடங்களைப் பார்ப்பதால் மாணவர்களுக்கு வரலாற்று அறிவு வளரும்,'' என்று கூறினார்.

இதனைக் கேட்ட எனக்கு நாமும் அங்குச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் வளர்ந்து விட்டது. ஆசிரியர் ஊரில் இல்லையென்றாலும் ஈஸ்வரராஜுவிடம் சொல்லி உடன் அமுதன், இளங்கோ, சங்கர், முத்து



ஆகிய எனது நண்பர்களையும் அழைத்துக் கொண்டு வந்து விட்டேன்.

மலையில் ஏறும் போது நார்த்தம் புல்லின் மணம் கமகமவென்று வீசியது. அந்தப் புல்லைக் கசக்கி முகர்ந்து பார்த்தால் மலையேறும் அலுப்புத் தோன்றாதாம். நடு மலையில் மழை நேரத்தில் கசிந்து வரும் நீரை நேராகச் சிறு வாய்க்காலாக வெட்டி அதை ஒரு தெப்பத்தில் விழுமாறு புதுமையாகச் செய்திருந்தார்கள்.

கோவிலுக்கு வந்ததும்தான் அது பூட்டியிருந்தது தெரிந்தது. ''வந்த அவசரத்தில் கிராமத்தில் சென்று பூசாரியை அழைத்து வர மறந்து விட்டோமே'' என்றார் ஈஸ்வரராஜு.

ஏமாற்றத்தில் அந்தப் பக்கம் இறங்

கினோம். ஒரு கிடங்கில் இருவர் கல் உடைத்துக் கொண்டிருந்தனர்.

''வாங்க வாங்க.நீங்க கூட தொல் பொருள் இலாகா ஆளுங்கதானா,'' என்று ஒருவர் கேட்டார்.

''இல்லே,நாங்க சும்மா பாக்க வந்தோம். ஆமா, அதென்ன நீங்க கூடன்னு சொன்னீங்களே. எதுக்கு'' ஈஸ்வரராஜு கேட்டார்.

''நாலஞ்சி நாளா இங்கே ரெண்டு பேரு வந்து அங்க அங்க தோண்டிக்கிட்டு இருக்காங்க. அவங்க தொல்பொருள் இலாகா ஆளுங்களாம். அடிவாரத்தில் எந்தக் கெடங்கிலே யாவது இருப்பாங்க, நீங்களும் அது மாதிரிதானான்னு கேட்டோம்.'' அவர்களுடன் சிறிது நேரம் பேசி விட்டு இறங்கினோம்.

அடிவாரத்தில் மழைக்கு அரித்து ஆங்காங்கே ஓடைகளும், கிடங்கு களுமாக இருந்தன.

''அதோ, அதுதானே முதுமக்கள் தாழி?'' அமுதன் ஆர்வத்துடன் கேட்டான்.

''முதுமக்கள் தாழின்னா என்னப்பா?''

''பண்டைக் காலத்துல இறந்தவர்களை அதில் வைத்துப் புதைப்பது வழக்கம். கூடவே விளக்கு, அவர்கள் ஆசைப்பட்ட பொருள்களையும் வைப்பார்கள்.''

நாங்கள் அதன் அருகே சென்றோம். தோண்டி எடுத்து உடைத்துப் போட்டிருந்தது. பாதி ஒரு துண்டாக வும் மீதி சில்லு சில்லாகவும் சிதறிக் கிடந்தன. மண் கலயங்களும் உடைந்து கிடந்தன. உடைந்து போன பொம்மைகளின் சிதறல்கள் எல்லா இடங்களிலும் சிதறியிருந்தன.

நான் கல் உடைக்கும் தொழிலாளர்களிடம் மீண்டும் போய், தங்கப் பல்லக்கு கதை பற்றி விசாரித்தேன்.

''ரொம்ப காலமா பரம்பரை பரம்பரையா இதைப் பத்திச் சொல்லிக்கிட்டுத்தான் இருக்காங்க. இந்த வட்டாரத்துல உள்ள எல்லா கிராம ஜனங்களும் இத நம்புறாங்க. ஆனா யாரும் இதுவரக்கு அதத் தோண்டிப் பாக்கணுமுன்னு நெனக்கலே. ஏன்னா! கடவுளு கண்ணை அவிச்சிப் போடுமுன்னு நெனக்காக. இப்ப இங்க வந்து அங்கங்கே தோண்டிப் பாக்குற ரெண்டு பேரு கூட இதப்பத்திக் கேட்டாங்க தம்பி.''

நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது தொல்பொருள் இலாகாவினர் அங்கே வந்தனர். ஒருவர் அதட்டலுடன் கேட்டார்.

''என்னப்பா, யாரு நீங்க? எங்கே வந்தீங்க?''

''நாங்க பள்ளி மாணவங்க.சும்மா பாக்க வந்தோம்.''

''வந்தா சாமி கும்புட்டு அப்படியே எறங்கிப் போயிடணும், மத்த எடத்துல எல்லாம் வந்து பாக்கக் கூடாது. நாங்க இங்க ஆராய்ச்சி செய்துக்கிட்டு இருக்கோம். அதுக்கு எடஞ்சலு செய்யாமெ போயிரணும் மத்தவங்களையும் கூட்டிக்கிட்டு போயிரு.''

''சரிங்க சார்,'' என்றவாறே நான் நண்பர்கள் உள்ள இடத்திற்குப் போனேன்.

அதற்குள் சங்கரும், முத்துவும் பாதி உடைந்து மீதி அரித்த மண் சுவர் போன்றிருந்த இடத்தில் இருந்த முதுமக்கள் தாழியின் மேல் மண்ணை ஒரு குச்சியால் சுரண்ட, உள்ளேயிருந்த ஒரு மண் கலசம் டக்கென்று கீழே விழுந்து சிதறியது. உள்ளே இருந்து வட்டமான ஓட்டுச் சில்லுகள் போன்ற பொருட்கள் கீழே சிதறின. பாறையில் பட்ட சில கணீரென்று ஓசை எழுப்பின. ஒன்றை எடுத்த இளங்கோ மண் போட்டுத்



தேய்த்து டவலால் துடைத்தான்.

''ஏய் தங்கக்காசு!'' ஆச்சரியத்துடன் கூவினான்.

ரொம்ப பழங்காலக் காசுங்க. இத வச்சி எவ்வளவோ வரலாறுங்க வெளியாகலாம். ஆக இத இப்படியே அரசாங்கத்துல ஒப்படைக்கணும்.''

நான் சொன்னதும் அனைவரும் 'சரி' என்றனர்.

''எனக்குப் பாக்க அவங்க ரெண்டு பேரும் தொல்பொருள் இலாகா ஆளுக மாதிரி தெரியல்லே. இவங்க எல்லாப் பொருள்களையும் ஒடச்சிருக்காங்க. உண்மையிலேயே இலாகா ஆளுங்கன்னா ஒரு சின்னக் கலயத்தக் கூட கீறல் கூட விழாமெ பத்திரமாதான் தோண்டி எடுப்பாக. இவக ஏதோ தங்கப் பல்லக்கு புதையல் இதுகளை எடுத்துட்டுப் போக வந்தவங்க மாதிரிதான் தெரியுது.''

இளங்கோவின் கருத்து எனக்கும் சரி என்றுதான் பட்டது.

இதை எப்படித் தெளிவாக்கிக் கொள்வது. நமக்குக் கிடைத்தது போல எத்தனை கலசங்களில் தங்கக் காசுகளை இவர்கள் எடுத்திருப்பார்களோ? நன்றாக விசாரிக்க வேண்டும். நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே அவர்களும் அருகில் வந்து விட்டனர்.

''என்ன ஏதாவது தோண்டிப் பாத்தேகளா?'' என்று கேட்டவாறே எங்கள் டவுசர் பைகளை சோதனையிட்டார்கள். இளங்கோ டக்கென்று ஓடினான்.

''ஏய், ஓடுறான் பாரு விடாதே புடி,'' என்று ஒருவர் சத்தம் போட பின்னால் ஒருவர் ஓட இளங்கோ ஓடி சைக்கிளை எடுத்துக் கொண்டு வேகமாக மிதித்து மறைந்தான். இடையில் காலில் முள் குத்தி விட்டதால் தயங்கி நின்றவர் எங்களைப் பார்த்து வந்தார்.

''இவங்க எல்லாரையும் புடிச்சிப் போடு'' என்றவர், ''டேய் அவன் ஏண்டா ஓடுறான். என்னத்தை எடுத்தீங்க? மரியாதையா சொல்லிடுங்க. இல்லே உங்க எல்லாரையும் இப்படியே குழியில போட்டுப் பொதச்சிடுவோம்'' என்றார்.

''நாங்க ஒண்ணும் எடுக்கல்லே. அவன் எதுக்கு ஓடுனான்னு தெரியல்லே. "இப்ப இப்படியே ஒருத்தனை அனுப்புறோம். ஓடனே போயி அவனைக் கூட்டியாரணும். இல்லேன்னா மத்த ரெண்டு பையங்களையும் கட்டுப்புடுவோம்.''

''இந்தா பாருங்க. நீங்க தொல் பொருள் இலாகா ஆளுகன்னா சட்டப்படி போலீசுல புடிச்சுக் குடுங்க. அதுக்காக, பொதச்சிடுவோம் கட்டுப் போடுவோமுன்னு பயமுறுத்துனா நியாயமில்லே நாங்க அதுக்கெல்லாம் பயந்தவங்க

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication: Madras
2. Periodicity of Publication: Monthly
3. Name of Printer: V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony,
   Anna Nagar,
   Madras-600 040
4. Name of Publisher: V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony,
   Anna Nagar,
   Madras-600 040
5. Name of Editor: K. Rajendran
   Nationality: Indian
   Address: 1, Fifth Street,
   Lake Area,
   Nungambakkam,
   Madras-600 034.
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital: Bharathan Publications Private Limited, 84/1-C, Race Course Road, Guindy, Madras-600 032.

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.1990

V. Murali
Publisher



இல்லே.'' ஈஸ்வரராஜு கூறியதும் அவர்கள் சிறிது தடுமாறிப் போனார்கள்.

''நாங்க என்னமும் செய்வோம். மொத அந்தப் பையன எங்ககிட்ட ஒப்படைக்கணும்.''

''அவன நாங்க யாரும் கூட்டியார மாட்டோம்.'' நான் சொன்னதும் ஒருவன் டக்கென்று கைத்துப்பாக்கியை எடுத்தான்.

''எல்லோரும் கைகளை மேலே தூக்குங்க. ஏய் மொதல்ல இவங்கள அந்தக் குகைக்குக் கூட்டிப் போயி உள்ள தள்ளிப் பூட்டிருவோம்பா.''

''அதெல்லாம் எங்கேயும் வர மாட்டோம். கைகளயும் தூக்க மாட்டோம். எங்கள வேணுமுன்னா போலீஸ் ஸ்டேசன் கூட்டிக்கிட்டுப் போங்க.வாரோம். சும்மா குகைக்கி அது இதுன்னு பயமுறுத்துனா நாங்க பயப்பட மாட்டோம்.''

நாங்கள் ஒன்று போலக் கூறியதும் அவர்களுக்கு அதிர்ச்சியாகத்தான் இருக்க வேண்டும்.

''வாங்கப்பா நாம போவோம். அவங்க செய்யறதை ச் செய்யட்டும்'' என்று ஈஸ்வரராஜு முன்னால் நடந்தார். நாங்களும் தொடர்ந்தோம்.

''டேய்!'' என்று எங்கள் சட்டைகளைப் பிடித்து மாணவர்களை மட்டும் பளீர் பளீர் என்று கன்னத்தில் அடித்தார்கள்.

எங்களுக்குக் கலங்கித்தான் போய் விட்டது. இவ்வளவு கடுமையாக நாங்கள் இதுவரை அடி பட்டதில்லை.

சத்தம் கேட்டுக் கல்லுடைக்கும் தொழிலாளர்களும் அங்கே வந்து விட்டார்கள்.

''எதுக்கு பையங்களப் போட்டு அடிக்கிறீங்க?'' என்று அவர்களும் அதட்டலுடன் கேட்க,

''இன்னொரு தரம் அடிக்க ஓங்குனா உங்க கைக ஒடிஞ்சி போகும் ஜாக்கிரதை!'' என்று ஈஸ்வரராஜுவும் அதட்டினார்.


''சரி, அவன் என்ன எடுத்துட்டுப் போறான்னு சொல்லிருங்க.உங்கள விட்டுடுறோம்.''

''ஒங்கிட்ட என்னய்யா சொல்றது?''— நான் கூப்பாடு போடவும் அவர்கள் என்னை அடிக்கக் கை ஓங்கவும் ஈஸ்வரராஜுவும், கல்லுடைக்கும் தொழிலாளர்களும் அவர்களைக் கீழே தள்ளிக் குத்து விட்டனர்.

'ஒய்ய்...' என்ற ஒலியோடு இரண்டு ஜீப்கள் அடிவாரத்தில் வந்து நின்றன. போலீஸ் அதிகாரிகள் துப்பாக்கிகளால் மேலே சுட்டவாறே மலை ஏறி ஓடி வந்தனர். நாங்கள் அந்த இருவரையும் நன்றாகப் பிடித்துக் கொண்டிருந்தோம். இளங்கோவும் மேலே ஓடி வந்தான். அவர்கள் கைகளில் விலங்கு மாட்டிய போலீஸ் அதிகாரி, டைரியை எடுத்துப் புரட்டி ஏதோ போட்டோக்களைப் பார்வையிட்டார்.

''அட நீங்கதானா! இன்னிக்கு வசமா அம்புட்டுக்கிட்டீங்க. தம்பிகளா! இவங்க ரெண்டு பேரும் போன வாரம் வெளிநாட்டுல இருந்து ஒரு கோடி ரூபா பெறுமான தங்கக் கட்டிகளைக் கடத்தி வந்தவங்க. நாங்க புடிச்சிட்டோம். எப்படியோ தப்பி ஓடிட்டாங்க. இந்தக் கிராமப்புறத்துல ஒளிஞ்சி புதையலையும் தேடிக் கொள்ளை அடிக்கலாமுன்னு திட்டம் போட்டிருக்காங்க. ஒங்களுக்கு ரொம்ப நன்றி. அரசாங்கப் பரிசும் உங்களுக்கு உண்டு. சரி வாங்க எல்லாரும் போகலாம்'' அதிகாரி எங்களை முதுகில் தட்டிக் கொடுத்தார்.

நாங்கள் பெருமிதத்துடன் பின்னால் நடந்தோம்.



* **கே. பாண்டியன், பாடி.**

கே: நம் உடலில் வலி, வேதனை, உணர்ச்சி முதலியன எப்படி ஏற்படுகின்றன?

ப: உடலில் உள்ள உணர்வு நரம்புகள் மயிரிழைகளாய் அடர்ந்து நெருங்கிப் பின்னிப் படர்ந்திருக்கின்றன. இவற்றுக்கு **End Organs** என்று பெயர். அத்தனையும் சருமத்தில் ஒட்டிக் கொண்டு மூளையில் சென்று முடிகின்றன. வெளியுலகத்துத் தட்ப வெப்பங்களை, உடலை வாட்டும் வேறு உபாதைகளை, ஊறுகளை உணர்ந்து, எந்த வகை உணர்வுகளை எந்த நரம்புகள் தெரிவிப்பது என்பதில் இந்த **End Organs** பங்கீடு செய்து கொண்டிருக்கின்றன. அதாவது சூட்டை உணர்ந்து சொல்லும் நரம்புகள் சூட்டை மட்டும்தான் உணரும். அவற்றுக்குக் குளிர் தெரியாது. அதேபோல் குளிரை



உணரும் நரம்புகள் தனி, வெட்டு, குத்து, விழுந்தால் அந்த வலியைப் புரிந்து தெரிவிக்கும் நரம்புகள் தனி. அவற்றுக்குள் அப்படியொரு கட்டுப்பாடு. அத்தனை ஏன்? எத்தனையோ ருசிகள் இருக்கின்றன. அவை என்னென்ன என்று உணர்வதில் நமது நாக்கு கூடப் பங்கு போட்டுக் கொண்டிருக்கின்றனவே! நுனி நாக்குக்குத்தான் தித்திப்புத் தெரியும்; அடி நாக்குத் துவர்ப்பை உணரும்; கசப்பு பக்கவாட்டு நா விளிம்புக்குத் தெரியும்; 'காரம் பட்டை உரிஞ்சு போச்சு,' என்கிறோமே, அது நடுநாக்கு — இப்படிச் சுவையறியும் டிபார்ட்மெண்ட்டும் தனித்தனிதான். இந்த அடிப்படையில்தான் மருத்துவத் துறையிலும் ஸ்பெஷலிஸ்ட்டுகள் ஏற்பட்டார்களோ என்னவோ! அந்த மட்டும் இந்த **End Organ** மாதிரி அத்தனை வகை இன்னும் வரவில்லையோ, ஓரளவு பிழைப்பு நடத்துகிறோமோ!

* **என். சிவகுமார், பரங்கிப்பேட்டை.**

கே: அணுகுண்டுக்கு இரையான ஜப்பான் எவ்வாறு சீர்திருத்தம் செய்யப்பட்டது? கதிரியக்கம் அவர்களைப் பாதிக்கவில்லையா?

ப: ஜப்பானில் ஹிரோஷிமா நகரம் பற்றி எரிஞ்சு போச்சே, அந்த அணுகுண்டு ரொம்பச் சாமானியமானது. அணு ஆராய்ச்சியின் ஆரம்ப காலத்துக் கற்றுக்குட்டித்தனமானது. அந்தக் கதிரியக்கப் பாதிப்புக்கு ஆளானவர்கள் அப்படி அப்படியே குரூரமான உருவத்தில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாய் அஸ்தமனமாகிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அணுகுண்டு அழிவெல்லாம் ஓர் ஐந்தாறு ஆண்டுகளுக்குள் அடங்கிப் போய்விட்டது. ஜப்பானிய மண்ணுக்கே உரிய முயற்சியும் முன்னடைவும் அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பழைய நிலைக்கு — ஏன், அதற்கும் மேலேயே உயர்த்திவிட்டது. அணுகுண்டைத் தொடர்ந்து அதற்கும் மேலாக அழிவு சக்தி கொண்ட படாபடா குண்டுகளையெல்லாம் ஒவ்வொரு பெரிய நாடுகளும் கண்டுபிடித்து வைத்துக் கொண்டிருக்கின்றன. அந்தக் குண்டுகள் விழுந்தால் அங்கு நூற்றுக்கணக்கான சதுர கிலோமீட்டர்களில் எந்த ஜீவனும் உயிர் வாழ முடியாத அளவுக்குக் கதிரியக்கம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆளுகை நடத்திக் கொண்டிருக்கும். இப்போது லேட்டஸ்ட்டாக அமெரிக்கா நியூட்ரான் குண்டு கண்டுபிடித்திருக்கிறது. மகா அதிசயமான சக்தி வாய்ந்தது இந்தக் குண்டு. இதைப் போட்டால் — இதன் கதிரியக்கம் எத்தனை கிலோமீட்டர் எல்லையை எட்ட வேண்டுமோ அதற்குத் தகுந்தாற் போல் சின்னதும் பெரியதுமாய்த் தயாரித்துப் போடலாம்! உயிரினங்கள் மட்டுமே 'ஹோகயா' ஆகிவிடும். மற்றப்படி அங்குள்ள கட்டிடங்கள் வேறு பண்ட பாத்திரங்கள் எதற்கும் சேதாரம் கிடையாது. அதனால் பரவிய கதிரியக்கமும் நாள் கணக்குக்குள் அடங்கிப் போய்விடும். அப்புறம் குண்டு போட்டவர்கள் அங்கு புகுந்து சடலங்களையெல்லாம் அப்புறப் படுத்திவிட்டுச் சர்வ வசதிகளுடன் அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளலாம்.





இதற்குப் பேர் யுத்தமா? ஒருவிதமான கொள்ளைதானே? யார் செய்த புண்ணியமோ, இதுவரைக்கும் இந்த மாதிரி பயங்கரங்களெல்லாம் அமுல் நடத்தப்படாமல் இருக்கின்றன. மனித நலம் விரும்பும் தேசத் தலைவர்கள் எல்லாம் யுத்தம் வேண்டாம், வேண்டாம் என்று சமாதானக் கொடி யாட்டிக் கொண்டே இருப்பது ஏன் என்று இப்போதாவது புரிகிறதா?

* பி. அப்துல் ரஷீத். தாதங்குப்பம்.

கே: மிளகு சாப்பிடுவது எவ்வகையில் சிறந்தது?


ப: உடன் இருந்தே நமது உடல்நலத்தைப் பாதிக்கும் நஞ்சு மூன்று என்கிறது தமிழ் மருத்துவம். அவை: உப்பு, புளி, மிளகாய். நாக்குக்கு அடிமையானவர்களை இவை அதிகமாய் ஆக்கிரமித்து ஆரோக்கியத்தை அரித்துக்கொண்டிருக்கின்றன. இவற்றில் மிளகாய் கடுஞ்சூடு. மாறாகப் பயன்படுத்தும் மிளகு குளுமை. இது உடலுக்குக் கெடுதல் செய்யாது. உப்பு, மிளகு, திப்பிலி சேர்த்து அற்புதமான மருந்து கபத்துக்கு. மிளகு வேறு எந்தெந்த நோய்க்குப் பயன்படும் என்று உங்கள் உள்ளூர் நாட்டு வைத்தியரைக் கேட்டுப் பார் — ஒரு குட்டி லெக்சரே கொடுப்பார். அடேங்கப்பா, மிளகின் பெருமை சொல்லத் தரமா? இது நம் நாட்டுக்கு மட்டுமே உரிய சொத்தாயிற்றே! ஆதி நாள் தமிழின் கடல் வணிகத்துக்குக் கொண்டு சென்ற ஏற்றுமதிப் பொருள்களில் மிளகு முக்கியமானதாயிற்றே! அன்று மட்டுமல்ல; இன்றுகூட மேலை நாடுகளுக்கு நம் மிளகு போய்ச் சேராவிட்டால் அவர்களுக்குக் காரச் சுவையே தெரியாமல் போய்விடும். காரத்துக்கு மிளகாயை அவர்கள் பயன்படுத்துவதில்லை. நம் பக்கத்துக்கு வரும் மேனாட்டுச் சுற்றுப் பயணி ஒருத்தர் என்னமோ ஏதோ என்று இட்டிலிக்கு மிளகாய்ப் பொடி தொட்டுக் கொண்டு, அவர் கன்னாபின்னாவென்று கண்ணிலும் மூக்கிலும் நீர் வழிய நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு பட்ட அவஸ்தையை நினைக்கப் பாவமாய் இருக்கிறது. மிளகுக் காரம் அத்தனை பாடுபடுத்தாது. ஆனால் இந்தக் காரத்துக்குக் காசு கொஞ்சம் அதிகம் என்று தயங்குகிறார்கள். மிளகாய் சேர்க்கும் நோய்க்குச் செலவிடுவதை விடக் குறைச்சல் என்று யார் எண்ணிப் பார்க்கிறார்கள்?

* சி. எஸ். முகமது நசில், கன்னண்டஹள்ளி.

கே: மின்சாரக் கம்பிகள் மீது பறவைகள் உட்காருகின்றன. அவற்றை மின்சாரம் தாக்குவதில்லையே, ஏன்?

ப: இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்கே எனக்குப் பயமாய் இருக்கிறது. தயவு செய்து இந்தப் பதில் சரிதானா என்று டெஸ்ட் பண்ணிப் பார்க்காமல் இருக்கும்படி முன்கூட்டியே கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரக் கம்பிகள் ஒவ்வொன்றிலும் பயணம்செய்வது நெகடிவ் அல்லது பாஸிடிவ் சக்தி மட்டும்தான். அது எர்த் ஆனால்தான் — அதாவது பூமியில் இறங்கும் போதுதான் மின்சக்தி உற்பத்தியாகித் தாக்குகிறது. மேலிருந்து பறந்து ஒரு மின்சாரக் கம்பியில் அனாமத்தாய்ப் பறவை உட்காரும் போது சர்க்யூட் பூர்த்தியாவதில்லை. அதனால் மின்சாரம் தாக்குவதில்லை. அப்படி உட்காரும் போது மின்சாரத்தால் தாக்குண்டு அப்படியே எகிறித் துடித்துச் செத்துவிழும் பட்சியை நீ பார்த்ததில்லையா? நான் பார்த்திருக்கிறேன். அது எப்படி? இறகு விரித்து நெகடிவ் லைனில் அது உட்காருவதாய் வைத்துக் கொள்வோம். அப்போது தவறிப் போய் பாஸிடிவ் லைனில் இறகு முனை பட்டாலும் போதும்; சர்க்யூட் பூர்த்தியாகிப் பறவை உடல் கருகிப் பரலோகப் பதவி அடைந்துவிடும்.



'அது சரி நயினா, நானும் ஒரே கம்பியைப் பிடிக்கிறேன். எனக்கு ஒன்றும் ஆகாதேன்னு கேட்கிறாயா? உன்னால் அப்படி முடியாது கண்ணா. மின் கம்பத்தில் ஏறித்தானே கம்பியைப் பிடிப்பாய்? அப்போது கம்பத்து வழியே நீ பூமியோடு தொடர்பு கொண்டிருக்கிறாய். கம்பி வழியே செல்லும் மின்சாரம் உன் வழியே பூமிக்கு இறங்கி, அநியாயமாய் அம்பேலாகிப் போவாய். வேண்டாம் தம்பி, இந்த மாதிரியான விபரீத விஷப் பரீட்சை!

சின்ன அண்ணன்



ஒரு காலத்தில் ஆடம்பரப் பொருளாகக் கருதப்பட்ட "டூத் பிரஷ்' இன்று ஆரோக்கிய வாழ்வின் இன்றியமையாத அன்றாடப் பொருளாக ஆகிவிட்டது.


'என்சைக்ளோபீடியா' என்ற கலைக் களஞ்சியங்கள் 'டூத் பிரஷ்ஷின்' முன்னோடி 'டூத் பிக்குகள்' தான் என்கின்றன. பல் ஈர்க்கு என்று கிராமத்தில் அழைக்கப்படும் ஈர்க்குச்சி வடிவமுள்ள ஒரு பொருள் தான் இது. கூர் சற்று மழுங்கிய நிலையில் இருக்கும். இதை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சுமேரியர்கள் பயன்படுத்தினார்கள். பற்களின் இடுக்குகளில் சிக்கிக் கொண்டுவிட்ட உணவுத் துகள்களை எடுப்பதற்கு இது பயன்பட்டது. பின்னர் நுனியில் நாரால் ஆன சில குச்சங்களுடன் பற்களைத் துலக்க ஒரு வகை பிரஷ் உருவாயிற்று. இதையும் 'டூத் பிக்' என்றே அழைத்தார்கள்.

இவை குளியல் அறைகளில் தொங்க விடப்பட்டன. இத்தகைய மாடல்களில் மிகப் பழமையானவை சீனாவில் உள்ளன. வசதியுள்ள பிரபுக்கள் வீட்டுப் பெண்கள் இவற்றிற்கு விலையுயர்ந்த வேலைப்பாடு மிக்க கைப்பிடிகள் அமைத்து வெளியில் போகும்போது எடுத்துச் சென்றார்கள். இதைக் கழுத்தில் ஆபரணம் போல் போட்டுக் கொண்டவர்களும் உண்டு!

ஜப்பானில் பல் நோய்களைத் தீர்க்கவல்ல தேவதைக்கு ஓர் ஆலயமே இருந்திருக்கிறது. இங்கு, 'டூத் பிக்கு'கள், பக்தர்களால் காணிக்கை செலுத்துவதற்காக விற்கப்பட்டன.


முதன் முதலாக 'டூத் பிரஷை'த் தயாரித்து உபயோகித்த பெருமைக்கு உரியவர் 'வில்லியம் அடிஸ்' என்பவர். இவர் மேற்கு இங்கிலாந்தின் 'நியூகேட் சிறை'ச்சாலையில் கைதியாக இருந்தார். கலகம் விளைவித்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்பெற்ற இவர், சிறைச் சாலையில் தமக்களிக்கப்பட்ட உணவில் இருந்த எலும்புகளில் சிறு ஓட்டைகள் போட்டார். இவரை மேற் பார்வை பார்க்கும் காவலர் கொண்டுவந்து கொடுத்த நார்க் குச்சங்களை இறுக்கி, ஓட்டைகளில் பொருத்தி பல் தேய்த்துக் கொண்டார். உலகில் 'டூத் பிரஷை' முதலில் செய்த பெருமைக்கு ஆளானார். இது நிகழ்ந்த ஆண்டு 1780. விடுதலை பெற்று வெளியே வந்ததும் அடிஸ் தனது அனுபவத்தை வைத்து 'டூத் பிரஷ்' தயாரிக்கும் தொழிலைத் தொடங்கிக் கொள்ளை இலாபம் சம்பாதித்தார்.

உலக முழுவதும் நெடுங்காலமாக நார்த்தன்மைகொண்ட மரக்குச்சிகள், 'டூத் பிரஷின்' பணியைச் செய்து வந்துள்ளன. நமது நாட்டில் புராதன கால முதலே ஆலமர, வேப்ப மரக்



* 2000 ஆண்டுகளுக்கு முன் பயன்படுத்தப் பட்ட 'டூத் பிக்'குகள்.

சோநம்பி



* தொடக்க காலத்தில் உருவான 'டூத் பிரஷ்'கள்.

குச்சிகள் பயன்பட்டு வந்துள்ளன.

சீன நாட்டுத் தகவல்கள் 1498 ஆம் ஆண்டிலேயே தற்போதைய 'டூத் பிரஷ்' அந்நாட்டவரால் கண்டு பிடிக்கப்பட்டுப் பழக்கத்திற்கு வந்து விட்டதாகக் கூறுகின்றன. இதுவே 18 ஆம் நூற்றாண்டில் மேற்கு நாடுகளுக்கு அறிமுகமாகியது என்றும், இதை எங்கோ பார்த்துவிட்ட 'வில்லியம் அடிஸ்' அதே மாதிரித் நமது எலும்பு பிரஷை வடிவமைத்தார் என்றும் கூறுகின்றன.

அமெரிக்கக் கலைக்களஞ்சியமோ முதல் 'டூத் பிரஷைத்' தயாரித்த பெருமை தங்கள் நாட்டுக்கே உரியது என்கிறது. ஹானோவர் நகர சபை உறுப்பினர் சோபியா என்பவர் 1640 ஆம் ஆண்டில் 'டூத் பிரஷை' உபயோகித்து வந்ததாகச் சொல்கிறது. உண்மை எதுவானாலும் இவர்கள் இப்படிப் போட்டி போடுவதிலிருந்து டூத் பிரஷின் பெருமை நமக்குப் புரிகிறது!

1800 ஆம் ஆண்டுகளில் 'டூத் பிரஷ்'கள் தனித் தனியாக விற்கப்படவில்லை. குச்சங்கள் கொண்ட, பல்வேறு வடிவமுள்ள ஐந்து அல்லது ஆறு பிரஷ்கள் 'செட்'டாக விற்கப்பட்டன. பணியாளர் எஜமானருக்குப் பல் தேய்த்துவிட வசதியாக வளைந்த பிடி கொண்ட பிரஷ், மத்து வடிவ பிரஷ், பக்கத்திற்கு ஒருவர் இருந்து தேய்த்துவிட வசதியாக ரம்ப வடிவ பிரஷ் என்று இவை பல வடிவில் தயாரிக்கப் பட்டன!

ஆரோக்கியமான முறையில் பற்களைப் பராமரிக்க 'டூத் பிரஷ்' கொண்டு பல் துலக்குவது அவசியம் என்ற எண்ணத்தை உலக முழுவதும்

மக்களிடையே வேரூன்றச் செய்த பெருமை பல் வைத்தியர்களையே சாரும்.


நைலான் குச்சங்களை வைத்து டூத் பிரஷை அறிமுகப்படுத்திய பெருமையை 1938 இல் தட்டிக் கொண்டு போனவர் அமெரிக்க டாக்டர் வெஸ்ட். தானியங்கு முறையில் பாட்டரி உதவி கொண்டு பல் தேய்த்து விடும் 'டூத் பிரஷை' அறிமுகம் செய்தது நியூயார்க்கைச் சேர்ந்த 'ஸ்க்விப்கோ' நிறுவனம். இது நடந்தது 1961 இல்.

மேல்வரிசைப்பற்களை மேலிருந்து கீழும், கீழ் வரிசைப்பற்களைக் கீழிருந்துமேலுமாக உட்புறம், வெளிப்புறம் பிரஷ் கொண்டு துலக்க வேண்டும். ஆனாலும் மிகவும் பயன்படக் கூடியது நம் ஆள்காட்டி விரல் தான்! பிரஷ் செய்த பிறகு, ஈறுகளை விரலால்'மஸாஜ் செய்ய வேண்டும். பற்கள் சுத்தமாக இல்லாவிட்டால் பல நோய்கள் வரும்.

அமெரிக்க அலபாமா மாநிலத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு, 'டூத் பிரஷை'க் கொண்டு முறையாகப் பல் துலக்குவது எப்படி என்பதைத் தனி வகுப்பறைகளில் கற்றுத் தருகிறார்கள். சந்தம் மிக்க குழந்தைப் பாடல்கள் இதற்கு மிகவும் உதவியாக உள்ளனவாம்!

உலகப் புகழ் பெற்ற வரலாற்று வீரர் நெப்போலியன் பயன் படுத்திய 'டூத் பிரஷ்,' இலண்டனில் கடந்த ஆண்டு ஏலம் விடப்பட்டது. மரக் கட்டையால் ஆன அது எட்டு இலட்சம் ரூபாய்க்கு விலை போனது!

இராஜபாளையத்தில் கோகுலம் சிறுவர் சங்கம்



கோகுலம் வாசகர்கள் கூடினாலே பெரும் கொண்டாட்டம்தான். அவர்களுடன் சிறுவர் இலக்கியம் படைக்கும் ஆசிரியர்களும் சேர்ந்து கொண்டால் கேட்கவா வேண்டும்? இராஜபாளையம் கோகுலம் சிறுவர் இலக்கியச் சங்கம் 26.12.89 அன்று காந்தி கலை மன்றத்தில் சிறுவர் இலக்கியக் கூட்டமொன்றை நடத்தியது. கோகுலம் கௌரவ ஆசிரியர் தேசபந்து அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற, பிரபல குழந்தை எழுத்தாளர்கள் கொ. மா. கோதண்டம், ரா. பொன்ராசன், டாக்டர் கணேசன், ந. மீனாட்சி சுந்தரம் போன்ற பலர் குழந்தை இலக்கியம் ஆரோக்கியமாக வளர வேண்டியதன் அவசியத்தையும், நல்ல பத்திரிகைகளைப் படிக்கும் பழக்கம் வளர வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினர்.

— கோ. குறளமுதன்.

சார் தபால்!

* சிறுவர்களின் மாத மலர் என்றால் கோகுலந்தான். பேஷ் பேஷ் ரொம்ப நன்னாருக்கு!

ஆதம்பாக்கம், இரா. மணிகண்டன்.

* கோகுலச் சிறுவர் சங்க உறுப்பினர்களை ஆக்க பூர்வ வழிகளில் ஈடுபட வைக்க இந்த இனிய புத்தாண்டில் ஆலோசனை நல்கிய அன்பு அண்ணனுக்கு அன்பு கலந்த நன்றி!

வந்தவாசி, வி. எஸ். பொன்னம்மாள்.

* 'எல்லோரும் இன்புற்று இருக்க' என்ற வாரியாரின் கட்டுரை சிறுவர்கள் மட்டும் அன்றி, அனைவரும் படிக்க வேண்டிய ஒன்றாகும்.

பி. பி. குளம், ம. செந்தில்நாதன்.

* சிறுவர்களை மட்டுமல்லாது, பெரியவர்களையும் மூக்கில் விரல் வைக்கச் செய்து விட்டான், ராதாகிருஷ்ணன் என்ற ரஞ்சித்! ரஞ்சித் இன்னும் பல சாதனைகள் புரிந்து தனிப் பெரும்புகழ் பெற என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

மதுரை – 1, பிரபாகர் ப்ரியன்.

* பாரதப் பிரதமர் வி. பி. சிங் பற்றிய கட்டுரையில் அவரது சிறு வயதில் நடந்த நிகழ்ச்சி முதல் இன்று வரை நடந்தவைகளை ஜானகிமணாளன் எப்படித்தான் சேகரித்தாரோ! பயனுள்ள கட்டுரை.

செஞ்சி, தா. ஷேக்உசேன்.

* புதிய பிரதமர் தன் சிறு வயதில் துப்பாக்கி முனை பாதுகாப்பில் பள்ளி வாழ்க்கையை ஓட்டியிருக்கிறார் என்பதை அறியும் போது வியப்பாக இருக்கிறது.

ஊத்தங்கரை. பி. கோவிந்தசாமி.

* என் உயிர்த் தோழன், தோழி படித்தேன். மனமகிழ்ச்சி அடைந்தேன். பிஞ்சு நெஞ்சில் இத்துணை பரிவு, பொறுப்பு, பொறுமை உணர்வுகளா என வியந்தேன். குழந்தையும் தெய்வமும் ஒன்று என்பது உணர்த்தப் பட்டுள்ளது.

ஈரோடு, டி. சந்திரன்.

* சந்திரனும் மனிதனும் பகுதியில் காணக் கிடைக்காத அறிவியல் செய்திகளைத் தந்த ஆழிக்கு நன்றிகள்.

பூந்தோட்டம், து. பாண்டியன்.



வாழ்க ரஞ்சித்!

* திரு. பேராளம் புகழ்மதி எழுதி வருகிற எழுச்சியூட்டும் அறிவுரைகளைப் படிக்கும் போது சோர்ந்திருந்த என் உள்ளம் சோர்வு நீங்கிப் புத்தொளி பெற்று சாதனை படைக்க எழுந்து விட்டது சார்.

அம்மாபேட்டை, கிருஷ்ணப்ரியா.

* 'பல்லிளிச்சான் கணவாய்ப் பக்கமாக' சிறுகதை மிக அருமை சார். அமுதனும், இளங்கோவும் நீலனுடன் சென்று பார்த்த இடங்கள் எல்லாம் நாங்களும் சென்று பார்த்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. ஆசிரியர் கொ. மா. கோதண்டத்துக்குப் பாராட்டுக்கள்.

புன்செய்புளியம்பட்டி, பி. எல். கிரிஜா.

* 'பேனிலிருந்து தலையைப் பேணிக் காக்க....' பற்றிய தொகுப்பு என் போன்றவர்களுக்குப் பயன் உள்ளதாக இருந்தது. இது போன்ற பயனுள்ள பல கட்டுரைகளை மேலும் மேலும் கோகுலத்தில் எதிர்பார்க்கிறோம்.


சீர்காழி, ஜெயா ஷண்முகம்.

* 'கட்டை விரல் டாம்' வெகு அருமை. எஸ். சித்ரா அவர்களுக்கு எமது பாராட்டு. மற்றும் எட்டுக்கு எட்டு படக் கதைத் தொடர் மிக மிக விறுவிறுப்பாகச் செல்கிறது. 'பிருந்தாவனம் கவியரங்கம்' பூத்துக் குலுங்கியது.

சிதம்பரம், எஸ். சிவக்குமார்.

* 'கலிங்க நாட்டு இளவரசி புஷ்பகந்தி' படக்கதை 'பிறர்க்கு தானம் அளித்தால் அது பிற்காலத்தில் நமக்கு உதவிடும்' என்பதை நன்கு விளக்கியது. படக்கதை மிக மிக அருமை!

குடியாத்தம், கே. எம். ரவிசங்கரன்.



அன்று ஞாயிற்றுக்கிழமை. எனக்கு ஓய்வுநாள். வராண்டாவில் ஓய்வாக அமர்ந்திருந்தேன். அப்போது பக்கத்து வீட்டு அமுதனும் அனிதாவும் என்னைச் சந்திக்க வந்தனர்.

அமுதன் அன்னமராஜா மேல்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பில் படிக்கிறான். அனிதா அம்மணியம்மாள் மேல் நிலைப்பள்ளியில் ஆறாம் வகுப்பில் படிக்கிறாள். இருவரும் உடன் பிறந்தவர்கள். இனிமையாகப் பேசுவார்கள்.

அமுதன், அனிதா (இருவரும்): வணக்கம், மாமா!

நான் : வணக்கம், என்ன அண்ணனும் தங்கையும் சாவகாசமாக வருகிறீர்கள்?

அமுதன் : இன்று லீவுதானே! அதுதான் உங்களுடன் பேசிக்கொண்டிருக்கலாம் என்று வந்து விட்டோம். உங்களுக்கு ஒன்றும் தொந்தரவு இல்லையே!

நான் : அதெல்லாம் இல்லை. ஆமாம், அனிதாவின் கையில் என்ன? செய்தித்தாள் மாதிரி தெரிகிறதே!

அனிதா : ஆமாம், மாமா. இன்றைய செய்தித்தாள்தான். இதில் ஒரு செய்தி – 'காலராவால் பத்து பேர் பலி!' என்று போட்டிருக்கிறார்கள். 'காலரா' என்றால் என்ன மாமா? அதன் முழுவிவரங்களும் எங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லையே!

நான் : தெரிந்து கொள்ள வேண்டியதுதானே? சொல்கிறேன். காலரா (CHOLERA) என்பது ஒரு தொற்று வியாதி. சுகாதாரக் கேட்டினால் வரக்கூடியது. உயிருக்கு ஆபத்து தரக்கூடிய வியாதியும் கூட! 'விப்ரியோ காலரே' (VIBRIO CHOLERA) என்ற ஒரு வகை பாக்டீரியா கிருமிகள் நம் சிறுகுடலைத் தாக்கும்போது காலரா வருகிறது.


அமுதன் : இந்த நோய்க் கிருமிகள் எங்கிருந்து வருகின்றன?

நான் : இக்கிருமிகள் மலத்தில் இருக்கும். குறிப்பாக, காலராவால் பாதிக்கப்பட்ட நபரின் மலத்தில் காலராக் கிருமிகள் அதிகமாகக் காணப்படும். நம் மக்களிடத்தில் பொது இடங்களில் மலம் கழிக்கும் பழக்கம் அதிகமாக உள்ளதால், இக்கிருமிகள் அசுத்தமான தெருக்களிலும், சாக்கடை, கால்வாய், குளக்கரை, ஆற்றங்கரை போன்ற இடங்களிலும் வாசம் செய்யும். இவை மழைக் காலங்களிலும், வெள்ளம், புயல் வரும் போதும் குடி நீருடன் கலந்து விடும். பின்பு அந்த அசுத்த நீரை நாம் குடிக்கும் போது காலராக்

கிருமிகள் நம் உடம்புக்குள் நுழைந்து விடும். இது போலவே ஈக்கள், கொசுக்கள் மூலமாகவும் காலராக் கிருமிகள் நம்மிடத்தில் பரவும்!

அனிதா : இவை நம் உடம்புக்குள் நுழைந்ததும் என்ன செய்யயும்?

நான் : நம் உணவுப் பாதையில் சிறுகுடல் இருக்கிறதல்லவா? அதில் தான் காலராக் கிருமிகள் தங்கு கின்றன. அங்கிருக்கும் உணவினைத் தின்று வளர்கின்றன. எண்ணிக்கை யில் பெருகுகின்றன. பின்பு 'எக்ஸோ டாக்சின்' **(Exptoxin)** என்ற நச்சுப் பொருளை உற்பத்தி செய்து இரத்தத் தில் கலந்து விடுகிறது. இதனால் காலரா நோய் நமக்கு ஆரம்பமாகும்!



அமுதன் : காலராவின் அறிகுறி கள்தான் என்ன, மாமா?

நான் : திடீரென்று ஆரம்பிக்கக் கூடிய அதிக அளவிலான வயிற்றுப் போக்கும், வாந்தியும் காலராவின் ஆரம்ப அறிகுறிகள். பிறகு நேரம் செல்லச் செல்ல வயிற்றுப் போக்கு— தண்ணீர் தண்ணீராகப் பீச்சி அடிக் கும். அப்போது மலம் பார்ப்பதற்கு அரிசிக்கஞ்சி மாதிரி வெண் பருப்பு நிறத்தில் இருக்கும்.

அனிதா : காலராவினால் நம் உயிருக்கு ஆபத்து வரும் என்று சொன் னீர்களே, அது எப்படி?

நான் : காலராவில் அதிகமான வயிற்றுப் போக்கு இருக்குமென்று சொன்னேன் அல்லவா? அதன் மூலம் நம் குடலில் இருக்கும் நீர்ச் சத்தும், இரத்தத்தில் இருக்கும் நீர்ச் சத்தும் மிக வேகமாக வெளியேறி விடுவதால், காலரா நோயாளி விரை விலேயே தளர்ச்சியும் சோர்வும் அடைந்து விடுவார், நாக்கில் வறட்சி உண்டாகும், கண்கள் உள்ளே போய் விடும், இரத்த அழுத்தம் குறையும், சிறுநீர் பிரியாது, உடல் குளிர்ந்து போகும், மரணம் எட்டிப் பார்க்கும்! அதற்குள் அந்நபருக்குத் தகுந்த மருத் துவ சிகிச்சை கிடைத்து விட்டால் உயிர் பிழைக்க வாய்ப்பு உண்டு.

அமுதன் : நகரத்தில் வேண்டு மானால் மருத்துவ உதவி உடனே கிடைத்துவிடும். பாவம், கிராமத்தில் வசிப்பவர்களுக்கு அது உடனே கிடைக்க வாய்ப்பில்லையே! அவர்கள் என்ன செய்வார்கள்?


நான் : காலராவால் பாதிக்கப் பட்ட நபர் கிராமத்தில் இருந்தாலும் சரி, நகரத்தில் இருந்தாலும் சரி, அவருக்கு மருத்துவர் உதவி கிடைக் கும் வரை நான் சொல்லும் முதலுதவி யினைத் தாராளமாகச் செய்யலாம்.

அந்த நபருக்கு குளுகோஸ் பவுடர் கரைத்த தண்ணீரையும், எலுமிச்சைப் பழச்சாறு, பார்லிக்கஞ்சித் தண்ணீர், இளநீர் போன்ற நீராகாரங்களையும் அடிக்கடி கொடுக்க வேண்டும். மேற் சொன்னவை எவையும் கிடைக்க வில்லையா? கவலை வேண்டாம்.

200 மி.லி. கொதித்து ஆறவைத்த தண்ணீரில் ஒரு சிட்டிகைச் சமையல் உப்பையும் ஒரு தேக்கரண்டி சர்க்கரை யையும் கலந்து காலராவால் பாதிக் கப்பட்டவருக்கு அடிக்கடி கொடுக்க வேண்டும். அதே சமயம் அவருக்கு மருத்துவ உதவி கிடைப்பதற்கும் வழி செய்ய வேண்டும்.

அனிதா : மருத்துவர்களாகிய நீங்கள் காலரா வந்தவர்களுக்கு என்ன மாதிரியான சிகிச்சைகளைச் செய் வீர்கள்?

நான் : எங்களிடம் வருகிற வரின் நோய் அறிகுறிகளை வைத்து அது காலராதானா என்று முதலில் ஆராய்வோம். இதனிடையில் நோயாளிக்கு சோடியம், பொட்டா சியம் போன்ற தனிமங்கள் நிறைந்த குளுக்கோஸ் தண்ணீரைச்—சிரை மூலம்



செலுத்துவோம். காலராவால் அவர் இழந்த நீர்ச்சத்து எவ்வளவு எனக் கணக்கிட்டு, அந்த இழப்பு ஈடு செய்யும் வரைக்கும், நோயாளிக்குக் குளுக்கோஸ் தண்ணீரைச் சிரை மூலம் செலுத்துவோம். அதே சமயம் இரத்த அழுத்தம் குறையாமல் இருக்கவும் உடல் உஷ்ணம் சரியாக இருக்கவும் மருந்துகளைக் கொடுப்போம்.

அமுதன் : எனக்கொரு சந்தேகம், மாமா...... போன மாதம் நான் வயிற்றுப் போக்குக் காரணமாக உங்களிடம் சிகிச்சை பெற்றேனே.... அது காலரா இல்லையா?

நான்: இல்லை. கேள். சாதாரண வயிற்றுப்போக்கு காய்ச்சலுடனும், வயிற்று வலியுடனும் வரும். இது ஆரம்பத்தில் லேசாகவும் போகப் போக தீவிரமாகவும் இருக்கும். ஆனால் காலரா அப்படியில்லை. காலராவில் காய்ச்சல் வருவதில்லை; வயிற்று வலி இருப்பதில்லை. எடுத்த எடுப்பிலேயே மிக அதிக அளவிலான வயிற்றுப் போக்கும் கட்டுப்படாத வாந்தியும் வரும். இதைக் கொண்டு இரண்டையும் வேறுபடுத்தி விடலாம்!

அமுதன் : அது சரி மாமா.... காலராவைத் தடுக்க இயலுமா?

நான்: ஆறு மாதத்திற்கு ஒருமுறை காலரா தடுப்பு ஊசியைப் போட்டுக் கொள்ள வேண்டும். அது இயலாது என நினைப்பவர்கள், குறைந்தது காலரா பரவும் சமயங்களிலாவது அத்தடுப்பு ஊசியைப் போட்டுக் கொள்ள வேண்டும். வெள்ளம் வரும் போது காலரா அதிகமாகப் பரவும்.

அதுமட்டுமில்லாமல் சுய சுத்தம், சுய சுகாதாரம் இவை இரண்டையும் அனைவரும் கடைப்பிடித்தால்தான் காலராவை முழுமையாக ஒழிக்க முடியும்.

அதற்கும் சில வழிகள் உள்ளன. காலராக் கிருமிகள் வாய் வழியாக உடம்புக்குள் நுழைவதால், நாம் சாப்பிடும் உணவு சூடாகவும், பருகும் நீர் கொதிக்க வைத்த நீராகவும் இருக்க வேண்டியது அவசியம்.

உண்ணும் உணவின் மேல் ஈக்கள் மொய்க்காதவாறு பாதுகாக்க வேண்டும். பழங்களையும், காய்கறிகளையும் நன்கு கழுவிச் சுத்தம் செய்த பின்பே சாப்பிட வேண்டும்.

குளத்து நீரை அப்படியே குடி நீராகப் பயன்படுத்தக் கூடாது. கொதிக்க வைத்து, ஆற வைத்து, வடிகட்டிப் பயன்படுத்த வேண்டும். சிறுவர்களாகிய நீங்கள் தெருக்களில் விற்கும் ஈக்கள் மொய்க்கும் தின்பண்டங்களை வாங்கி உபயோகிக்கக் கூடாது. தெருக்களில் அசுத்தமான இடங்களில் உட்காரவோ, விளையாடவோ, மலம் கழிக்கவோ கூடாது.

மலம் கழிக்கக் கழிப்பறைகளை உபயோகிக்க வேண்டும். பொது இடங்களில் மலம் கழிக்கக் கூடாது.

காலரா நோயாளிகள் உபயோகித்த உடைகளையோ, உண்கலங்களையோ மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது. இது போன்ற சுகாதார முறைகளை நாம் அனைவருமே கடைப்பிடித்தால் காலராவை நிச்சயம் வர விடாமல் தடுக்கலாம். அதில் சந்தேகமில்லை!

அனிதா, அமுதன் (இருவரும்) : மிக்க நன்றி, மாமா! காலரா என்றால் என்னவென்றே தெரியாமல் வந்தோம். அதை எங்களுக்குத் தெளிவு படுத்தியதோடு மட்டுமல்லாமல், அதைத் தடுக்கவும் வழி சொன்ன உங்களுக்கு மீண்டும் நன்றி.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—

கி. பி. 2001-ன் வகுப்பறைக்கு

உங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள்!

வேகமும் சக்தியும் மிக்க நாளைய தொழில் நுட்பத்தை இன்றே சாதியுங்கள்!



தகுதியான வருங்காலத்தைக் கண்டு பிடியுங்கள்! வாங்குங்கள்

சிப்-சாப்

நீங்களே செய்யும் எலெக்ட்ரானிக் கிட்!

ஒரே 'சிப்' மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட பரிசோதனைகள்!

''சிப்-சாப்'' நீங்களே செய்யும் எஜுகேஷனல் கிட் நூற்றுக்கும் மேற்பட்ட பகட்டான பரிசோதனைகள் கொண்டது. வித்தையை விளையாட்டாய் கற்பிக்கவென்றே திட்டமிடப்பட்டது!

உங்கள் குழந்தை நாளைய உலகில் வெற்றியடைய வழிசெய்யுங்கள்!

எலெக்ட்ரானிக் யுகத்தின் சவால்களை சமாளிக்கத் தகுதியான சாதனம் ''சிப்-சாப்''!

அம்சங்கள்: பாட்டரியால் இயங்கக் கூடியது - பாதுகாப்பானது • எளிதில் எடுத்துச் செல்லக் கூடியது • ஸால்டரிங் இல்லை – கனெக்ஷனுக்கு ''பேட்டென்டுடன்'' கூடிய விசை • கையாள எளிது.

பரிசோதனைகள்: • மியூஸிகல் ஆர்கன்* ஷூட்டிங் விளையாட்டு • ஃபயர் அலார்ம்* ஒயர்லெஸ் பீப்பர் * ஸிக்னல் டிரான்ஸ்மிட்டர்* லைட் ஆபரேடட் அலார்ம் இன்னும் பலப் பல.

ரூ. 350/- மட்டும் - வரிகள், அனுப்பும் செலவு தனி.

''எலக்ட்ரானிக்ஸ் எல்லோருக்கும்''

எஜுடெக்

187, முதல் மாடி, வீரபிள்ளை தெரு,
பெங்களூர் — 560 001, இந்தியா.
போன்: 578801.

எனக்குத் தேவை ''சிப்-சாப்'', கிட் ஒன்றுக்கு ரூ. 400/- வரியும், அனுப்பும் செலவும் சேர்த்து. தயவு செய்து ....கிட்/கிட்கள் அனுப்பவும். இத்துடன் 'கிராஸ்' செய்யப்பட்ட டி.டி./போஸ்டல் ஆர்டர் (ஒரு கிட் ரூ. 50/- என்ற கணக்கில்) முன்பணமாக அனுப்புகிறேன். மீதித்தொகையை வி.பி.பி. வந்து சேர்ந்தவுடன் அனுப்புவதாக உறுதியளிக்கிறேன்.

பெயர் ....

விலாசம் ....

பள்ளி ☐ கல்லூரி ☐

REGISTERED NO. TN MS (5) 281
Registered as a Newspaper in Srilanka

